# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 306 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 11, செவ்வாய்க்கிழமை 27.09.2016



மஹஜன சம்பத

இன்றைய சுப்பர் பரிசுத் தொகை

ரூ.44,539,359/-

www.nlb.lk

தேசிய லொத்தர் சபை


# 10 ஆண்டுகளின் பின் உணர்வுபூர்வ அஞ்சலி



தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 29ஆவது நினைவு நாளாகிய நேற்று நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபியில் மக்களால் உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது. நேற்றுப் பின்னிரவு வரை பெருமளவான மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் அஞ்சலி செலுத்தினர். (வ-105) (விரிவான செய்திகள் பக்கம் 2-3)

# விக்கியை உடனே கைது செய்

### மகிந்த அணி காட்டுக் கூச்சல்

கொழும்பு, செப். 27

நாட்டில் வெளிப்படையாக இனவாதத்தைத் தூண்டும் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைக் கைது செய்ய வேண்டும். மாகாண சபையின் அதிகாரிகள், அரச வாகனங்கள் என்று அரச வளங்களைப் பயன்படுத்தி ஊர்வலத்தை முதலமைச்சர் மேற்கொண்டார். அப்படியானால், அரச வளங்கள் பயன்பாடு தொடர்பில் நல்ல வழக்கொன்று அரசுக்குக் கிடைத்துள்ளது. >> 23ஆம் பக்கம்

## விக்கியின் தேவை தெற்கில் இனவாதத்தைத் தூண்டுவதே

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 27

வடக்கு முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் தலைமையிலானோருக்கு தற்போது தேவையானது கூட்டாட்சித் தீர்வல்ல. அதற்கு மாறாக தெற்கில் இனவாதத்தைத் தூண்டுவதே அவசியமாக உள்ளது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி குற்றம் சுமத்தினார். >> 23ஆம் பக்கம்

## தெற்கிலுள்ள கோவில்களுக்கு முதல்வர் விக்கியின் பதில் என்ன?

### பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கேள்வி

கொழும்பு, செப். 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மக்களின் பிரச்சினைகளை பேச்சுக்கள் மூலம் தீர்த்துக் கொள்ள முன்வந்துள்ள நிலையில், முதலமைச்சர் விக்னேஸ்வரன் தன்னை எடுப்பித்து காண்பித்து கொள்வதற்காக மக்களைக் கூட்டி பல்வேறு நிகழ்வுகளை நடத்துகின்றார்.

இவ்வாறு பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப் >> 23ஆம் பக்கம்

## இனவாதம் இனவாதமே

### பிரதி அமைச்சர் பரணவிதாரன கூறுகிறார்

கொழும்பு, செப். 27

அரசினால் முன்னெடுக்கப் படுகின்ற நல்லிணக்க முயற்சிகளுக்கு தடை ஏற்படுத்தவே ஊர்வலங்கள் நடத்தப் படுகின்றன. அவற்றை வடக்கில் செய்தாலும், தெற்கில் செய்தாலும் இனவாதம் >> 23ஆம் பக்கம்

## வடக்கு – கிழக்கு இணைய எந்தவொரு முஸ்லிமும் ஆதரிக்கமாட்டான்

### முல்லைத்தீவில் அமைச்சர் ரிசாத் சூளுரை

முல்லைத்தீவு, செப். 27

வடக்கையும் கிழக்கையும் இணைத்தால், ஒரு சாதாரண உறுப்பினர் பதவியையோ அல்லது எதிர்க்கட்சித் தலைவர் பதவியையோ மட்டுமே முஸ்லிம் தலைவர்களால் வகிக்க முடியும். எனவேதான் கிழக்கிலிருக்கின்ற எந்தவொரு முஸ்லிமும் வடக்கு கிழக்கு இணைப்புக்கு ஆதரவை வழங்க மாட்டான் என்பதனை இந்த முல்லைத்தீவு மண்ணிலே நின்றுகொண்டு உறுதிபடத் தெரிவிக்கின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார் வணிக கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன்.

தமிழரசுக் கட்சியும், அது சார்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமே வடக்குகிழக்கை இணைக்கவேண்டும் என்று >> 23ஆம் பக்கம்

## கொலை வழக்கு

# அதிகாரி உட்பட 5 படையினருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 27

வாதரவத்தையைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களைக் கடத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முன்னிலையாகிய படை அதிகாரி உட்பட 5 இராணுவத்தினரை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்கரன் நேற்று உத்தரவிட்டார்.

அத்துடன், இந்தக் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஏனைய 5 இராணுவத்தினரையும் கைதுசெய்து மன்றில் முற்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

1997ஆம் ஆண்டு நவம்பர் மாத காலப்பகுதியில் புத்தூர், வாதரவத்தை பகுதியில் வைத்து சௌந்தரராஜன் மற்றும் ஜெயசீலன் ஆகிய இரண்டு இளைஞர்கள் இராணுவத்தால் >> 23ஆம் பக்கம்

# 6 ஆவது நாள்

### சோர்வடைந்த நிலையிலும் அரசியல் கைதிகளின் போராட்டம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், செப். 27

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 6 ஆவது நாளாகவும் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். உணவுஒறுப்புப்போராட்டத்தை கைவிடுமாறு வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் விடுத்த கோரிக்கையையும் அவர்கள் நிராகரித்து தமது போராட்டத்தைத் தொடர்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரம் >> 24ஆம் பக்கம்

## 3 வெவ்வேறு விபத்துக்களில் பெண் உட்பட மூவர் சாவு

வவுனியா, செப். 27

வவுனியா, அம்பாறை, பூண்டுலோயா பகுதிகளில் நேற்றுக் காலை இடம்பெற்ற வெவ்வேறு வாகன விபத்துச் சம்பவங்களில் பெண் உட்பட மூவர் சாவடைந்ததுடன் இருவர் படுகாயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவிலிருந்து சின்னத் தம்பனை நோக்கி நேற்றுக் காலை பயணித்த >> 23ஆம் பக்கம்

## ரூ. 1 கோடியே 92 லட்சம் நல்லூரில் வருமானம்

யாழ்ப்பாணம், செப்.27

நல்லூர் கந்தசுவாமி ஆலய நடந்து முடிந்த வருடாந்தப் பெருந் திருவிழாவின் போது யாழ்ப்பாண மாநகர சபைக்கு ஒரு கோடியே 92 லட்சத்து 70 ஆயிரம் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளதாக மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்தார்.

தற்காலிக கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலை >> 24ஆம் பக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# தியாக தீபம் திலீபனுக்கு நேற்று உணர்வெழுச்சியுடன் அஞ்சலி


யாழ். பல்கலைக்கழகத்தில்


நினைவிடத்தில் பொதுமகன் அஞ்சலி


நல்லூரில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அஞ்சலி


நினைவுத் தூபியில் திருவுருவப்படம்


நல்லூரில் சிறுமியின் மலரஞ்சலி


யாழ். பல்கலைக்கழகத்தில்


யாழ். பல்கலைக்கழகத்தில்


யாழ். பல்கலைக்கழகத்தில்


நல்லூரில் பாலகன் அஞ்சலி

பாரத தேசத்துக்கு - இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு எதிராகப் பட்டினிப் போராட்டத்தை நடத்தி வீரச்சாவடைந்த தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 29ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு நேற்று தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது.

10 ஆண்டுகளின் பின்னர் தியாகி திலீபன் போராட்டம் நடத்திய இடமான நல்லூரில் பெருமளவு மக்களினால் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதேவேளை, தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் தேசமெங்கும் திலீபனை நினைவுகூர்ந்து பேரெழுச்சி நிகழ்வுகள் நடைபெற்றன.

இராசையா பார்த்தீபன் என்ற இயற்பெயர் கொண்ட திலீபன் பாரதப் படைகளுக்கு எதிரான பட்டினிப் போராட்டத்தை 1987ஆம் ஆண்டு நடத்தினார். செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பமான உணவு ஒறுப்புப் போராட்டம், 12 நாட்களின் பின்னர் செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி திலீபனின் வீரச்சாவுடன் முடிவுக்கு வந்தது.

தமிழின விடுதலைப் போராட்டத்தில் மகத்தான சரித்திரம் படைத்த தியாக தீபம் திலீபனின் நினைவு தினம் ஒவ்வொரு வருடமும் தமிழர்கள் வாழும் தேசம் எங்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

எனினும், 2009ஆம் ஆண்டு போர் நிறைவுக்கு வரப்பட்டதாக அரசு அறிவித்த காலத்திலிருந்து கடந்த 2015 ஆம் ஆண்டுவரை திலீபனின் நினைவுநாள் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் பகிரங்கமாக நினைவுகூரப்படவில்லை.

இறுதிப் போருக்குப் பின்னர் இந்த வருடமே தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் திலீபனின் 29ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் பகிரங்கமாக நடைபெற்றன. திலீபன் உணவு ஒறுப்புப் போராட்டம் மேற்கொண்ட நல்லூர் வீதியிலும், திலீபனின் நினைவுத்தூபி அமைந்திருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பின் வீதியிலும் நேற்றுக் காலை அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

திலீபனின் நினைவுத்தூபியில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட தாயாரொருவர் கண்ணீர் விட்டுக் கதறிய காட்சி அங்கு நின்ற அனைவரையும் உருகவைத்தது.

நேற்றுக் காலை முதல் முன்னிரவு வரை நல்லூரில் திலீபனின் நினைவிடத்தில் வீதியால் செல்பவர்கள் பலரும் அவ்விடத்தில் இறங்கி நின்று வீரவணக்கம் செலுத்திவிட்டுச் சென்றனர்.

இதேவேளை, தியாக தீபம் திலீபனின் 29ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று யாழ். பல்கலைக்கழக முன்றிலிலும் நடைபெற்றது.

நேற்றுக் காலை திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளும், விரிவுரையாளர்களும் இணைந்து மாலை அணிவித்து, ஈகச் சுடரேற்றி நினைவுதின நிகழ்வை ஆரம்பித்தனர். இதன்போது, யாழ். பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் மெழுகுவர்த்தி ஏற்றி தமது உணர்வுபூர்வ அஞ்சலிகளைச் செலுத்தினர்.

இதேபோன்று வடக்கு, கிழக்கின் பல இடங்களிலும் திலீபனின் நினைவுதின நிகழ்வுகள் பகிரங்கமாக நடைபெற்றன. அதேவேளை, தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் தேசமெங்கும் திலீபனை நினைவுகூர்ந்து பேரெழுச்சி நிகழ்வுகள் நடைபெற்றன. (வ)

# இந்தியாவை நம்பியதால் ஏமாற்றப்பட்டுள்ளோம்

## தியாக தீபத்தின் நினைவு நிகழ்வில் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 27

இந்தியா உதவி செய்யும் என்று இப்போது கூட நாம் கூறவில்லை. இந்தியாவை நம்பியதனால் 35 ஆண்டுகளாக நாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டு இருக்கின்றோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

தியாக தீபம் திலீபனின் 29ஆவது நினைவு நிகழ்வு நேற்றைய தினம் நல்லூரில் திலீபனின் நினைவுத்தூபி அமைந்திருந்த இடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:

இந்தியா உதவி செய்யும் என இப்போது கூட நாம் கூறவில்லை. இந்தியாவை 35 ஆண்டுகளாக நம்பிக்கொண்டுதான் இருக்கின்றோம். ஆனால் ஏமாற்றப்பட்டுக் கொண்டும் இருக்கின்றோம்.. இதற்காக இந்த இடத்தில் நாம் முழு இந்தியாவையுமே குற்றம் சொல்லியாகவேண்டும்.

அன்று ஜனநாயகப் போராட்டம் மழுங்கடிக்கப்பட்டது. திலீபனின் உணவு தவிர்ப்பு போராட்டம் இடம்பெறும்வேளையில் 3ஆம், 4ஆம் நாள்களே டிக்சிற்றின் முகம் தெரிந்துவிட்டது. ஏனெனில் டிக்சிற் எவற்றுக்குமே தலை சாய்க்கமாட்டார். இலங்கை அரசுடன் இணைந்தே செயற்படுகின்றார் எனப் புரிந்து விட்டது.

இந்தியாவினால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்ட வடிவம் அவர்களாலேயே மழுங்கடிக்கப்பட்டது. உணவு தவிர்ப்பு போராட்டம் இடம்பெற்ற போதே பலராலும் கோரப்பட்டது. உங்கள் காந்தி வழியில் உள்ள இவனின் நிலைக்குப் பதில் கூறுங்கள் என பல தடவை கேட்கப்பட்டபோதும், கடைசி நிமிடம்வரையில் இந்தியா தவிக்க விட்டது. அதன் காரணத்திற்காகவே முழு இந்தியாவையும் நாம் குற்றம் சுமத்துகின்றோம்.

இந்த இடத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியினைக்கூட இலங்கை இராணுவம் உடைத்தது. ஆனாலும் அஞ்சலி செலுத்த இன்று சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. பெரும்பான்மை இனம் இன்றும் தமிழர்களை விரோதிகளாகவே பார்க்கின்றனர். நாமே நல்லிணக்கத்துக்கான செயற்பாட்டை காண்பிக்கின்றோம். அவர்களோ ஒன்றையுமே முழுமையாக நிறைவேற்றவில்லை - என்றார். (வ-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தலைவர் பிரபாகரன் காட்டிய பாதையில்

# போராட்டத்தின் வடிவம் மாறினாலும் இலட்சியம் மாறாது பயணிக்கின்றோம்

## தியாக தீபத்தின் நினைவு நாள் நிகழ்வில் வடமாகாண அவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 27

தலைவர் பிரபாகரன் சொன்ன வழிதான், "போராட்ட வடிவங்களை மாற்றலாம் ஆனால் போராட்ட இலட்சியம் மாறக்கூடாது" என்பது. அதன் வழியிலேயே நாம் இன்று பாதைகளை மாற்றி காலத்திற்கேற்ப பயணிக்கின்றோம்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் பேரவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

தியாக தீபம் திலீபனின் 29 ஆவது நினைவு நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத்தூபியில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தலைவர் பிரபாகரன் சொன்ன ஒரு வழிதான் போராட்ட வடிவங்களை மாற்றலாம்.'ஆனால் போராட்ட இலட்சியம் மாறக்கூடாது. இதன் வழியிலேயே நாம் இன்று பாதைகளை மாற்றி காலத்திற்கேற்ப பயணிக்கின்றோம். தியாகி திலீபன் ஆயுதப் போராட்ட காலத்திலேயே அகிம்சையைக் காட்டியவன். இந்த அகிம்சைப் போராளிக்கு 1988-09-28 அன்று முதல் தூபியைக் கட்டியவன் நான். அந்த தூபி இராணுவத்தினரால் அழிக்கப்பட்டது. அதன் பிற்பாடு 2002 ஆம் ஆண்டில் இரண்டாவது தடவை தூபி அமைத்தேன் அதுவும் அழிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு முதல் தூபி கட்டப்பட்ட 5 ஆம் நாளே சுடப்பட்டேன். இவ்வாறான ஓர் ஜனநாயக வழி வந்த தியாகச் செம்மல அகிம்சை வழியிலும் போராட முடியும் என வழிகாட்டியவனுக்கு மீண்டும் நினைவுத்தூபி அமைக்க இதுவே தருணமும், இதுவே சரியான இடமும் ஆகும். இந்த இடத்தில் அமைக்கப்பட்ட அகல் விளக்கு நினைவில் உள்ளது என்றார் வடமாகாண சபையின் பேரவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

'அகிம்சையில் உலகுக்கே உச்சமாக இருந்தவன் எங்கள் திலீபன். இன்றைய தேசிய , பன்னாட்டு சூழலுக்கேற்ப அன்றே வழிகாட்டினான் திலீபன். உலகுக்கே உச்சமான இந்த வீரனின் வழிதான் எமது உரிமைப் போராட்ட வடிவம். நாம் எமது இலட்சியத்தை அடைய திலீபனும் ஏனைய ஆயிரம் ஆயிரம் மாவீரர்களும் எமக்கு துணை புரிவார்கள்" என்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் அருந்தவபாலன்.

"போரின் பின்னர் தியாகி திலீபனின் நினைவு தினம் இன்றுதான் (நேற்று) உணர்வுபூர்வமாக கொண்டாடப்படுகின்றது. திலீபனின் உணவு ஒறுப்புப் போராட்டம் தமிழ் மக்களின் உணவுக்காகவும் தமிழ் மக்களின் உச்சபட்ச ஜனநாயக ரீதியில் எடுத்துக்காட்டக்கூடிய போராட்டமாக இருந்துள்ளது.

தியாகி திலீபனின் நினைவு தினத்தைக் கொண்டாடுவதை தெற்கில் உள்ளவர்கள் இனவாதமாக பார்க்காமல் தமிழ் மக்கள் தமது விடுதலைக்காக இவ்வாறான தியாகங்களைச் செய்துள்ளார்கள். அதனை அறிந்து எமது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு முன்னிற்க வேண்டும்.

தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர் எமது தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், அவரது வழிநடத்தலில் உருவானவர் எமது தலைவர் இரா.சம்பந்தன். தமிழ் மக்களின் ஒரே தலைவர் இரா.சம்பந்தன் மட்டுமே. தமிழ் மக்களின் தலைவராக இருக்கின்ற சம்பந்தனின் கைகளைப் பலப்படுத்த வேண்டிய தேவை எம் எல்லோருக்கும் இருக்கின்றது" என்றார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன்.

உலகில் அகிம்சை வழியில் உயிர் நீத்த மகிமை தியாகி திலீபனுக்கும் தமிழ் இனத்திற்கும் உள்ளதென வயோதிப தாயார் மார் தட்டி பாராட்டி அஞ்சலி செலுத்தினார். (வ-4,101,106)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 555
சீட்டிழுப்பு திகதி 2016.09.26
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
19 20 47 51 H
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.52,520,200/=
வெல்லப்படவில்லை

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 29
சீட்டிழுப்பு திகதி 2016.09.26
வெற்றி இலக்கங்கள்
15 19 28
47
8,626,900/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1300
சீட்டிழுப்பு திகதி 2016.09.26
வெற்றி இலக்கங்கள்
06 14 28 30 H
ரூ. 25,355,860/=

## அறிவித்தல்

2016, ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி சீட்டிழுக்கப்படும் அதிர்ஷ்டத்தின் செல்வம் / வாசனா சம்பத லொத்தர் சீட்டின் பரிசுக்கட்டமைப்பில் 6ஆம் பரிசு - **"ஆங்கில எழுத்து மட்டும் பொருந்துமாயின்"** என பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு வருந்துகிறோம்.

6ஆம் பரிசு - **"இலக்கினம் மட்டும் பொருந்துமாயின்"** என்பதே சரியான பரிசுக்கட்டமைப்பாகும். அத்துடன் சிங்கள மொழியில் இது சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதனையும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

# தியாக தீபம் திலீபனுக்கு நேற்று மன்னாரில் அஞ்சலி நிகழ்வுகள்

மன்னார், செப். 27

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்காக 1987ஆம் ஆண்டு அகிம்சை வழியில் போராடித் தன்னுயிரை ஆகுதியாக்கிய தியாகி திலீபனின் தோடு தியாகி திலீ பனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.



இந்த நிகழ்வில் அருட்தந்தை ஜெகதாஸ்,மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ்,மன்னார் சமாதாக அமைப்பின் தலைவர் அந்தோனி மார்க், சமூக சேவையாளர் சிந்தாத்துரை, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்,சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலிசெலுத்தினர். வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் நேற்று திங்கட்கிழமை மாலை 6.15 மணியளவில் தனது குடும்பத்துடன் நினைவு கூர்ந்தார்.

29ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் மன் னாரில் இரு இடங்களில் இடம் பெற்றன.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஒரு இடத்திலும் வடக்கு மாகாண சபை உறுப்பினரின் இல்லத்திலும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம் பெற்ற நினைவு நிகழ்வின்போது சுடர் ஏற்றி, இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்ட

தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம் பெற்ற அஞ்சலி நிகழ்வின் போது, தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு தீபம் ஏற்றி, மலர் தூவி தனது குடும்பத்தினருடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் அஞ்சலி செலுத்தினார். (வ-4 [illegible])

பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று 27.09.2016 நடைபெறும் பேராதனைப்பல்கலைகழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B.A.) பட்டம் பெறும்

செல்வி நர்மிதா யோகேஸ்வரன்

அவர்களை மேலும் பல பட்டங்களை பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்.

இலுப்பையடி வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

சிவராசா சிவநிரோசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு அவசியமான வீதிகளை கேட்டறிந்து அபிவிருத்தி செய்யுங்கள்

## முல்லை. பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் பொதுமக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, செப். 27

மக்கள் போக்குவரத்துக்கு எந்தெந்த வீதிகள் முக்கியத்துமானதாக உள்ளனவோ அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து, மக்களுடைய கருத்துக்களை கேட்டு வீதிகளைச் சீரமைக்க வேண்டும். இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இணைத்தலைவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வீதி அபிவிருத்தி தொடர்பான ஆராய்வுகளின் போதே மக்கள் இவ்வாறு தெரிவித்தனர்.



இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்திகள் மக்களின் கருத்துக்களைக் கேட்காது செய்யப்பட்டன. அதனால் எந்த வித நன்மைகளும் கிடைக்கவில்லை. நிதி செலவானதுடன், திருத்தப்பட்ட வீதிகளும் சேதத்துக்குள்ளாகியுள்ளன. எமது பிரதேசத்தில் விவசாய நிலங்களுக்குச் சென்றுவரும் வீதி சுமார் 60 கிலோ மீற்றர்களாகவும், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆளுகையில் சுமார் 120 கிலோ மீற்றர்களாவும், பிரதேச சபைக்குரிய வீதிகள் சுமார் 110 கிலோ மீற்றர்களாகவும், உள்ளூராட்சித்திணைக்களத்துக்குரிய வீதிகளாக 85 கிலோமீற்றர் வீதிகளும் காணப்படுகின்றன.

பிரதேச வாழ் மக்கள் தங்கள் அன்றாடத் தேவைக்காக அதிகமாகப் பயன்படுத்தும் பிரதான வீதியான வவுனிக்குளம், கொல்லவிளாங்குளம் ஆகிய மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கான வீதிகள் திருத்தப்படவில்லை. அவை எமது பிரதேச வாழ் மக்களுக்கு மிக அவசியமான வீதிகள். எமது விவசாயக் காணிகளுக்குச் செல்லும் வீதிகள் மிகவும் சேதமுற்று உள்ளமையால் வயல் நிலங்களுக்குச் சென்றுவரும் போதும், அறுவடைப் பொருள்களை வெளியில் கொண்டு வருவதற்கும் மிகவும் சிரமப்படுகின்றோம். அறுவடைப் பொருள்களை பல கிலோமீற்றர் தூரம் தலையில் சுமந்தே செல்ல வேண்டியுள்ளது. வீதிகள் சீரின்மையால் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களும் வருவதில்லை. பாடசாலை மாணவர்கள் சிரமத்தினை எதிர் கொள்கின்றனர். இதுவரை காலமும் அபி விருத்திகளின் போது முக் கியத்துவம் இல்லாத வீதிகளே திருத்தப்பட்டுள்ளன. எமது கருத்துக்களைக் கேட்டு வீதிகளின் திருத்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.- என்று அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பான அதிகாரிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்த இணைத்தலைவர்கள்- எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திகளில் மக்களைக் கேட்டு அவர்களுக்கு எந்த வீதி மிக முக்கியமானது என குறிப்பிடுகிறார்களோ அந்த வீதியை திருத்துங்கள். பிரதேச செயலாளர் மற் றும் அதிகாரிகள், சமூக மட்ட அமைப்புப் பிரதிநிதிகள் அனைவரும் சேர்ந்து முதலாவது கட்டம், இரண்டாவது கட்டம், மூன்றாவது கட்டம் எனத் தீர்மானித்து அந்த ஒழுங்கில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது அவசியமாகவுள்ளது.-என்றனர். (ந-21)

---

## டெங்கு பரவும் சூழல்; ரூ.3,000 தண்டம்

யாழ்ப்பாணம், செப். 27

கட்டுவன் பகுதியில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகையில் சுற்றுச்சூழலை வைத்திருந்த இருவீட்டு உரிமையாளர்களுக்கு தலா 3ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது மல்லாகம் நீதிமன்று. வீட்டு உரிமையாளர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர்.

தெல்லிப்பழை பொலிஸார் வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தனர். வீட்டு உரிமையாளர்கள் தங்கள் குற்றங்களை ஏற்றுக் கொண்டு தண்டம் செலுத்தினர். (ந-107)

---

## பாடசாலை மாணவரின் பஸ் கட்டணத்தை உயர்த்த முடிவு

கொழும்பு, செப். 27

பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துக் கட்டணத்தை குறைந்தபட்சம் 5 தொடக்கம் 10 வீதத்தால் அதிகரிப்பதற்கு மாவட்ட பாடசாலை போக்குவரத்து சேவைகள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட பாடசாலை போக்குவரத்துச் சேவைகள் சங்கத்தின் உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அந்த சங்கத்தின் தலைவர் என்.எம்.கே.ஹரிஸ்சந்திர பத்மசிறி தெரிவித்தார்.

கடந்த நான்கு வருடங்களாகப் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக் கட்டணத் திருத்தங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் மற் றும் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு பலத்த பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.

எனினும் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக் கட்டணங்களில் மாற்றங்களை ஏற்படுத்தத் தயாரில்லை என அகில இலங்கை பாடசாலை போக்குவரத்துச் சேவைச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ந-4)

---

# இலங்கையின் மறுசீரமைப்புக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவும்

## *அமெரிக்க தூதுவர் அத்துல் கேசாப் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 27

இலங்கையின் ஜனநாயக மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவிகளைச் செய்யும் என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அத்துல் கேசாப் தெரிவித்தார்.

அமெரிக்க யுஎஸ்எய்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் கிங்கஸ்பரி ஹோட்டலில் நேற்று ஆரம்பமான அரச- தனியார் ஒத்துழைப்புத் தொடர்பாக ஆராயும் தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது-

அரச- தனியார் ஒத்துழைப்பு மாதிரியை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை மக்களுக்கும் அரசுக்கும் உதவுவது குறித்து அமெரிக்க அரசு மகிழ்ச்சிகொண்டுள்ளது.

60 வருடங்களாக நாங்கள் செயற்பட்டுள்ளமை போன்று இலங்கை மக்களின் வாழ்க்கையில் எதிர்காலத்துக்கு உதவுவதற்கு மனிதாபிமான அபிவிருத்தியை நாங்கள் தொடர்ந்தும் வழங்குவோம். இன்றுவரை அமெரிக்க அரசு 2 பில்லியன் டொலரை பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழங்கியுள்ளது. விவசாயம், கல்வி, சுகாதாரம், வர்த்தகம், நல்லாட்சி, மனிதாபிமான உதவி ஆகிய பல துறைகளுக்கு அவை வழங்கப்பட்டுள்ளன.

தற்போது அரச- தனியார் ஒத்துழைப்புச் செயற்பாடு குறித்துப் பேசப்படுகின்றது. யுஎஸ்எய்ட் மற்றும் நிதியமைச்சின் பொதுநிதிப்பிரிவு ஆகியவற்றின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் இந்தத் தேசிய மாநாடு அரச -தனியார் ஒத்துழைப்பினை சர்வதேச தரத்திற்கு ஏற்ப உருவாக்குவதற்கான தந்திரோபாயங்கள், தொழில்நுட்பங்கள் குறித்து ஆராய்வதற்கான வாய்ப்பை அரச அதிகாரிகளுக்கு வழங்குகின்றது. இதனுடன் வெளிப்படைதன்மை, பொதுநிதி முகாமைத்துவம், பொதுமக்கள் பங்களிப்பு, தகவல் பெறுதல் ஆகியன தொடர்புபட்டுள்ளன- என்றார். (ந-4)

---

## உதயங்கவுக்கு பிடியாணை பிறப்பிக்க கோரிக்கை

இலங்கை விமானப்படைக்கு மிக் விமானம் கொள்வனவில் ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க நேரடியாகத் தொடர்புபட்டுள்ளார் என்று தெரிவித்து நிதி மோசடி விசாரணைப் பிரிவு வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

யுக்ரேனில் அவர் வசித்துவரும் வீட்டுக்கு வெளிவிவகார அமைச்சுமூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டபோது அவர் குறித்த வீட்டில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது என்று நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

சர்வதேச பொலிஸார் மூலம் உதயங்க வீரதுங்கவை கைது செய்ய பிடியாணை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தது.

அவருக்குப் பிடியாணை பிறப்பிப்பதா இல்லையா என எதிர்வரும் 30 ஆம் திகதி தீர்மானிக்கப்படும் என்று கொழும்பு கோட்டை நீதிவான் தெரிவித்தார். (ந-4)

---

## அடுத்த வரவு- செலவு திட்டம் 45 நாள்களில் சமர்ப்பிக்கப்படும்

### *நிதியமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 27

அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தை இன்னும் 45 நாள்களில் அரசு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச, தனியார் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதியும், பிரதமரும் எனக்கு அறிவுறுத்தல் வழங்கியிருக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க யுசெய்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் கிங்கஸ்பரி ஹோட்டலில் இன்று ஆரம்பமான அரச -தனியார் ஒத்துழைப்புத் தொடர்பாக ஆராயும் தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ந-4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏராளமான ஆயுதங்கள் குரும்பசிட்டியில் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 27
தெல்லிப்பழை குரும்பசிட்டியிலுள்ள வீடு ஒன்றிலிருந்து கடந்த 3 நாள்களாக ஏராளமான வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயிரத்து 600 துப்பாக்கி ரவைகள், 53 ஆர்.பி.ஜி. ஷெல்கள், 106 மில்லி மீற்றர் ஆட்டிலறி ரக ஷெல்கள் இரண்டு, 40 மில்லி மீற்றர் ஷெல்கள் 79, 81 மோட்டார் எறிகணைகள் 7, 60 மில்லி மீற்றர் மோட்டார் பராக்கள் 29, மோட்டார் பரா 7 உள்ளிட்ட பல ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட வெடி பொருள்களை அழிப்பதற்கான நடவடிக்கையில் விசேட அதிரடிப்படையினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட வலிகாமம் குரும்பசிட்டிப் பகுதி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டு அங்கு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர். குறித்த பகுதியிலுள்ள வீட்டை துப்புரவு செய்யும் போதே வீட்டின் கிணற்றிலிருந்து வெடிபொருள்களை வீட்டு



உரிமையாளர்கள் அடையாளம் கண்டனர். அது தொடர்பில் உரிமையாளர் பொலிஸாருக்கு அறிவித்திருந்தனர். அதன் பின்னர் ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ρ-4)

## 320 வீதிகள் காப்பெற்றாக மாற்றப்படும்

தென்மராட்சி, செப்.27
யாழ்.மாவட்டத்தில் 320 வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றப்படவுள்ளன. அதற்கான நிதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஐ திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 20 வீதிகளும் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 12 வீதிகளும் காப் பெற் வீதிகளாக மாற்றப்படவுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபை பிரிவில் நுணாவில் - சரசாலை வீதி, சாவகச்சேரி - டச்சு வீதி, (இரு கட்டங்கள்), எழுதுமட்டு வாழ் - கிளாலி வீதி, மீசாலை - வரணி வீதி, வரணி குடமியன்வீதி, வரணி இயற்றாலை விராலி வீதி, மட்டுவில் அம்மன் கோவில் வீதி (இரு கட்டங்கள்), கச்சாய் -கெற்பேலி ஆனையிறவு வீதி, மட்டுவில் தேவாலய வீதி (2 கட்டங்கள்), மட்டுவில் பிலிப் - அரசடி வீதி (2 கட்டங்கள்), கைதடி கள்ளி நகர் வீதி, கைதடி கிழக்கு அண்ணமார் வீதி, கைதடி மூர்த்தியாவத்தை வீதி, வரணி வைத்தியசாலை - இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வீதி பிச்சைப் பள்ளம் வெள்ளவாய்க்கால் வீதி, கொடிகாமம் மடத்தடி வீதி என்பவையும்-

சாவகச்சேரி நகரசபை பிரிவில் மடத்தடி முதலாம் ஒழுங்கை, கல்வயல் புலுட்டையன் பிள்ளையார் கோவில் வீதி, மீசாலை வயற்கரை வீதி, சங்கத்தானை தாமோதரம்பிள்ளை வீதி , முதலாம் ஒழுங்கை, மீசாலை பாலையடி விநாயகர் வீதி (2 கட்டங்கள்), நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீதி, நுணாவில் மணங்குணாய் பிள்ளையார் கோவில் வீதி, மீசாலை குஞ்சன் துரவு ஒழுங்கை, சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதி, முதலாம் ஒழுங்கை பெருங்குளம் பிள்ளையார் கோவில் வீதி, சாவகச்சேரி கல்வயல் வீதி என்பவையும் காப்பெற் வீதிகளாக மாற்றப்படவுள்ளன. (ρ-9)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், செப். 27
இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையானது வடக்கு மாகாணத்தில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆங்கில கற்கைநெறியை (NVQ மட்டம் 1) கற்பிப் பதற்காக முழுநேர மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் களுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் சுயவிவரக்கோவை, சான்றிதழ்கள், அனுபவச் சான்றிதழ் என்பவற்றின் பிரதிகளை நேரிலோ அல்லது தபாலிலோ எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் உதவிப் பணிப்பாளர், மாவட்ட அலுவலகம், 1ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம் இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ρ)

## அத்தநாயக்கவுக்கு அழைப்பாணை

கொழும்பு, செப்.27
கடந்த 2015ம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் காலத்தின்போது, போலி ஆவணங்களை வெளியிட்டமை உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவை எதிர்வரும் 19ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராகச் சட்டமா அதிபரால் கடந்த 9ஆம் திகதி, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கிலேயே அவருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது. (த)



மட்டக்களப்பு வாகரை மாங்கேணி கடலில் சாளச் சூடை எனப்படும் மீன்கள் அதிகளவு பிடிக்கப்படுகின்றன. அதன் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை அடுத்து நாய், பறவைகளுக்கு வீசவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். தற்போது இதன் விலை கிலோ 20 ரூபாவாகக் காணப்படுகின்றது. கீரி மீன்கள், சீலா மீன்கள், நுகர மீன்கள், சூடை மீன்கள் மற்றும் சாளச் சூடை மீன்கள் அதிகம் பிடிபடுகின்றன. தற்போது கீரி மீனின் விலை ஒரு கிலோ 200 ரூபாவும், நுகர மீன்கள் ஒரு கிலோ 80 ரூபாவும் என விற்பனையாகிறது. இனிவரும் மாதங்களில் கீரி மீனின் விலையிலும் வீழ்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் இதேபோன்று கடந்த வருடம் கீரி மீன் கிலோ 20 ரூபாவுக்கும் விற்பனை செய்துள்ளோம் என்று மீனவர்கள் தெரிவித்தனர். (ρ-4)

## சாவகச்சேரி - தனங்களப்பு வீதியில் உள்ள மதகை சீரமைக்கக் கோரிக்கை

தென்மராட்சி, செப்.27
சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள மதகை மழை காலத்துக்கு முன்னர் சீரமைத்துத்தர வேண்டும் என்று தென்மராட்சி தெற்கு வாழ் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

கடந்த வருடம் பெய்த கடும் மழையின்போது மதகுக்குள் மண் மூடைகள் அடுக்கப்பட்டிருந்ததால் தண்ணீர் கடலேரிக்குள் செல்ல முடி யாமல் வீதிக்கு மேலாக நீர் பாய்ந்தது. அதையடுத்து வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மதகுக்கு அருகில் தற்காலிகமாக பள்ளம் வெட்டப்பட்டு சிமெந்துக் குழாய் வைக்கப்பட்டு வெள்ளநீர் கடலேரிக்குள் செல்ல வழிசெய்யப்பட்டது. அந்தவேளையில் தற்காலிகமாக கற்கள் மணல் போட்டு மூடப்பட்டு பின்னர் தாரிடப்பட்டது. அது வீதியிலிருந்து உயரமாக அமைக்கப்பட்டதால் சிறிய வாகனங்களில் வருவோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இரவு வேளைகளில் இந்த மேட்டில் வீழ்ந்து காயங்களுக்கு உள்ளாகின்றனர்.

மழைகாலம் ஆரம்பிக்க முன்னர் பழைய மதகுக்குள் காணப்படும் மண் மூடைகளை அப்புறப்படுத்தி வெள்ளநீர் வழிந்தோட ஏற்பாடுகள் மேற்கொள்வதுடன் தற்காலிக நடவடிக்கைக்காக அமைக் கப்பட்ட வீதி வேகக் குறைப்பு மேட்டினை அப்புறப்படுத்த வேண்டும்என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி தனங்களப்பு வீதியானது தென்மராட்சி தெற்குப் பிரதேச மக் களுக்கு மட்டுமல்ல கிளி நொச்சி, மன்னாருக்குச் செல்வோரின் பிரதான வீதியாகவும் காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ρ-9)

## சிறுவனை கடத்தி துர்நடத்தை குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 27
14 வயதுடைய பாடசாலை மாணவனை கடத்திச்சென்று பாலியல் துர்நடத்தைக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் ஒருவர் யாழ்ப்பாண பொலிஸாரால் கடந்த புதன் கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறுவன் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து கல்வி கற்று வருகின்றார். கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் தந்தையுடன் கிளிநொச்சியிலிருந்து வந்து தான் தங்கியிருக்கும் இடத்துக்கு செல்வதற்காக யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் காத்திருந்தபோது அவரை யாழ்ப்பாண கடையொன்றில் வேலை செய்யும் மாதகல் பிரதேசத்தை சேர்ந்த நபர் அணுகி மாணவன் இருக்கும் இடத்தில் கொண்டு சென்று விடுவதாக தெரிவித்துள்ளார். தனது மோட்டார் சைக்கிளில் மாணவனை சங்குப்பிட்டி பகுதிக்கு கொண்டு சென்று பாலியல் துர்நடத்தைக்கு உள்ளாக்கியுள்ளார். மறுநாள் பஸ் நிலையப்பகுதியில் மாணவனை இறக்கி விட்டு சென்றுள்ளார்.

இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டு குறித்த நபர் கைது செய்யப்பட்டார். மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த நபர் கடந்த வியாழக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது சந்தேகநகரை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (ρ-103)

காணி விற்பனைக்கு
கொய்யாத்தோட்டம் புதுவீதியில் ஒரு பரப்பு அளவுள்ள காணி உடன் விற்பனைக்கு
077 285 0567

வீடு வாடகைக்கு உண்டு
நிறுவனங்களுக்குப் பொருத்தமான வீடு கிளிநொச்சி நீதிமன்ற ஒழுங்கை என்னும் முகவரியில் வாடகைக்குண்டு.
077 639 9352

காணி விற்பனைக்கு உண்டு
பெரியவிளான் ¼ kmருக்கு அருகில் உள்ள தெல்லிப்பழை வீதியில் மெயின்றோட் அருகில் வற்றாத வெட்டுக் கிணற்றுடன் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் விற்கப்படும்.
தொடர்புகளுக்கு
ம.அருளப்பு- 077 945 9186

வீடு, காணி விற்பனைக்கு உண்டு
யாழ் மாநகரசபை எல்லைக்குள் அரியாலை மத்தி பகுதியில் 03 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. A-9 கண்டி வீதி, அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்திற்கு முன்பாக உள்ள வீதியின் 50m தொலைவில் ஆனைக்கட்டி வீதியில் அனைத்து வசதிகளுடனும் அமைந்துள்ளது.
077 033 3910/ 077 778 2192
021 221 1195/ 021 221 1414

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5,494 வாகனங்களின் பதிவுகளில் மோசடி

## அரச கணக்காய்வுச் சபை தெரிவிப்பு

கொழும்பு, செப் 27
மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 5,494 வாகனங்களில் ஊழல், மோசடி மற்றும் துஷ்பிரயோகங்கள் நடைபெற்றுள்ளமை அரச கணக்காய்வுச் சபையின் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.
இந்த வாகனங்கள் பதிவுசெய்யப்பட்ட விதம் குறித்து விரிவான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளருக்குப் பணிப்புரை வழங்கப்பட்டிருப்பதாக அந்தச் சபை தெரிவித்துள்ளது.
இந்த ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருப்பதுடன்விரிவான விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், இவற்றுள் 597 வாகனங்களுக்கான கோப்புகள் காணாமல் போயுள்ளதாகவும் அரச கணக்காய்வுச் சபை தெரிவித்துள்ளது. (தி)

ஈரவிழிகளுடன் ஆண்டுகள் நான்கு



மண்ணில்
22 . 12 . 1946

விண்ணில்
12 . 10 . 2012

திதி:-
அபரபக்க துவாதசி

தம்பிஜயா யோகராசா

ஆண்டுகள் நான்கு ஆனதுவோ எமதருமை
அப்பாவே உமைப் பிரிந்து ஆண்டுகள் நான்கென்ன எத்தனை
ஆண்டுகள் ஆனாலும் எம் உயிருள்ளவரை
உங்களை நினைத்து வாழ்வோம் அப்பா
காலனவன் உங்களைச் சடுதியிலே கவர்ந்ததனால் கரையேதும் காணாமல்
கலங்கியே நிற்கின்றோம் இன்றுவரைநாம்

25/10, செம்மணி ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(சே-4912)(11.17)
உங்கள் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
பத்மாவதி
வேதநாயகம்



பிறப்பு
20.10.1939

இறப்பு
28.08.2016

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

நாள்கள் 31 சென்றிடினும் மறைந்திடுமா உம் நினைவு
பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம் உன் புன்சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன் உன் ஆன்மா
அமைதியடைய இறைவனை வேண்டுகின்றோம்!

விதானையார் லேன்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
(சே-4903)(11.17)
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

### திண்மக் கழிவகற்றல் செயற்பாட்டுக்கு நிதி ஒதுக்கீடு

வடக்கு மாகாணம் உட்பட நாடு தழுவிய ரீதியில் 127 உள்ளூராட்சி சபைகளின் திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்பாட்டுக்கு நிதி மற்றும் தொழில்நுட்பஉதவிவழங்கப்பட்டுள்ளன.
வடக்குகிழக்கு மாகாணம்உட்படஏனைய மாகாணங்களின் கீழ்செயற்படும்உள்ளூராட்சிச் சபைகளும் இந்தத் திட்டத்தின் கீழ் விரைவில் உள்வாங்கப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிலிசறு திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.
ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய அடுத்தமூன்றுவருடகாலப்பகுதிக்குள்திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் நிரந்தரத்தீர்வு எட்டப்பட்டு முழுச்சுகாதார சுற்றுச்சூழல் நலன் பேணப்பட வேண்டும்.
அதற்கேற்ற வகையில் இதுவரை சுற்றுச்சூழல் பாதிப்புக்கு உள்ளாகும் உள்ளூராட்சி சபைகள் அந்தந்தப் பிரதேச சுற்றுச்சூழல் சபையிம்இணைந்த வகையில் முன்மொழிவுகளைமுன் வைத்து நிதி மற்றும் வேறு தேவைகள் தொடர்பில் ஆலோசிக்கலாம் என்றும்தெரிவிக்கப்பட்டது. (ற-4,50)

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
ஐயம்பிள்ளை
நடராசா
(ஸ்ரீ ஜெயா ட்ரான்ஸ்போர்ட் உரிமையாளர்)

திதி: துவாதசி (27.09.2016)

தோற்றம்
06.11.1931

மறைவு
01.10.2013

அன்பிலே சிறந்தவராய் இம் மண்ணில் உதித்து
எம் குடும்பத்தின் ஆலவிருட்சமாய் இருந்து
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமை உணர்வை அன்பாய் பகிர்ந்து
விண்ணக வாழ்வை ஏற்றுச் சென்று
ஆண்டு மூன்றாகி விட்டது மீண்டும்
எம் குடும்பத்தில் வந்துதிக்கமாட்டீர்களா
என்று ஏங்குகின்றோம் என்றென்றும்
உங்கள் பாசம் போற்றி பணிந்திடுவோம்

குடும்பத்தினர்.

# பனங்காய் குள சீரமைப்பு என மண் அகழப்பட்டு விற்பனை

## குளம் சீரமைக்கப்படவில்லை என குற்றச்சாட்டு

தென்மராட்சி, செப். 27
தென்மராட்சி தெற்கில் உள்ள பனங்காய்க்குளத்திலிருந்து மண் அகழப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனினும் குளம் சீரமைக்கப்படவில்லை என்று நெற்செய்கையாளர்கள் குற்றஞ்சாட்டினர்.
மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் குளம் சீரமைக்கப்பட வேண்டும் என்றும், இல்லாவிடில் தமக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.
இது தொடர்பாக தனங்களப்பு, மறவன்புலவு கமக்கார அமைப்புக்கள் தெரிவித்ததாவது–
இந்தக் குளம் விவசாயத் திணைக்களத்தால் சீரமைக்கவென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. குளத்தில் அகழப்படும் மணலை தனங்களப்பு, மறவன்புலவு, கோவிலாக்கண்டி போன்ற பிரிவுகளில் உள்ள குடியிருப்பாளர்களுக்கு விற்பனை செய்கின்றனர். குளம் புனரமைப்புப் பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. குளத்தை ஆழமாக்கி குளக் கட்டை உயர்த்தி மணல் வெளியேறாத நிலையில் புற்கற்றைகளை அடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தும் இதுவரை அவ்வாறான பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. அடுத்து வரும் நாள்களில் மழை ஆரம்பித்தால் சீரமைப்புப் பணிகள் நிறுத்தப்படும் அபாயம் ஏற்படும். சீரமைப்புப் பணிகளை விரைவுபடுத்த வேண்டும் – என்று தெரிவித்தன.
இது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.
(ற-ரி,9)

# தமிழர் வரலாறுகளைப் புத்தக வடிவில் கொண்டு வர அரசுகள் முன்வரவில்லை

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கலையரசன் தெரிவிப்பு

எருவில், செப். 27
எமது தமிழ்த் தலைவர்கள் பேரரசர்களாகவும், சிற்றரசர்களாகவும் பல பிரதேசங்களில் வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்கள் இந்த வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலே வாழ்ந்தார்கள் என்பதனை புத்தக வடிவில் கொண்டு வருவதற்குக் கூட இந்த நாட்டு இனவாத அரசுகள் முன்வரவில்லை.
இவ்வாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.
நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றும்திருமதி ஜெனித்தா பிரதீபன் எழுதிய சமூகவியல் நூல் வெளியீட்டு விழா நேற்று நற்பிட்டிமுனை சுமங்கலி மண்டபத்தில் நெடா அமைப்பின் அனுசரணையுடன் நற்பிட்டிமுனை சிவசக்தி மகா வித்தியாலய அதிபர் எஸ்.சபாரெத்தினம் தலைமையில் நடைபெற்றது.
அதில் உரையாற்றும்போது மாகாண சபை உறுப்பினர் தெரிவித்ததாவது–
இன்று சமூகவியல் எனும் தலைப்பில் நூலை எழுதி வெளியிடும் நூலாசிரியர் தனது வாழ்நாளில் பட்ட துன்பதுயரங்கள், போர் வடுக்களின் பாதிப்புக்கள் என்பதன் அடிப்படையில்தான் சிறுவர்கள், பெண்களின் சமத்துவம் சம்பந்தமாக இந்த நூலை அனைத்து மக்களும் எளிதில் விளங்கிக்கொள்ளும் விதத்தில் எழுதி இருக்கின்றார்.
எமது சமூகத்திலே இவ்வாறான வரலாற்றுப் படைப்புக்களைப் படைக்கும் படைப்பாளிகளைக் கௌரவப்படுத்துவது குறைவு. போற்றுவதும் குறைவாகவே இருந்து வருகின்றது. இதனால் எமது தமிழ்ச் சமூகம் சார்ந்த வரலாற்றுப் பதிப்புக்கள் நூல் வடிவங்களில் வெளிவருவது குறைவாகவே உள்ளன. இனி வரும் காலங்களில் படித்த கல்வி மான்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எமது வரலாற்றுப் பதிவுகளை நூல் வடிவங்களில்கொண்டுவருவதற்கு பாடுபடவேண்டும்.
வடக்கு, கிழக்கு பிரதேசங்களைப் பொறுத்தவரையில் நீண்டகாலமாக போராட்ட வடிவங்களைக்கொண்டவர்கள். இந்த நாட்டிலே எமது தமிழ்த் தலைவர்கள் பல பிரதேசங்களில் பேரரசர்களாகவும், சிற்றரசர்களாகவும் இருந்து ஆண்ட வரலாறுகள் இருக்கின்றன. இங்குள்ள நற்பிட்டிமுனை கிராமத்திலே சிற்றரசர்கள் இருந்திருக்கின்றார்கள். இவ்வாறு பல இடங்களில் அவர்கள் ஆண்டதற்கான பல எடுத்துக்காட்டுக்கள் இருக்கின்றன. அவை அனைத்தும் நூல் வடிவம் பெற வேண்டும். அப்போதுதான் எமது அடுத்த தலைமுறைக்கு அதனைக் கொண்டு செல்ல முடியும்.
இந்த நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ் பேசுபவர்களும், சிங்களம் பேசுபவர்களும் ஒன்றாகவே இணைந்திருக்கின்றார்கள். ஆனால் அன்று ஆங்கிலேயர் ஆட்சியின் போது சிங்களவர்களால் உருவாக்கப்பட்ட காங்கிரசுக்கு சேர். பொன்.இராமநாதன் தலைவராக நியமிக்கப்பட்டார். பின்னர் இவர் தமிழன் என்ற காரணத்தால் இன ரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாகி அந்த அமைப்பில் இருந்து வெளியேறினார். இவ்வாறான செயற்பாடுகள் அன்றிருந்து இன்றுவரை தொடர்ந்து கொண்டுதான் வருகின்றது.
தற்போது கிராமங்களாக இருந்தாலும் சரி நகர்ப்புறங்களாக இருந்தாலும் சரி போர்க் காலத்தில் இருந்த நிலமையை விட பிரிவினைகள், பிரச்சினைகள் என உருவாகிக்கொண்டே செல்கின்றன. இதனைப் பார்க்கும்போது நாங்கள் அடையவேண்டிய இலக்கில் இருந்து வேறு எங்கோ சென்று கொண்டிருக்கின்றோம்என்றஉணர்வுஉருவாகின்றது.
இன்று தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள ஆலயங்களில் உள்ள நிர்வாகங்கள் சமூகம் சார்ந்த விடயங்களைக் கண்டும் காணாமலும் இருக்கின்றன. வெறுமனே ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்வதில் மாத்திரம் அக்கறை கொள்ளாது சமூகத்தில் உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து ஆலயங்கள் ரீதியாக எவ்வாறான விடயங்களைச் செய்யமுடியும் என்பதில் கவனம் செலுத்துதல் வேண்டும் – என்றார்.
நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.ராஜேஸ்வரன், ரீ. கலையரசன், தென் கிழக்குப் பல்கலைக் கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் சஞ்சீவி சிவகுமார், தென் கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலைவிரிவுரையாளர் கலாநிதி அனுசியா சேனாதிராசா. கிழக்குப்பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் ஞ.தில்லைநாதன் மற்றும்கல்வியாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரந்தாய் மக்கள் காணிப் பிரச்சினை தீர்வு ஏதுமின்றி இழுபறி நிலையில்

## நேற்றைய கிளி. அபிவிருத்திக் கூட்டத்திலும் முடிவில்லை

கிளிநொச்சி, செப்.27

கிளிநொச்சி, கரந்தாயில் தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையால் கடந்த ஆண்டு அடாத்தாகப் பறிக்கப்பட்ட மக்களின் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படாத நிலையில் நேற்றைய கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் அது குறித்து தீர்வு எதுவும் எட்டப்படவில்லை.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரந்தாய் கிராம மக்கள் போரால் இடம்பெயர்ந்து, 2009ஆம் ஆண்டின் பின் தங்களுடைய காணிகளில் மீளக் குடியமர்ந்தனர். அவர்கள் குடியமர்ந்த காணி தெங்குப் பயிர்ச் செய்கைச்சபையினருக்கு சொந்தமான காணி என்று தெரிவித்த சபையினர் மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு கூறினர். மக்கள் தங்களுடைய காணிக்கான ஆதாரங்களை முன்வைத்த போதும் குறித்த காணி தங்களுடையது என தெரிவித்த சபையினர் கிளிநொச்சி பொலிஸாரின் உதவியுடன் இரவோடு இரவாக அங்கு குடியமர்ந்த 30க்கும்மேற்பட்ட குடும்பத்தினரை அடாத்தாக வெளியேற்றினர்.

குறித்த கிராமத்துக்குச் சென்ற பொலிஸார் கிராமத்தவர்களில் சிலரை காணிக்குள் அத்துமீறி குடியமர்ந்தார்கள் என்று குற்றம் சாட்டி நீதிமன்றிலும் முற்படுத்தினர். வழக்கை விசாரணை செய்த மன்று குறித்த காணி மக்களுடையது என்பதற்கான ஆதாரங்களை மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவித்து அவர்களை விடுவித்தது. வழக்கு நிறைவுறும் வரை காணிக்குள் செல்வதற்கு இருதரப்பினருக்கும் தடைவிதித்தது.

இந்தப் பிரச்சினை கடந்த ஆண்டு நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இணைத் தலைவர்களால் காணி தொடர்பான கேள்விகள் எழுப்பப்பட்டன. பிரதேச செயலாளரிடம் வினவப்பட்டது. அந்தக் காணி மக்களுடையது என்பதை பிரதேச செயலாளர் திட்டவட்டமாக கூட்டத்தில் தெளிவுபடுத்தினார். தெங்கு அபிவிருத்திச் சபையினர் அத்து மீறியே மக்களை வெளியேற்றினர் என்றும் அவர் சாடினார். தெங்கு அபிவிருத்தி சபையினரிடம் வினவியபோது அவர்கள் காணி தொடர்பான தெளிவான விளக்கங்களை வழங்க வில்லை. காணியை மக்களிடம் வழங்குமாறு இணைத் தலைவர்கள் பிரதேச செயலாளருக்கு உத்தரவிட்டனர்.

ஆயினும் காணி மக்களிடம் கையளிக்கப்பட்வில்லை. குறித்த காணிக்குச் சென்ற தெங்கு அபிவிருத்தி சபையினர் மக்களிடமோ, பிரதேசசெயலாளரிடமோ எதுவும் கேட்காது தென்னங்கன்றுகளை காணியில் நட்டனர். மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் கூட்டப்பட்டது. இந்தக் கூட்டத்தின் போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை மக்களுடைய பிரச்சினை பற்றி அபிவிருத்தி குழு இணைத் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

காணி மறுசீரமைப்பு ஆணையாளரும் அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தார். அவரிடம் இது பற்றி வினவியபோது காணி மக்களுக்கே வழங்கப்பட்டுள்ளன என்று அவர் சபையில் தெரிவித்தார். காணியை அவர்களுக்கு வழங்குவதில் எதுவித ஐயமும் இல்லை எனவும் கூறினார். அந்த காணிகளை மக்களிடம் கையளிக்க வேண்டும் என்றும், இல்லாது போனால் இணைத் தலைவர்களே மக்களை குடியமர்த்துவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. கடந்த ஜூலை 15ஆம் திகதிக்குள் மக்களின் காணிகள் ஒப்படைக்கப்படும் என தென்னை அபிவிருத்தி சபை சார்பாக கலந்து கொண்ட மாவட்ட முகாமையாளர் உறுதியளித்தார். எனினும் மக்கள் இதுவரை குடியமர்த்தப்படவில்லை. நேற்று நடை பெற்ற மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்திலும் குறித்த விடயம் பற்றிப் பேசப்பட்டது.

அதில் தாம் நிலவளவை செய்யப்பட்ட தங்களுடைய காணிகள் போக மீதியாக உள்ள காணிகளை மக்களிடம் ஒப்படைக்குமாறு பிரதேச செயலரிடம் தெரிவிக்கப்பட்டது என்று முகாமையாளர் தெரிவித்திருந்தார். அப்போது குறிக்கிட்ட பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் மக்களுடைய காணிகள் 40 ஏக்கர் உள்ளன என்று எம்மிடம் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் நாம் நேரடியாகச் சென்று பார்த்த போது 5 ஏக்கர் காணியே இருந்தது. அதில் மக்களை இருத்த முடியாது இவர்கள் அளவீடு செய்யும் போது எங்களுக்கு தெரியப்படுத்தியிருக்க வேண்டும். கிராம அலுவலரையாவது அழைத்திருக்க வேண்டும். அவ்வாறு எதுவித நடவடிக்கையும் செய்யவில்லை - என்றார்.

30 வருடங்களாக மக்கள் இருந்த காணிகளை வழங்குங்கள் என்று தான் கேட்கின்றோம். உங்கள் காணிகளை மக்களுக்கு வழங்குங்கள் என நாங்கள் கேட்கவில்லை அவர்கள் 2015ஆம் ஆண்டுவரை வரிப்பணம் செலுத்தியுள்ளனர். மக்கள் வாழ்ந்த காணிகள் மக்களிடம் வழங்கப்பட வேண்டும். மாற்றுக் காணி என ஒரு குளக் கரையை காட்டியுள்ளனர். அதனை ஏற்க முடியாது - என்று குறிக்கிட்டு பேசிய மாகாண சபை உறுப்பினர் அரியரத்தினம் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த மாவட்ட முகாமையாளர் நாங்களும் 1976 ஆம் ஆண்டு முதல் எல்.ஆர்.சி க்கு காணிக்காக பணம் செலுத்தி வருகின்றோம் என்றார்.

அனைவருடைய விவாதங்களுக்கு பின்னர் கருத்து தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட இணைத்தலைவர்களில் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிறீதரன் கடந்த கூட்டத்தில் மக்களின் காணிகளை அவர்களுக்கே வழங்க சம்மதம் தெரிவித்த நீங்கள் தற்போது இவ்வாறு கதைப்பதானது ஏற்றுக்கொள்ள முடியாதது. நீங்கள் மக்களின் காணிகளை வழங்குவதில் அக்கறையுடன் செயற்படுவதாக இல்லை. எங்களின் காணிகளை போராட்டங்கள் மூலம்தான் பெறவேண்டுமாயின் அதனை நாங்களே பார்த்துக் கொள்கின்றோம்.- என்றார்.

முடிவுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் இணைத்தலை வருடைய கருத்துடன் கரந்தாய் மக்களுடைய காணிகள் தொடர்பான பிரச்சினை நிறைவு பெற்றது. (ற-21,ரி3)

# மஞ்சள் செய்கையை ஊக்குவிக்க 150 விவசாயிகளுக்குக் கடனுதவி

நெடுங்கேணியில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் மஞ்சள் செய் கையை ஊக்குவிக்கும் நோக்கில் ரகமா நிறுவனத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த பிரதேசத்தில் இனம் காணப்பட்ட 150 விவசாயிகளுக்கான விதை மஞ்சள் மற்றும் இலகு கடன் என்பனவற்றையும் வழங்குகின்றனர். வழங்கப்படும் இலகு கடனை வட்டி யின்றி தவணை முறையில் செலுத்தும் ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக் கப்பட்டது.

மஞ்சள் செய்கைக்குத் தேர்வான விவசாயிகளுக்கு குறித்த விவசாயம் தொடர்பில் பயிற்சி வழங்கப்பட்டதுடன், விசுவமடுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மஞ்சள் பயிர் செய்கையை நேரில் அழைத்துச் சென்று விவசாயிகளுக்குக் காண்பிக்கப்பட்டது என்று நெடுங்கேணி பண்ணையாளர் சங்கத் தலைவர் பூபாலசிங்கம் தெரிவித்தார். (ற-101)

# சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் நெடுந்தீவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.27

நெடுந்தீவில் கடந்த பல வருடங்களாக செயற்படாது இருந்த சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் ஏழு சங்கங்களின் செயற்பாடுகள் முதற்கட்டமாக மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எஸ்.இலகுநாதன் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது-

கடந்த வாரம் சமாசப் பணியாளர்கள் குழு ஒன்று நெடுந்தீவுக்குச் சென்றது. அவர்கள் அங்கு செயற்படாமல் இருக்கும் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை மீளவும் செயற்பட வைக்கவும் சங்கங்களுக்கான நிர்வாகங்களை அமைப்பதிலும் அதிக அக்கறை காட்டினர். சங்க அங்கத்தவர் கள், பொதுமக்கள் ஆகி யோருக்கிடையே கலந்துரையாடல்களை நடத்திச் சிக்கனக் கடன் வழங்கும் சங்கங்கள் குறித்த தான விழிப்புணர்வையும் ஏற்படுத்தினர்.

கடந்த பல வருடங்களாக செயற்படாமல் இருந்த சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது முதற்கட்டமாக ஏழு சங்கங்கள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எட்டுச் சங்கங்கள் இந்தப் பிரதேசத்தில் இயங்காத நிலையில் உள்ளன. நெடுந்தீவு சாராப்பிட்டி, ஐங்கரன், நாகபூசனி, மலைமகள் மகளிர், சென்.ஜோன்ஸ், சென்.அன்ரனீஸ் ஆகிய சங்கங்களுடன் நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கமும் மீளவும் ஆரம்பிக்கப்பட்டது.

ஏனைய சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களும் விரைவாக ஆரம்பித்துவைக்கப்படவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள சங்கங்களில் கூடுதலான அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இந்தச் சங்கங்களுக்கு விரைவாக புதிய கடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன - என்றார். (ற-17)



# கால்நடை மருத்துவ நடமாடும் சேவை உடையார்கட்டில் நேற்று

யாழ்ப்பாணம், செப். 27

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்களுக்கான கால்நடை மருத்துவ நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வடக்கு கால்நடை அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் இடம் பெற்ற உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் நடமாடும் சேவை நடைபெற்றது. நடமாடும் சேவையை வடக்கு மாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆரம்பித்தார்.

கால்நடை மருத்துவ சேவையை மக்களை நோக்கிக் கொண்டு செல்லும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நடமாடும் சேவையில் மருத்துவ ஆலோசனை, மருந்துப் பொருள் விற்பனை, கால்நடை வளர்ப்புக் கையேடுகள் விற்பனை, நாய்களுக்கான கருத்தடைச் சிகிச்சை, கால்நடைகளுக்கான காப்புறுதி, பசுத்தீவனமான ஊறுகாய்ப்புல் தயாரிப்பு உட்பட பல சேவைகள் வழங்கப்பட்டன. கால்நடைகளை எடுத்துவர முடியாத பண்ணையாளர்களின் வீடுகளுக்குக் கால்நடை மருத்துவர்கள் நேரடியாகச் சென்று சிகிச்சைகளைமேற்கொண்டனர்.

கால்நடை மருத்துவ நடமாடும் சேவையின் தொடக்க நிகழ்ச்சி கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் சி.வசீகரனின் தலைமையில் நடைபெற்றது. வடமாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் சி.கிரஜகலா, வலயக் கல்விப் பணிப்பாளர் முனீஸ்வரன் உதயராணி ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வடக்கு காணிகளை உரிமத்துடன் கொழும்புக்கு வழங்க முடியாது

## அபிவிருத்திக்கு என எடுத்துவிட்டு வேறு தேவைக்கு பயன்படுத்துவர் எனச் சினக்கிறார் விக்கி

கிளிநொச்சி, செப். 27
அபிவிருத்தித் தேவைகளுக்காக எமது காணிகளை உரிமத்துடன்கொழும்பு அரசுக்குவழங்க முடியாது. அபிவிருத்திக்கு என்றுகூறிக் காணிகளைப் பெற்று பின்னர் வேறு தேவைகளுக்கு எடுத்துவிடக்கூடும்.
இவ்வாறு வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் இணைத் தலைவர்களாக வட மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன் மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் பங்கெடுத்தனர்.
கூட்டத்தில் 28 விடயங்கள் தொடர்பில் ஆராய்வதாக நிகழ்சி நிரலில் குறிக்கப்பட்ட போதும் நீர்வழங்கல், மின்சாரம், வீதி, மீன்பிடி,விவசாயம், சுகாதாரம், கல்வி,போக்குவரத்து ஆகிய எட்டு விடயங்களே ஆராயப்பட்டன.
ஆராயப்பட்ட விடயங்களில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற அபிவிருத்திப் பணிகள் மற்றும் அதன் குறை நிறைகள் என்பன ஆராயப்பட்டன.
அதில் முதலமைச்சர் கருத்துத் தெரிவித்தார்.
மாகாண அரசுக்கோ, மாவட்டச் செயலகங்களுக்கோ தெரியாமல் நடுவண் அரசு பல பணிகளை முன்னெடுத்துள்ளது. நடுவண் அரசுக்கு அபிவிருத்தித் திட்டங்களுக்காக மாகாணத்துக்குள் காணிகளை உரிமத்துடன் வழங்க முடியாது. அவ்வாறு வழங்குதல் எதிர்காலத்தில்வேறு பலபிரச்சினைகளைக் கொண்டு வரக்கூடும். அவர்களால்மேற்கொள்ளப்படுகின்ற தற்போதைய அபிவிருத்திகள் வெற்றியளிக்கவில்லை என்றும் கூறிவிட்டு அந்தக் காணிகளை அவர்கள் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும். இது விரும்பத்தக்கது அல்ல. மாங்குளத்தில்கூட பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு காணியை நீண்ட கால குத்தகைக்கு தரலாம் என்றே நாங்கள் மத்திய அரசுக்கு தெரிவித்திருக்கின்றோம்.–என்றார்.
கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வட மாகாண அமைச்சர்களான டெனீஸ்வரன், ஐங்கரநேசன், சத்தியலிங்கம், குருகுலராஜா, மாகாண சபை உறுப்பினர்களான தவநாதன், அரியரட்ணம் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் கலந்துகொண்டனர். (ற-4,35)

## சனசமூக நிலையங்களின் சம்மேளனம் தெரிவு

முல்லைத்தீவு, செப். 27
புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத் தெரிவு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பிரதேச சபையின் விரிபடுத்தப்பட்ட செயற்பாடுகளை துரிதமாக முன்னெடுக்கும் வகையில் இந்த சம்மேளனத் தெரிவு நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.
தெரிவில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் பொருளாளர்கள் கலந்து கொண்டனர்.
தலைவராக புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப்பணிப்பாளர் சுப்பரமணியேஸ்வரனும், செயலாளராக மாணிக்கபுரத்தைச் சேர்ந்த சந்திரமோகனும் பொருளாளராக சிவச்சந்திரமூர்த்தியும்தெரிவு செய்யப்பட்டனர். உப தலைவர், உப செயலாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் தெரிவும் இடம்பெற்றது.
பிரதேச சபைகளின் வேலைத் திட்டங்களில் பல திட்டங்களை கிராமங்களில் நடைமுறைப் படுத்துவதில் சனசமூக நிலைங்களே அதிக பங்கு வகிக்கின்றன. (ற-35)

## குழந்தை உளவியலில் தேர்ச்சி அடைந்தே முன்பள்ளிகளில் பணியாற்றவேண்டும்

### இராஜாங்க அமைச்சர் விஜயகலா அறிவுரை

அச்சுவேலி, செப்.27
முன்பள்ளிகளில் குழந்தை உளவியலில் தொடர்பான தேர்ச்சிகளைப் பெற்றவர்கள் பணியில் ஈடுபட வேண்டும். அந்த துறைநிலைசார் வகையில் டிப்ளோமா கற்கை நெறிகள் நடத்தப்படுகின்றன. அவர்கள் அத்தகைய கற்கை நெறிகளில் கலந்து கொண்டு உரிய துறையில் தேர்ச்சிகளைப் பெற்றுக்கொள்ள முன்வர வேண்டும்.
இவ்வாறு இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.
நீர்வேலி பாலர் பகல் விடுதியினதும் முன்பள்ளியினதும் 60 ஆவது ஆண்டு நிறைவு விழா, நிலையத்தின் தலைவர் செ.பத்மநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இராஜாங்க அமைச்சர் உரையாற்றினார்.
அவர் தெரிவித்ததாவது–
போரால் பாதிப்புக்கு உள்ளாகி வன்னிப் பிரதேத்தில் பாலர் பகல் விடுதிகளை ஆரம்பித்து நடத்துவதற்கு பொருள்படைத்தோர், தனவந்தர்கள் தாமாக முன் வர வேண்டும். இத்தகைய முயற்சிகளை மேற்கொள்வோருக்கு எமது அமைச்சினது உதவியும் கிடைக்கும். பாலர் முன்பள்ளிகளை வருமான அடிப்படையில் நடத்த முற்படக் கூடாது.
சிறுவர் மகளிர் தொடர்பான வழக்குகள் குறிப்பிடப்பட்ட கால இடைவெளியில் விசாரணை செய்யப்பட்டுத் தீர்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். இதற்கு ஏற்புடைய வகையில் சட்டங்கள் திருத்தி அமைக்கப்படவேண்டும்.
சமகாலச் சமூகத்தில் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் தொடர்பான பிரச்சினைகள் பெரும் பிரச்சினையாக பெரும் பாதிப்பை ஏற்படுத்தி நிற்கின்றன. மூத்த பிரசைகள், முதியவர்கள் தமது பிள்ளைகளை உறவுகளை விட்டு நீங்கிய நிலையில் முதியோர் இல்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். மூத்த பிரசைகள் தமது உறவுகளைத் தேடிய நிலையில் முதியோர் இல்லங்களில் காத்துக் கிடக்கின்றனர். முதியவர்களின் ஆற்றல் அனுபவங்களை சமூகம் பெற்றுக் கொள்ள முற்பட வேண்டும். முதியவர்களைப் புறக்கணிக்கவோ புறம் தள்ளவோ கூடாது.
–என்றார். (ற-4,11)

## மானிப்பாய் வைத்தியசாலையின் விரிவாகத்துக்கு புதிய காணி

யாழ்ப்பாணம், செப். 27
ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையின் விஸ்தரிப்பு மற்றும் உட்கட்டுமான அபிவிருத்திக்காக மூன்று பரப்புக் காணி கொள்வனவு செய்யப்படவுள்ளது.
அதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை நலன்புரி சங்கத் தலைவர் மருத்துவர் ஏ.காந்தநேசன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது–
மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன் கருதி பல்வேறுபட்ட உட்கட்டுமானதேவைகளைமேற்கொள்ள வேண்டிய அவசர மற்றும் அவசிய சூழ்நிலை எழுந்துள்ளது.
இந்தத் தேவைப்பாட்டை முன்னெடுக்க மூன்று பரப்புக் காணி மிக இன்றியமையாததாக உள்ளது. வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம் வைத்தியசாலைக்கு அருகில் உள்ள மூன்று பரப்புக் காணியை கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது.
வலிகாமம் பகுதிகளில் உள்ள பரோபகாரிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள், வெளிநாட்டு புலம்பெயர் வாழ் மக்கள், தனியார் நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் காணி கொள்வனவுக்கு உதவ முன்வர வேண்டும்.
இதன் ஊடாக நோயாளர் விடுதிகள், வைத்திய சிகிச்சை பிரிவுகள், பரிசோதனைக் கூடங்கள், களஞ்சியங்கள், வைத்தியர், தாதியர் விடுதிகள் என்பன அமைக்கப்பட்டு அதனூடாக மக்களுக்குச் சிறந்த வைத்திய சேவையை வழங்க முடியும்.– என்றார். (ற-ரி,50)

## மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், செப்.27
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் மாலு சந்தி, இரும்புமதவடி, சக்களாவத்தை ஆகியஇடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் தெற்கிலுப்பைக் குளம் கிராமப் பிரதேசத்திலும் மின் தடைப்படும்.
மன்னாரில் அரிப்பு, சவேரியார் குளம், வெள்ளிமலை, சிஈசிஈ, முருங்கனிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படைமுகாம், வங்காலை நீர்ப்பாசனத்திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத்திணைக் களம், மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி பம்கவுஸ், மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், சீனத்துறைமுகம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும். (ற-ரி)

## தென்மராட்சியில் 711 பேருக்கு இந்த ஆண்டு கழிப்பறை வசதி

தென்மராட்சி செப் 27
தென்மராட்சி பிரதேசத்தில் கழிப்பறை வசதி இல்லாத 711 பேருக்கு இந்த வருடம் கழிப்பறை வசதிகள் பிரதேச செயலகத்தால்வழங்கப்பட்டுள்ளன.
வேள்ட் விஷன் நிறுவனத்தால் 212 பயனாளிகளுக்கு கழிப்பறை வசதிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. கழிப்பறைகளை அமைப்பதற்கு குறித்த நிறுவனம் சுமார் 50 வீதமான நிதியை வழங்கியது என்று பயனாளிகள் தெரிவித்தனர். குறித்த நிறுவனத்தின் றிவோஷ் திட்டத்தின் கீழ் 17 மாற்றுத் திறனாளிகளுக்கும் கழிப்பறை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.
மீள்குடியேற்ற அமைச்சால் 174 பயனாளிகளுக்கு தனியான கழிப்பறைகளும் 308 பேருக்கு வீட்டுடன் இணைந்த கழிப்பறைகளும் வழங்கப்பட்டுள்ளன என புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த மே மாதம் பிரதேச செயலகத்தால் வெளியிடப்பட்ட புள்ளி விவரங்களின்படி பிரதேசத்தில் 3 ஆயிரத்து 934 குடும்பங்கள் கழிப்பறை வசதியின்றி உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-4,9)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

வவுனியா, செப். 27
வவுனியா மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று நடைபெறவில்லை. அது பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
மாந்தை, துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றதால் ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர்கள் அதில் பங்கேற்றனர். அதனால் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்பிற்போடப்பட்டுள்ளது என்று வன்னி [illegible] நாடாளுமன்ற உறுப்பினரும் வன்னி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான கே. கே. மஸ்தான் தெரிவித்தார். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

தென்மராட்சி, செப்.27

கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வைரவிழா மலர் வெளியீடும் நாளை பி.ப. 3.30 மணிக்கு சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறும்.

நிலையத் தலைவர் மருத்துவர் இ.கந்தையா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் திருமதி மு.கோமேஸ்வரன், பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீசன், மருத்துவர் எஸ்.எஸ்.அருளானந்தம், தியாகி அறக்கொடை நிலைய பணிப்பாளர் சி.கமலநாதன், தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத் தலைவர் லயன் கா.இராசதுரை ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிலையத்தின் "வைர விழா மலர்" வெளியீடு இடம்பெறும். வெளியீட்டுரையை மலர்க் குழுவின் தலைவர் பொ.திருப்பதி நிகழ்த்த முதற் பிரதியை வை.கேத்திரபாலன் பெற்றுக் கொள்வார். நூலின் ஆய்வுரையை ஓய்வு நிலை அதிபர் த.கந்தையா வழங்குவார்.

சனசமூக நிலைய வரலாற்றில் பணியாற்றியவர்கள் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். (ந-9)




மருதங்கேணி கடற்கரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 82 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பளை பொலிஸ் நிலையப் பரிசோதகர் மினிப்புர தெரிவித்தார். பொலிஸாரும், கடற்படையினரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையிலேயே கஞ்சா கைப்பற்றப்பட்டது என்றும், அது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, அது குறித்துப் பளைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. 38 பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டன. அவற்றைக் கொண்டு சென்றவர்கள் தொடர்பான விவரங்கள் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-4,ரி3,35)

# வட்டுவாகல் கடற்படை வசமுள்ள கால்நடைகளை விடுவித்து தருக

## அவற்றின் உரிமையாளர்கள் மீண்டும் கோரிக்கை

முல்லைத்தீவு, செப். 27

வட்டுவாகல் கடற்படை முகாமில் உள்ள பொதுமக்களின் கால்நடைகள் ஒரு வாரத்துக்குள் விடுவிக்கப்படும் என்று மாவட்டச் செயலர் தலைமையிலான கலந்துரையாடலில் கடற்படையினர் தெரிவித்தனர். தற்போது 25 நாள்கள் கடந்து விட்ட நிலையிலும் அவை இன்னும் விடுவிக்கப்படவில்லை. மாவட்டச் செயலர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கால்நடைகளின் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வட்டுவாகல் பகுதியில் 617 ஏக்கர் நிலப் பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாம் தேவைக்கு நிலம் அளவிடுவது தொடர்பில் கடந்த முதலாம் திகதி மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் மாவட்டச் செயலர், பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதிகள், கடற் படையினர், பொலிஸார், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோருடன் நாமும் பங்கு கொண்டிருந்தோம்.

முகாமுக்குள் உள்ள கால்நடைகளை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு கோரியிருந்தோம். ஒரு வாரத்துக்குள் விடுவிக்கப்படும் என்று மாவட்டச் செயலர் முன்னிலையில் கடற்படையினர் தெரிவித்தனர். அவ்வாறு தெரிவித்து 26 நாள்கள் கடந்து விட்டன. இன்னும் விடுவிக்கவில்லை. ஒரு வாரத்தில் ஒப்படைப்பதாகத் தெரிவித்த கடற்படையினர் தற்போது காலம் கடத்துவது தமது இருப்புக்கு எமது நிலத்தை வழங்க நாம் இணங்க மறுத்ததாலா என்ற சந்தேகமும் எமக்கு எழுகின்றது. கால்நடைகளை எம்மிடம் ஒப்படைக்க எமது மாவட்டச் செயலர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அந்தச் சந்திப்பில் சில காலத்தில் அனைத்துக் கால்நடைகளையும் விடுவிப்பதாகவே கடற்படை அதிகாரி தெரிவித்திருந்தார். அவை இதுவரைக்கும் விடுவிக்கப்படவில்லை. உரிமையாளர்களின் கோரிக்கை தொடர்பில் உடன் கடற்படையினரின் கவனத்திற்குக் கொண்டு சென்று பதிலளிக்கப்படும் - என்று மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ந-101)

## கலாசார விழா

யாழ்ப்பாணம், செப். 27

சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் "எனினும் நாம் பறப்போம்" என்னும் தொனிப்பொருளிலான கலாசார விழா எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாண இலங்கை வேந்தன் கல்லூரியில் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறும்.

அதில் திரைப்படங்களும், குறுந்திரைப்படங்களும் திரையிடப்படவுள்ளன. கவிதைகள் இரசனை நிகழ்ச்சிகளும், தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் இசை மாலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

மூன்று நாள்களிலும் மு.ப. 10 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை அவந்த ஆடிகலவின் கார்டூன் கண்காட்சி, கறுப்பு ஜூலையின் பின்பு ஓவியக் கண்காட்சி, நயனஹாரி அபேநாயகவின் புகைப்படக் கண்காட்சி மற்றும் லால் ஹாகொடவின் புகைப்படக் கண்காட்சி நடைபெறவுள்ளன. (ந-ரி7)

## தாஜுதீன் விவகாரத்தில் மற்றொரு முறைப்பாடு

கொழும்பு, செப். 27

ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் சடலத்தின் சில பாகங்களை மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியின் மருத்துவர் மற்றும் அந்த கல்லூரியின் உபவேந்தர் எடுத்து சென்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மருத்துவ பீட மாணவர்கள் நடவடிக்கை குழு நேற்றுக் குற்றப் புலனாய்வுத் துறையிடம் முறைப்பாடு செய்தது.

கொழும்பு முன்னாள் பிரதான சட்ட மருத்துவ அதிகாரி பேராசிரியர் ஆனந்த சமரசேகர, தனக்கு கீழ் சேவை புரியும் பணியாளரைப் பயன்படுத்தி வசீம் தாஜுதீன் சடலத்தின் பாகங்களை மாலபே சைட்டம் நிறுவனத்துக்குக் கொண்டு சென்றதாக அண்மையில் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தெரிய வந்தது.

இது தொடர்பாக பலரிடம் விசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் வழங்கிய வாக்குமூலங்களுக்கு அமைவாக இந்தச் சம்பவம் தெரியவந்தது என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்தது. (ந-4)

## நள்ளிரவில் கடையில் உணவு கேட்டு போதையில் வந்தவர்கள் அட்டகாசம்

### துரத்திப் பிடித்தது பொலிஸ்

சாவகச்சேரி, செப்.27

நள்ளிரவில் பூட்டிய உணவகத்தைத் திறந்து உணவு தருமாறு போதையில் வந்தவர்கள் கேட்டனர். கடையைத் திறக்க அதன் உரிமையாளர் மறுத்ததால் கையிலிருந்த போத்தல்களால் அவர்கள் கடையின் கண்ணாடிகளை உடைத்தனர். அவர்களைத் துரத்திப் பிடித்த பொலிஸார் தடுத்து வைத்து விசாரிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 12.30 அளவில் சாவகச்சேரி - தனங்களப்பு வீதியில் உள்ள உணவகத்தில் நடந்தது.

உணவகத்தில் உணவு வகைகள் முடிந்ததால் கடையை மூடி விட்டு கடை உரிமையாளரும் சிப்பந்திகளும் உறங்கச் சென்றனர். நள்ளிரவு அங்கு போதையில் வந்த சிலர் கடையைத் திறந்து தமக்கு உணவு தர வேண்டும் என்று கேட்டுள்ளனர். உணவுகள் முடிந்து விட்டன என்று உரிமையாளர் கூறியதால் ஆத்திரமடைந்த அவர்கள், கையிலிருந்த போத்தல்களால் கடையின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கிச் சேதப்படுத்தினர். இது தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் அனுப்பப்பட்டு பொலிஸார் அங்கு வந்த போது அவர்கள் தப்பியோடினர். 7 பேரைத் துரத்திப் பிடித்த பொலிஸார் அவர்களைப் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

குறித்த ஏழு பேரையும் பொலிஸார் நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களை எதிர்வரும் ஆறாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி. மேற்கு வாய்க்கால்களை சீரமைக்குமாறு கோரிக்கை

### பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் ஐந்துக்கும் மேற்பட்ட அரச நிறுவனங்களுக்கு உரித்தான வாய்க்கால்கள், மதகு, பாலங்கள் பல தசாப்தங்களாக சீரமைப்பு இன்றி அழி வடைந்த நிலையிலும், துப்புரவாக்கப்படாமலும் உள்ளன. மழைகாலம் நெருங்குகின்றது. அவற்றைச் சீர் செய்வது யார்?

வலி. மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொதுமக்களும், விவசாயிகளும் இவ்வாறு கேள்வி எழுப்பினர்.

வலி.மேற்குப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அண்மையில் இணைத்தலைவர்கள் தலைமையில் இடம்பெற்றது.

வாய்க்கால்கள், மதகுகள், பாலங்களுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித்திணைக்களம், பிரதேச சபை, கமநலசேவை நிலையம், நீர்ப்பாசன சபை திணைக்களம், கமநலசேவைகள் திணைக்களம் உள்ளிட்ட ஆறு நிறுவனங்கள் உள்ளன. அவை எவையும் கடந்த மூன்று தசாப்த காலத்திற்கு மேலாக எமது வலி.மேற்கு பிரதேசத்திற்கு வாய்க்கால்களையோ மதகுகளையோ சீர் செய்வதுமில்லை, சீரமைப்புப் பணிக்கு நிதி ஒதுக்குவதுமில்லை. மழைகாலங்களில் மதகுகள், வாய்க்கால்கள், பாலங்கள் அழிவடைந்து நீரோட்டமின்றி உள்ளன. அது குறித்து சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு அறிவித்தால் அது எமது பரிபாலனத்திற்கு உட்பட்டது அல்ல என கூறுகின்றனர். இவ்வாறு சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் தட்டிக்கழித்தால் நாம் யாரிடம் செல்வது?.

இணைத்தலைவர்கள் இவ்வாறான மதகுகள், வாய்க்கால்கள், பாலங்கள் அழிவடைந்த விவரங்களைத் திரட்டி, அதனைப் பார்வையிட்டுச் சீர் செய்ய வேண்டும் - என்று பொதுமக்களும் விவசாயிகளும் கோரிக்கை விடுத்தனர்.

வலி.மேற்குப் பிரதேச செயலாளர் ஊடாக விவரங்களைத் திரட்டி அடுத்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுமுகமான நிலை எட்டப்பட்டு இந்த ஆண்டில் இருந்து சீரமைப்புப் பணிகள் அந்தந்த அரச நிறுவனங்கள் ஊடாக முன்னெடுப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (ந-50)

# அபகரிக்கப்பட்ட காணிகள் குறித்து தேசியக் கொள்கை

## தயாரித்துள்ளது அரசு

கொழும்பு, செப் 27

இராணுவம் மற்றும் பொலிஸாரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் இலங்கை அரசு தேசியக் கொள்கை ஒன்றை வரைந்துள்ளது.

தனியார் நிலங்கள் மற்றும் அரச நிலங்கள் தொடர்பாகவும் இவற்றுள் நாட்டின் முப்படைகளில் ஒன்றால் அல்லது பொலிஸாரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் தொடர்பான துல்லியமான வரைபடம் ஒன்றைச் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சுடன் இணைந்து தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் இந்தத் தேசியக் கொள்கை கோரிக்கை விடுத்துள்ளது.

அரசானது பொதுப் பயன்பாட்டுக்குத் தேவை என உறுதிப்படுத்தாத அனைத்து நிலங்களும் உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் தேசியக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு அல்லது அபிவிருத்தி நோக்குடன் இந்தக் காணிகள் கையகப்படுத்தப்பட்டால் அவை மிகவும் கவனமாக ஆராயப்பட்டு அதாவது இவற்றுக்குப் பதிலாக வேறு காணிகள் உள்ளனவா என்பது உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும் காணிகள் தொடர்பாக வரையறுக்கப்பட்டுள்ள தேசியக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படாத நிலங்கள் அதாவது இராணுவத்தினரால் விவசாய உற்பத்திகள், சுற்றுலாத் துறை மற்றும் களியாட்டத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஓர் ஆண்டாக புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சால் எழுதப்பட்ட போரால் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்களுக்கான நிலையான தீர்வுகள் தொடர்பான தேசியக் கொள்கை தற்போது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அரச திணைக்களங்கள் மற்றும் அதிகாரிகளால் காணிகள் உரிமை கோரப்படுதல் மற்றும் முரண்பாட்டுக்குரிய காணிகளை உரிமை கோருதல் போன்றன மக்களை மீள்குடியேற்றுவதற்குத் தடையாக உள்ள ஏனைய விடயங்களாகும்.

இந்தத் தேசியக் கொள்கை ஆரம்பத்தில் வரையப்பட்டபோது உள் நாட்டில் இடம்பெயர்ந்த பெரும்பான்மையான மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியிருந்தனர். ஆனாலும் அப்போதும் 40,000 வரையான மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நிலையிலும் 100,000 வரையான இலங்கையர்கள் இந்தியா மற்றும் ஏனைய நாடுகளில் புலம்பெயர்ந்த நிலையிலும் இருந்தனர்.

> தேசிய பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படாத நிலங்கள் அதாவது இராணுவத்தினரால் விவசாய உற்பத்திகள், சுற்றுலாத் துறை மற்றும் களியாட்டத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் காணிகள் விடுவிக்கப்படவேண்டும்

அத்துடன் மீள்குடியேற்றப்பட்ட ஒரு தொகுதி மக்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையிலிருந்தனர். அதாவது இடம்பெயர்ந்த மக்களால் மாவட்ட மற்றும் மாகாண அதிகாரிகளிடம் ஆலோசிக்காது அல்லது பாதிக்கப்பட்டவர்களிடம் தெரியப்படுத்தாது உரிமை கொள்ளப்பட்ட சில காணிகளை அரச திணைக்களங்கள் மற்றும் அதிகாரிகள் அரச பயன்பாட்டுக்காக நிலங்களை வேறாக்கிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இந்தத் திணைக்களங்களுக்குள் வன, வனவிலங்கு மற்றும் தொல்லியல் திணைக்களங்கள், மகாவலி, நகர அபிவிருத்தி அதிகாரசபைகளும் உள்ளடங்குகின்றன.

இவ்வாறான நில விவகாரங்களை வெளிப்படையாக மீளாய்வு செய்யுமாறும் சாத்தியப்படும் சந்தர்ப்பங்களில் சர்ச்சைக்குரிய நிலங்களை அவற்றின் சரியான உரிமையாளர்களிடம் மீளவும் கையளிக்குமாறும் தேசியக் கொள்கை வரையறுத்துள்ளது.

வடக்கு-கிழக்கில் நிலவும் நில விவகாரங்கள் குறிப்பாக அரசுக்குச் சொந்தமான நிலங் கள் தொடர்பாக நீண்டகாலமாகத் தொடரும் சர்ச்சைகள் தீர்க்கப்படவேண்டும். இவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படவேண்டும் என தேசியக் கொள்கை வலியுறுத்தியுள்ளது.

இவ்வாறான நிலப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்போது காலாதிகாலமாகச் சமூகங்கள் மத்தியில் புரையோடிப் போயுள்ள முரண்பாடுகள் தீர்க்கப்பட முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போர் காரணமாக ஒருபோதும் நிலங்களைச் சொந்தமாகக் கொண்டிராத உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் அவல நிலையும் இந்தத் தேசியக் கொள்கையில் கோடிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களில் முடப்பட்டு அனைவரும் அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றப்பட்டால் மாத்திரமே நிலையான தீர்வை எட்டமுடியும் எனவும், யாழ். மாவட்டத்திலுள்ள முகாம்களில் கிட்டத்தட்ட 3000 இடம்பெயர்ந்த மக்கள் வாழ்வதாகவும் தேசியக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது சொந்த நாட்டுக்குத் திரும்பி வருவதற்கு முயற்சிக்கும் அகதிகளின் பிரச்சினைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு அவை தொடர்பாகத் தீர்மானங்களும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டிய தேவையுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த சமூகங்களுக்குத் தகவல்களை வழங்கும் பரப்புரைகளை மேற்கொள்ளுதல், இவர்கள் முக்கியமான அடையாள ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அனுசரணையாக இருத்தல், இவர்கள் தம்மிடம் வைத்திருக்கும் பொருள்கள் மற்றும் உடமைகளை இலங்கைக்குக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளைச் செய்துகொடுத்தல், சொந்த இடங்களுக்குத் திரும்பிய இடம்பெயர்ந்த மக்கள் பெற்றுக்கொண்ட உதவிகளை இவர்களும் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியுள்ளவர்கள் என்பதை உறுதிப்படுத்துதல், இவர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்த நாடுகளில் பெற்றுக்கொண்ட கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள், பாடசாலை அனுமதி போன்ற சில தேவைகளின்போது ஏற்றுக்கொள்ளுதல், பாதுகாப்புக் கெடுபிடிகளில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு உதவுதல் போன்ற பல்வேறு தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளைச் செயற்படுத்தவேண்டும் என தேசியக் கொள்கை வலியுறுத்துகின்றது.

போரின் போது கொல்லப்பட்டவர்கள், காணாமற்போனோர், அங்கவீனமுற்றோர், பொருளாதார ரீதியான இழப்புக்களைச் சந்தித்தோர் போன்றவர்களுக்கு இழப்பீட்டை வழங்கக் கூடிய வகையிலும் இடப்பெயர்வு மற்றும் அதன் தாக்கம் தொடர்பான பிரச்சினையை அடையாளங்கண்டு அவற்றை உறுதிப்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு முழுமையான கொள்கை ஒன்றை இலங்கை அரசு வரையறுக்கவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட இடங்களில் பணிபுரிந்தவர்களுக்கும் இவ்வாறான இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

# ஆறரைக் கோடி செலவில் நடக்கும் ரஷ்யப் பயணம்

## மத்திய மாகாண சபையின் 58 உறுப்பினர்களும், 8 உயரதிகாரிகளும்

கொழும்பு, செப் 27

மத்திய மாகாணசபையின் 58 உறுப்பினர்களும், 8 உயரதிகாரிகளும் ஆறரை கோடி ரூபா செலவில் ரஷ்யாவுக்கான பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

முதல் கட்டமாக 29 மாகாணசபை உறுப்பினர்களும் ஒரு சிரேஷ்ட அதிகாரியும் இன்று ரஷ்யாவுக்குப் பயணம் செய்யவுள்ளனர்.

மத்திய மாகாண சபையில் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத அளவுக்குக் கடுமையான நிதிப் பற்றாக்குறை நிலமை காணப்படுகின்றது.

மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் தேவையற்ற வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக் கூடாது என ஏற்கனவே ஜனாதிபதி அறிவித்திருந்தார். இவ்வாறான நிலமைகளின் கீழ் மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் 6 நாள் பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

58 மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் 8 அதிகாரிகளுக்கான பயண செலவாக 650 லட்சம் ரூபாவை மத்திய மாகாணசபை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதேவேளை, இந்தப் பயணத்துக்கான நிதி மாகாண சபையின் கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டதாகவும், பயண அனுமதி கிரமமான முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மாகாண சபையின் பிரதம செயலாளர் சரத் பிரேமவன்ச தெரிவித்துள்ளார். (த)



# சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்ட குழு கொழும்பில்

கொழும்பு, செப் 27

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டத் தலைவர்களின் குழுவொன்று கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அனைத்துலக திணைக்கள மூத்த ஆய்வு ஆலோசகர் கலாநிதி சாய் ஷாங்ஜின் தலைமையிலான குழுவே கொழும்பு வந்துள்ளது.

இந்தக் குழுவில், மூலோபாய ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி வாங் லியொங், மத்திய குழுவின் அனைத்துலக திணைக்கள உதவிச் செயலர்களான யூ காய்ஷி, மற்றும் பூ சுன் ஆகியோர் இடம்பெற்றுள்ள னர்.

தெற்காசியாவின் தற்போதைய நிலமைகள், சீன ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் ஒரு பாதை ஓர் அணைத் திட்டம், மற்றும் அதில் பங்கேற்கும் நாடுகளில் பொருளாதாரத்தில் ஏற்படக் கூடிய சாதகமான தாக்கங்கள், பிரதான கடல்சார் பயனாளர்களின் தலையீடு, இந்தியப் பெருங்கடலை அமைதிக்காகப் பயன்படுத்தல், ஆசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வங்கியின் பங்களிப்பு, உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இவர்கள் இலங்கையின் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுடன் கலந்துரையாடல்களை மேற் கொண்டுள்ளனர்.

இலங்கையின் முன்னாள் இராஜதந்திரி பேனாட் குணதிலக தலைமையிலான பாத் பைன்டர் அமைப்புடனும் இந்தக் குழுவினர் கலந்துரையாடியுள்ளனர்.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும், கூட்டுக் கற்கைகள் மற்றும் வளவாளர்களை பரிமாற்றம் செய்து கொள்வது குறித்தும் கலந்துரை யாடப்பட்டுள்ளது. (த)

# மக்கள் கோரிக்கைக்கு ஏற்பவே புதிய கட்சி

## பசில் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, செப் 27

புதிய அரசியல் கட்சியொன்று அவசியம் என மக்கள் குறிப்பிடுகின்றனர். இவர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதீய கட்சியொன்றை நாம் உருவாக்குவோம் என முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நிவித்திகல, கரவிட பகுதியில் கூட்டமொன்றில் உரையாற்றும்போதே பசில் ராஜபக்ச இதனைத் தெரி வித்தார்.

சிலர் எப்போது கட்சி உருவாக்கப்படும் எனக் கேட்கின்றனர். அந்த நாள் குறித்து யாருக் கும் சொல்லத் தேவையில்லை. இருப்பினும், நல்லாட்சி அரசு முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளின் காரணமாக அந்த நாள் மிக அண்மையில் வந்து கொண்டிருக்கின்றது எனவும் அவர் கூறினார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் இன்று ஆரம்பம்

கொழும்பு, செப்.27
சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு முன்னெடுக்கும் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் நாடு முழுவதும் இன்று ஆரம் பமாகி எதிர்வரும் ஒக்ரோபர் 3ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.
வடக்கு மாகாணத்தின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வார ஆரம்ப நிகழ்வு யாழ். மாநகரசபை திறந்த வெளியில் இன்று காலை 7.30 மணிக்கு இடம் பெறும்.
வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண ஆளுநர் அ.பத்திநாதன், சுகாதாரத்திணைக்கள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் பீ.ஜீ.மகிபால, பொது சுகாதாரப் பிரிவு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத் துவர் சரத் அமுனுகம ஆகி யோர் கலந்து கொள்வர்.
சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்னவின் பணிப் புரையின்கீழ் நடைபெறும் இந்தப் பணியில் ஜனாதிபதி செயலணி, முப்படைகள், பொலிஸ், சிவில் அமைப்புகள் மற்றும் சுகாதார அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.
டெங்கு நுளம்புகளின் தீவிரத்தைப் பொறுத்து நாடெங்குமுள்ள 346 சுகாதார வைத்திய அதிகாரிகளின் வலயங்கள் மிக ஆபத்தானவை, ஆபத்தானவை, மற்றும் குறைந்த ஆபத்தைக் கொண்டவை என்ற மூன்று வலயங்களாகப் பிரிக்கப்பட்டு அதற்கேற்ப ஒழிப்பு நடவடிக்கை கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, இரத் தினபுரி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் உட்பட 26 வலயங்கள் அதி தீவிரமானவை என இனங்காணப்பட்டுள்ளன. (த)

## வெல்கமவுக்கு எதிரானவழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, செப்.27
நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு, நவம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.
இந்த வழக்கு, கொழும்பு மேலதிக நீதிவான் அருணி ஆட்டிகல முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.
கடந்த அரசில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு, பிரதி ஆணையாளர்களை நியமித்துச் சட்ட விரோதமான முறையில் அவர்களுக்குச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்கியமையால் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 32 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டிய இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு, அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## லசந்தவின் சடலம் இன்று காலை தோண்டப்படும்

கொழும்பு, செப்.27
சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் சடலம் இன்று பொரளை கனத்தை மயானத்தில் இருந்து மீளத் தோண்டி எடுக்கப்படும்.
குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை அதிகாரிகள் கல்கிசை நீதிவான் நீதிமன்றில் விடுத்த கோரிக்கைகளுக்கு அமைவாக கல்கிசை நீதிவான் மொஹம்மட் சஹாப்தீனின் உத்தரவுக்கு அமைவாகச் சடலம் இன்று தோண்டி எடுக்கப்படும்.
கொழும்பு மேலதிக நீதிவான் மொஹம்மட் மிஹால் முன்னிலையில் இன்று காலை 8.30 மணிக்குச் சடலம் தோண்டி எடுக்கப்படவுள்ள நிலையில் லசந்தவின் கல்லறைக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (த)

## 100 பவுண் நகையுடன் ஹெரோயின் மன்னன்

*கொழும்பில் கைதானார்*

கொழும்பு, செப்.27
கொழும்பு நகரின் ஹெரோயின் மன்னர்களில் ஒருவராகக் கணிக்கப்படும் பாதாள உலகப் புள்ளியான பொரளை பிம்சர நேற்று முன்தினம் பம்பலப்பிட்டியில் போதை ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுச் சோதனை யிடப்பட்டபோது, அவர் 15 தங்கச் சங்கிலிகளுடன் மொத்த மாக நூறு பவுண் தங்க நகைகளை அணிந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.
ஹெரோயின் விற்பனை தொடர்பில் தற்போது சிறையில் இருக்கும் ஆமி சம்பத்தின் பிரதான சகாவான பொரளை பிம்சரவுக்கு பொரளை மற்றும் கிராண்ட்பாஸ் பிரதேசங்களில் துப்பாக்கிச் சூடு செய்தமை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் கொழும்பு மேல்நீதிமன்றத்திலும் மாவட்ட நீதிமன்றத்திலும் பல பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.
தென் கொழும்பு போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் சுமார் ஆறுமாத காலம் இவரது நடமாட்டத்தை இரகசியமாகக் கண்காணித்து வந்த பின்னரே, இவர் பம்பலப்பிட்டியில் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.
சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு இவர் அதி சொகுசு வாகனமொன்றில் தெமட்டகொட பேஸ்லைன் வீதியில் சென்றுகொண்டிருந்தபோது தெமட்டகொட சமிந்தவின் சகாக்கள் வாகனத்தின் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டபோது இவர் வாகனத்தைக் கைவிட்டு விட்டு ஓடித் தப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)



## பொகவந்தலாவவில் பெரும் போராட்டம்

கொழும்பு, செப்.27
முதலாளிமார் சம்மேளனத்திற்கு எதிராக, நேற்றுக் காலை பொகவந்தலாவ - ஹற்றன் பிரதான வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
பெருந்தோட்ட தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தம் நிறைவடைந்து இரண்டு வருடங்கள் முடிவடையும் தறுவாயில், தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வை வழங்க முதலாளிமார் சம்மேளனம் மறுப்புத் தெரிவித்து வருகிறது.
இந்தநிலையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்குமாறு கோரியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
இதனால் சில மணித்தியாலங்கள் ஹற்றன் - பொகவந்தலாவ பிரதான வீதியின் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டிருந்தது.
இந்த ஆர்ப்பாட்டத்தில் பொகவந்தலாவ கீழ்பிரிவு, மேற்பிரிவு, டின்சன், கொட்டியாகலை, கெம்பியன் ஆகிய தோட்ட மக்கள் ஈடுபட்டுள்ளதோடு, சுமார் 1000கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். (த)

# இரு பிளாஸ்ரிக் பரல்களுடன் கரை சேர்ந்த இலங்கையர்கள்

## விசாரணைகளை ஆரம்பித்தது தமிழக பொலிஸ்

சென்னை, செப்.27
கடலில் பிளாஸ்ரிக் பரல்களைப் பிடித்தபடி தமிழகத்தை அடைந்த இலங்கையர்கள் இருவர் குறித்த விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டம், சோழியக்குடி கடற்பகுதியில், தேவிபட்டினம் மரைன் பொலிஸார், நேற்றுமுன்தினம் அதிகாலை ரோந்து சென்றபோது பிளாஸ்ரிக் பரல்களைப் பிடித்துக் கரை சேர்ந்த, இருவர் கைதுசெய்யப்பட்டதாகத் தமிழக ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.
குறித்த நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரைணகளின் அடிப்படையில் அவர்கள் கார்த்திக் (வயது-23), சாந்தகுமார் (வயது-42), எனத் தெரியவந்தது.
கடந்த 1992 இல் இலங்கை, திருகோணமலையில் இருந்து தமிழகத்துக்கு அகதியாக வந்த இவர்கள் சென்னை, முகப்பேரில் வெளிப்பதிவில் தங்கி, விசைப்படகு பழுது பார்க்கும் தொழில் செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.
சில நாள்களுக்கு முன், காரங்காடு கடற் பகுதியில் பழுதான பிரிட்டோ என்பவரின் விசைப் படகைச் சரி செய்தபோது தண்ணீர் புகுந்து படகு நீரில் மூழ்கியது. தண்ணீரில் தத்தளித்த இருவரும் பிளாஸ்ரிக் பரல்களைப் பிடித்து நீந்திக் கரை சேர்ந்ததாகக் கூறப்பட்டது. ஆனால், அவர்கள் கூறியது நம்பும்படியாக இல்லாததால் படகு உரிமையாளர் பிரிட்டோவிடம் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.
கடந்த, 2014 ஒகஸ்ட் மாதம் திருச்சி, கொட்டப்பட்டு அகதிகள் முகாமில் இருந்து சயனைட் குப்பிகள், இலங்கை நாணயங்களுடன் இலங்கைக்குத் தப்ப முயன்ற விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரும், சில மாதங்களுக்கு முன் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.
அத்துடன் தொண்டி, தேவிபட்டினம் உள்ளிட்ட கடற்பகுதிகளில் இருந்து டீசல், பெற்றோல், கடல் அட்டை, மருந்துப் பொருள்கள் இலங்கைக்கு அடிக்கடி கடத்தப்படுகின்றன.
தற்போது சிக்கிய, இரண்டு பேரும் கடத்தல்பொருள்களுடன் இலங்கைக்குத் தப்ப முயன்றிருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர் எனத் தமிழக செய்திகள் சுட்டிக்காட்டியுள்ளன. (த)

## ஒக்ரோபர் 8ஆம் திகதி கட்சி தொடங்கவில்லை

*கூறுகின்றார் மகிந்த ராஜபக்ச*

கொழும்பு, செப்.27
எகலியகொடவில் எதிர்வரும் ஒக்ரோபர் 8ஆம் திகதி நடக்கவுள்ள கூட்டு எதிரணியின் பேரணியில் புதிய கட்சியை ஆரம்பிக்கும் திட்டம் இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
பிலிமத்தலாவ உரபொல விகாரையில் நேற்று முன்தினம் வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர், செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.
புதிய கட்சியை உருவாக்குவது குறித்து மக்களே முடிவு செய்ய வேண்டும். புதிய கட்சியை உருவாக்குவதற்காக எதிர்வரும் ஒக்ரோபர் 8ஆம் திகதி கூட்டு எதிரணி பேரணியை நடத்தவில்லை என்றும் அவர் கூறினார்.



எகலியகொட கூட்டத் தில், புதிய கட்சி ஆரம்பிக்கப் படவுள்ளதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்த நிலை யிலேயே மகிந்த ராஜபக்ச இவ்வாறு கூறியுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எழும் அச்சம்!

இலங்கை மீண்டும் வன்முறை நோக்கிய இன முரண்பாட்டுப் பாதையில் அடியெடுத்து வைத்திருக்கிறதா என்ற சந்தேகம் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களில் கிளம்பியுள்ளது. வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் சனியன்று நடந்த ஊர்வலத்தைத் தொடர்ந்தே இந்தச் சந்தேகம்.

தமிழீழம் நோக்கிய பாதைக்கான முதற்படி இந்த ஊர்வலம் எனச் சமூக ஊடகங்களில் தெரிவிக்கப்படும் கருத்துகள் அவர்களின் அக்கறையைத் தூண்டியுள்ளன. இராஜதந்திர வட்டாரங்களின் அக்கறையை மட்டுமல்ல, புலனாய்வு மற்றும் படைத் துறையின் அக்கறையையும் இது ஈர்க்கும் என்பது உணரப்பட முடியாததல்ல.

ஒன்றை விஞ்ச இன்னொன்று தீவிரப் போக்கைக் கையிலெடுக்கும்போது, நிலமை நிச்சயம் முதலமைச்சரின் கையை மீறிப்போகும். மீண்டும் வன்முறைக்குள் தமிழர்கள் தள்ளப்படும் சாத்தியத்தை அது தீவிரமாக்கும். அதற்கான அறிகுறி ஏற்கனவே தெரியத் தொடங்கியிருக்கிறது.

தாம் நடத்திய ஊர்வலம் கொழும்பு அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் எதிரானதல்ல என்று விக்னேஸ்வரன் சொன்னாலும்கூட, தெற்கு அரசியல்வாதிகள் அதற்கான எதிர்வினையை ஆத்திரத்துடனேயே பதிவு செய்திருக்கிறார்கள். அவர்களின் கருத்துக்கள், சிங்கள மக்களிடம் தமிழர்கள் தொடர்பான கிலேசத்தை அதிகப்படுத்த மகிந்தபோன்ற தீவிர தரப்புகளுக்கு உதவும்.

விக்னேஸ்வரனின் ஊர்வலத்திற்காக இராணுவ முகாம்களை அகற்றமுடியாது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார். இராணுவ முகாம்களை அகற்றும் முடிவை அரசு மீளப்பெற்றுக்கொள்ளும் நிலை வரும் என்றும், விக்னேஸ்வரனின் கருத்தால் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவுள்ள உரிமைகள் கிடைக்காமல் போகக்கூடும் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர எதிர்வுகூறியிருக்கிறார். இந்த ஊர்வலம் தொடர்பில் தெற்கு மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எச்சரித்துள்ளார்.

ஒருபடி மேலே போய், விக்னேஸ்வரனைக் கைது செய்யவேண்டும் என்று உதய கம்மன்பில குரல் எழுப்புகிறார். தெற்கில் இனவாதத்தைத் தூண்டுவதுதான் விக்னேஸ்வரனின் தேவை என்று ஜேவிபி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

எனவே, தமிழர்களுக்கு எதிராகத் தீவிரத்தைக் கக்கக்கூடியவர்களுக்கு இப்போது அவல் கிடைத்திருக்கிறது என்பது வெளிப்படை. அதுபோலவே, நொண்டிக் குதிரைக்குச் சறுக்கியது சாட்டு என்பதாக அரசுக்கும் ஒரு சாட்டுக் கிடைத்திருக்கிறது. எல்லாத் தாமதங்களுக்கும் பழிபோடுவதற்கு ஒரு தரப்புக் கிடைத்துவிட்டது. விக்னேஸ்வரனின் ஊர்வலத்தால் சிங்கள மக்களிடம் ஏற்பட்டுள்ள அச்சம் எதையும் விரைவாகச் செய்ய விடுவதாயில்லை என்று இனி அரசும் சாட்டுச் சொல்ல ஆரம்பிக்கும்.

இது தமிழர்களிடம் மீண்டும் கோபத்தைக் கிளறும். இரு பக்கமும் மாறிமாறிக் கோபம் வளரும்போது, வன்முறைப் பாதை தானே திறக்கும். இந்த நிலையைக் கட்டுப்படுத்தி தனது ஆணையின் கீழ் வைத்திருக்கும் வல்லமை முதலமைச்சரிடமும் இல்லை. அத்தகைய ஒரு நிலை ஏற்பட்டால், முதலமைச்சரே அதற்குப் பொறுப்பேற்கவேண்டியவராகவும் இருப்பார். அவர் உருவாக்கிவிட்ட பிரச்சினையை அவரே தணிக்க முயற்சிப்பதுதான் இப்போதைக்கு இருக்கக்கூடிய ஒரே வழி.

> இலங்கையின் முதற் பிரதமரான காலஞ்சென்ற டி.எஸ். சேனநாயக்கா, தனது அரசில் தமிழ் அமைச்சர்களாக இருந்தவர்களின் துணையுடன் கல்லோயாக் குடியேற்றத்தை நிறைவேற்றினார். இதன் மூலம் கிழக்கு மாகாணத்திலே மூன்றிலொரு பங்கு சனத்தொகையாக சிங்கள இனம் மாறியுள்ளது. கிழக்கு மாகாண மொத்த சனத்தொகையில் 40 வீதமாக தமிழ் மக்களின் பலம் குறைந்து விட்டது.

**மு.ஈழத்தமிழ்மணி**

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் பதவிக்கு வந்த சிங்கள அரசுகள் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களைப் பறித்தெடுத்துச் சிங்கள மயமாக்குவதிலேயே குறியாக இருந்துள்ளன.

இலங்கையின் முதற் பிரதமரான காலஞ்சென்ற டி.எஸ். சேனநாயக்கா, தனது அரசில் தமிழ் அமைச்சர்களாக இருந்தவர்களின்துணையுடன்கல்லோயாக் குடியேற்றத்தை நிறைவேற்றினார். இதன் மூலம் கிழக்கு மாகாணத்திலே மூன்றிலொரு பங்கு சனத்தொகையாக சிங்கள இனம் மாறியுள்ளது. கிழக்கு மாகாண மொத்த சனத்தொகையில் 40 வீதமாக தமிழ் மக்களின் பலம் குறைந்து விட்டது.

போர் முடிவடைந்த பின்னரும், கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் நிலங்கள், திட்டமிட்டு அபகரிக்கப்பட்டு வருகின்றன. நில அபகரிப்பு என்பது இனவாத ரீதியிலான ஒரு நடவடிக்கையாகும். தமிழர் தாயகத்தில் இடம்பெற்று வருகின்ற நில ஆக்கிரமிப்பு , சிங்களக் குடியேற்றங்கள் என்பவற்றுக்கு மகிந்த அரசு துணையாயிருந்தது போல், நல்லாட்சி அரசும் அதற்குத் துணை போகின்றது.

போர் முடிந்த பின்னர், வடபகுதியையும் கிழக்கு மாகாணம் போல் சிங்கள மயமாக்குகின்ற திட்டத்தை முன்னாள் ஜனாதிபதியான ராஜபக்ச தரப்பினர் முன்னெடுக்க முயன்றனர் காணி அபகரிப்பு, படைமுகாம் விஸ்தரிப்பு, சிங்களக் குடியேற்றம் என நாளுக்கு நாள் இன்றைய நல்லாட்சி அரசிலும் திட்டமிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

1997ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு, வடக்கையும்– கிழக்கையும் நிலத் தொடர்பால் துண்டிக்கவும், 1984ஆம் ஆண்டே திட்டமிடப்பட்ட மகாவலி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தமிழ் மக்களை, சொந்த நிலங்களில் இருந்து விரட்டுவதிலும் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தது.

தமிழ் மக்களின் இதய பூமியாக விளங்குகின்ற மணலாற்றில் தனிக்கல்லு, டொலர்பாம், கென்பாம், ஜானகபுர ஆகிய தமிழ் பகுதிகளில் பரம்பரையாக வாழ்ந்த தமிழ் மக்கள் 1984 ஆம் ஆண்டு மகாவலி அபிவிருத்திச் சட்டத்தின்மூலம் வெளியேற்றப்பட்டு, சிங்கள மக்களை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசு குடியேற்றியது. மணலாற்றின் எல்லைப்புறமான பதவிபுர என்ற சிங்களக் கிராமம் உருவாக்கப்பட்டது. கென்பாம், டொலர்பாம், அரசினால் பறிக்கப்பட்டு சிறைச்சாலைத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டன.

மணலாறுப் பிரதேசத்தில் தனிக்கல்லுக் கிராமம் இருந்த இடத்தில், 'களுபாபுர' என்ற வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டு, அங்கு சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். அத்துடன் கொக்குத்தொடுவாய், கருநாட்டங்கேணி ஆகிய கிராமங்களும் , மகாவலி 'எல்' வலயத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய்ப் பகுதியில் 37 சிங்களக் குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்பட்டு, வெலிஓயா என்ற பிரதேச செயலகப் பிரிவும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளதாக மகிந்த அரசால் அப்போதைய முல்லைத்தீவு மாவட்டச் செயலருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தப் பிரிவில் எட்டுக் கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளடங்குகின்றன.

கொக்கிளாய் மேற்கு, கொக்கிளாய் கிழக்கு, ஆகிய பகுதிகளிலிருந்த தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டிருந்தனர்.

அநுராதபுர மாவட்டத்தின் சில பகுதிகளையும் முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளையும் இணைத்து வெலிஓயா பிரதேச செயலகம் ஒன்று ஜனகபுர பகுதியில் போருக்கு முன்பே இயங்கியதாக மகிந்த அரசால் முன்னர் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

1900 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்காக சிங்களத் தொழிலாளர்கள் முல்லைத்தீவுக்கு வந்து, மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

1965ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது வீடமைப்பு அமைச்சராக இருந்த ஆர். பிரேமதாசா மீனவக் குடியேற்றம் என்ற பெயரில் அந்த இடத்தை சிங்கள மக்க ளுக்குச் சொந்தமாக்கி விட்டார். அப்போது 38 சிங்களக் குடும் பங்களே இருந்ததாகப் புள்ளி விவரங்கள் ஊடாக அறிய முடிகிறது.

மகிந்த அரசு 2011 ஆம் ஆண்டு கொக்கிளாயில் 45 குடும்பங்களுக்கு உறுதிப்பத்திரம் வழங்கி, சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்திருந்தது. அன்று ஆரம்பிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் மண் பறிப்பு, ஏனைய பகுதிகளுக்கும் வியாபித்து, தற்போது ஐந்தாண்டுகளை நிறைவு செய்துள்ளது.

மகிந்த ஆட்சி முன்னெடுத்த மண் பறிப்பு நடவடிக்கையை மைத்திரி–ரணில் நல்லாட்சி அரசும் கூட்டுச் சேர்ந்து மேலும் மேலும் தீவிரப்படுத்தியிருக்கின்றது. மகிந்த அரசு, வடக்கு–கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக எந்தக்காலத்திலும் இணைந்திருக்கவேகூடாது என நீதிமன்ற உத்தரவின் மூலம் இருமாகாணங்களை வெவ்வேறாகப் பிரித்தெடுத்தது.

ஜனாதிபதியான மைத்திரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒன்று சேர்ந்த நல்லாட்சியில் முல்லைத்தீவு மாவட்டத் தமிழ் மக்களின் இருப்பை இல்லாதொழிக்கின்ற நேரடியானதும்–மறைமுகமானதுமான நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஈழத் தமிழர்கள் மத்தியில் இன்றுள்ள பிரச்சினைகளில் முல்லைத்தீவு மாவட்டம் பற்றிய விடயமும் உள்ளடங்கி விட்டது. முல்லைத்தீவு மாவட்டம் 2614 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவு நிலத்தைக் கொண்டிருக்கின்றது. ஆனால், இன்று 34 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு அரசினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட வெலி ஓயாப் பிரதேச செயலகப் பகுதியில் ஏறக்குறைய 10ஆயிரம் சிங்கள மக்கள் வாழ்கிறார்கள். ஆறாயிரத்து ஐந்நூறு ஏக்கர் தமிழ் மக்களின் நிலங்கள் திட்டமிட்டு அபகரிக்கப்பட்டு, இன்று சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

குடியேற்றம் என்ற பெயரில் முல்லைத்தீவின் தென்பகுதியிலும் பல நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. கரிப்பட்டமுறிப்பு, கூழாமுறிப்பு, புலிமைச்சி நாதகுளம், தச்சடம்பன் பகுதிகளில் வழங்கப்பட்டிருந்த எட்டாயிரம் ஏக்கர் விவசாய நிலம் இராணுவத்தினரால் உயர்பாதுகாப்பு வலயமாக் கப்பட்டுள்ளது. இந்த வயல் நிலங்களை நம்பியிருந்த 2500க்கு மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர். கேப்பாபிலவுப் பகுதியில் 1183 ஏக்கர் நிலம் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளது. அண்மையில் வடமாகாண சபை உறுப்பினரான து. ரவிகரன் அபாய எச்சரிக்கையொன்றை விடுத்திருந்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர் நிலங்கள் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வனவள பாதுகாப்புத் திணைக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால்

# இனப்பரம்பலை மாற்ற முயலும் அரசு!



களம், படைத்தரப்பினர் என முத்தரப்புகளால் மிக வேகமாக ஆக்கிரமிக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் பெரும் நிலப்பரப்பு தமிழ் மக்களிடம் இருந்து பறிபோய் விடுமெனவும் அவர் எச்சரித்திருந்தார்.

போர் முடிவடைந்த பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தை துண்டு போடுகின்ற நடவடிக்கையின் முக்கிய அம்சமாக தமிழ் மக்களுடைய காணிகள் யாவும் அபகரிக்கப்பட்டு, சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டன. அவ்வாறே வெலிஓயாப் பிரதேசமாக அந்தப் பிரதேசம் சிங்களப் பிர தேசமாக மாற்றப்பட்டது.

இன்று பௌத்த பிக்கு ஒருவர் எந்தவித அனுமதியுமின்றி ஓர் ஆண்டுக்கு மேலாக கொக்கிளாய்க் கிராமத்தில், பௌத்த விகாரையைப் பெரிய அளவில் நிறுவி வருகின்றார். பௌத்தர்கள் இல்லாத இடத்தில் திட்டமிட்டு விகாரையை அமைத்து வரு வது தொடர்பாக அரசதரப்பு மறை முகமாக அங்கீகாரத்தை வழங்கியிருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய், நாயாறு, வித்தியாபுரம், பேராறு, மன்னாகண்டல், மாங்குளம், வட்டுவாகல் உள்ளிட்ட ஒன்பது இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகள் பௌத்த மக்கள் வசிக்காத பகுதிகளாகும்.

இன்றுள்ள வடமாகாண ஆளுநர் வடக்கில் இந்துக் கோயில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் எனப் பிற மத வழிபாட்டிடங்கள் அதிகளவில் இருக்கின்றபோது, வட பகுதியில் பௌத்த விகாரைகள் ஏன் அமைக்க முடியாது? அதில் என்ன தவறு எனவும் கேள்வியெழுப்பியிருக்கின்றார்.

தமிழ் மக்களின் நிலங்களில் தமிழர்களை விரட்டியடித்த சிங்கள அரசுகள், அந்தக் காணிகளில் அடாத்தாகப் பௌத்த விகாரைகளையும், புத்தர் சிலைகளையும் அமைப்பதற்கு மகிந்த ஆட்சியைப்போன்றே, அதையொட்டி வந்த மைத்திரிபால சிறிசேன அரசும் முழு ஆதரவை மறுக்காமல் இன்றுவரை நல்கி வருகின்றது. வவுனியா மாவட்டத்திலும் சில தமிழ்க் கிராமங்கள் திட்டமிட்டு–ஆக்கிரமிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ். குடா நுழைவாசலான நாவற்குழியிலும் 2010 இலிருந்து தென்னிலங்கையிலிருந்து வந்து, தங்கியிருந்த பல சிங்களக் குடியேற்ற வாசிகள் இன்று அரச ஆதரவோடும், ஆசியோடும் நிரந்தரமாகத் தங்கி விட்டனர். வீடுகள், பௌத்த விகாரைகள் அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கின்ற முயற்சியில் மைத்திரி அரசும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. கடந்த வருட இறுதிப் பகுதியில் நயினாதீவு என்ற பாரம்பரிய தமிழ்ப் பெயரை 'நாகதீப' என்று சிங்களப் பெயராக மாற்ற வேண்டும் என குரல் எழுப்பப்பட்டிருந்ததுடன், கடற்பரப்பில் மிக உயரமான தொரு புத்தர் சிலையையும் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இது இனங்களுக்கிடையிலான முறுகலைத் தோற்றுவிக்கின்ற செயற்பாடாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு– கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்களுடைய வாக்குகளால் மைத்திரிபால சிறிசேன தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இன்று வடக்கு–கிழக்கு மாகாணங்களில் நடைபெற்று வருகின்ற அரசின் நடவடிக்கைகளை தமிழ் மக்களது பிரதிநிதிகள் எல்லோரும் கைகைட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்களா? இன்று கொக்கிளாய்ப் பிரதேசம் முழுவதும் தமிழர்களது கையைவிட்டு சிங்களவர்களின் பிடிக்குள் முழுமையாகச் சென்று கொண்டிருக்கின்றது. கொக்கிளாய்க் கிராமத்தின் முடிவிலிருந்து புல்மோட்டைக் கிராமம் தொடங்கி கிழக்கு மாகாணம் விரிவடைகின்றது. முல்லலைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் கிழக்குப் பக்கமாக மாவட்டத்தின் முடிவுக் கிராமமாக கொக்கிளாய் அமைந்திருக்கின்றது.

முழுமையாகக் கொக்கிளாய்ப் பிரதேசம் சிங்களப் பிரதேசமாக மாறுவதை வடபகுதி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களா?

நிலத்தையும், வளத்தையும், உரிமையையும் சுரண்டும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் நீண்டு செல்லாமல் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும். வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி, அனைத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் விரைந்து கொக்கிளாய்ப் பிரதேசத்தை காப்பாற்றியாக வேண்டும்.

## தவிச்ச முயல் அடிக்கும் போக்கைத் தடுத்து நிறுத்துவீர்களா?

யாழ். நகரில் பெருமளவிலான ஓட்டோக்கள் சேவையில் ஈடுபட்டு வரும் நிலையில், ஓட்டோச்சாரதிகளுக்கென தொழிற்சங்கங்கள் செயற்பட்டுவரும் நிலையிலும், ஏன் இன்னமும் ஓட்டோக்களில் மீற்றர் (கொடுப்பனவைக் கணக்கிடும் இயந்திரம்) அறிமுகப்படுத்தப்படவில்லை? இதனால் ஓட்டோக்களைத் தமது பயணங்களுக்குப் பயன்படுத்தும் பயணிகள், பல்வேறு வகைகளில் பாதிக்கப்படுவதை ஓட்டோ சங்கங்களும் மற்றும் இவ்வாறான நடைமுறைகளுக்குப் பொறுப்பானவர்களும் கண்டும் காணாமல் இருப்பதேன்? இது தொடர்பாக அண்மையில் எனக்கு ஏற்பட்ட அனுபவமொன்றை இங்கு குறிப்பிடுகின்றேன். கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று எனது நண்பரொருவர் விபத்தில் சிக்கி யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு இருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்தது. அவரை அவசரமாகப் பார்க்கப் புறப்பட்டபோது, ஆறுகால் மடத்தடியில் எனது மோட்டார் சைக்கிள் ரயர் காற்றுப்போய்விட்டதால், சைக்கிளை ஓர் கடைக்கு முன்னால் நிறுத்திவிட்டு, ஓர் ஓட்டோவை மறித்து அதில் பயணத்தைத் தொடர்ந்தேன். அவசரத்தில் ஓட்டோக் காரரிடம் நான் எவ்வளவு கூலி செலுத்தவேண்டும் என்று ஓட்டோவில் ஏறும்போதே கேட்க மறந்துவிட்டேன். வைத்தியசாலையை அடைந்ததும், ஓட்டோவை விட்டு இறங்கி கூலி எவ்வளவு செலுத்தவேண்டும் என்று கேட்டபோது, ஓட்டோ ஓட்டுநர் வழமையாக 400 ரூபா எடுக்கிறார்கள். நீங்கள் 350 ரூபா தாருங்கள் – என்றார். எனக்கு தலை சுற்றியது. ஏன் அவ்வளவு பணம் செலுத்தவேண்டும். கொஞ்சத்தூரம்தானே பயணம் மேற்கொண்டேன் என்று கேட்க, அவர் எனக்கு அடிக்காத குறையாய் கடுமையான வார்த்தையில் பதிலளித்தார். வேறு வழி இல்லாததால் அவர் கேட்ட பணத்தைக் கொடுத்துவிட்டு வைத்தியசாலையை நோக்கி ஓடினேன்.

தயவுசெய்து அப்பாவிகளைச் சுரண்டும் இதுபோன்ற தவிச்ச முயல் அடிக்கும் ஓட்டோ சாரதிகளது நியாயமற்ற செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த சகல ஓட்டோக்களுக்கும் மீற்றர் நடைமுறையை நடைமுறைப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட பயணி. எஸ்.குகன்

## 2015 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தொழில்நுட்ப பாட மாணவர்கள் பல்கலைக்கழக வாய்ப்பை இழக்க நேர்ந்ததேன்?

முன்னாள் ஜனாதிபதியால் தொடங்கப்பட்ட புதிய தொழில்நுட்ப பாடத்துக்கு பல்வேறு பாடப் பிரிவுகளில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு முன்னுரிமை கிடைக்கும் என்று பல கல்வி அதிகாரிகள் மற்றும் கல்விப்புலம்சார் அனுபவஸ்தர்கள் ஆசை வார்த்தை கூறியதால், கடந்த 2015 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பல மாணவர்கள் குறித்த பாடத்தைத் தெரிவு செய்திருந்தோம். தொழில்நுட்ப பாடத்தில் இருந்து 2000 மாணவர்களை பல்கலைக்கழகத்துக்குச் சேர்க்கவுள்ளதாக முதலிலும், 1500 மாணவர்களையே சேர்க்கப்போவதாக பின்னரும், கல்வி அதிகாரிகள் ஊடகங்களின் ஊடாக தெரிவித்தும் இருந்தனர். ஆனால் 1000 மாணவர்களைக்கூட குறித்த பாடநெறிக்குத் தெரிவு செய்யவில்லை. ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் 30இற்கும் குறைந்த மாணவர்களையே தெரிவுசெய்துள்ளனர்.

ஆகையால் தங்களுக்கும் குறித்த பாடநெறியில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்த்த பலருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. குறித்த இந்த நடைமுறைப் பிறழ்வு பற்றி பல ஊடகங்களுக்கு அறிவித்தும் எங்களுக்கான தீர்வு கிடைக்கவும் இல்லை. அதனை ஊடகங்கள் வெளியிடவும் இல்லை. சுட்டிக்காட்டி விமர்சிக்கவும் இல்லை. எனவே நீங்களாவது இந்த விடயம் தொடர்பாக அக்கறை எடுத்து, இது விடயத்தில் எமக்கு நியாயம் கிடைக்க, பிரயோகிக்க வேண்டிய அழுத்தங்களைப் பிரயோகித்து உதவுமாறு பாதிக்கப்பட்ட மாணவர்களாகிய நாம் வேண்டி நிற்கிறோம்.

எஸ்.நிரோஜன். கைதடி

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். இவை உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்து

இன்று 2016.0

பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் பேராதனை

எமது மாணவர்களைப் பாராட்டி



P.Vimalarajan Arali | I.Pirapu Uduththurai | J.Nisanthan Urumpirai | A.Siyamalan Karaveddy | K.Sathiyavino Vayavilaan | E.Kishokkumar Vatharawattai | A.Palasteepan Malvam | V.Kanchukan Nagarkovil | R.Krishnamokan Pannakam | K



V.Rajarupan Sandilipay | S.Rajeev Assaveli | T.Uthayanayaki Point pedro | K.Selvakumari Poonagari | N.Kajana Irupalai | A.Naveena Punnalaikkadduvan | A.Rejikka Karanavai | A.Sarmila Ilavaalai | A.Thayani Chavakatcheri



M.Manashvini Urumpirai | K.Majitha Sandilipay | M.Jebarebekka Valveddythurai | L.Tharshika Jaffna | L.Gayathiri Inuvil | L.Babitha Kondavil | K.Thivya Kantharmadam | K.Thavappriya Karainager | K.Tharsa Puttur | K



M.Mithila- Point pedro | M.Nirosha Nelliyady | N.Dohini Sandilipay | N.Privatharsiny Aanaikkoddai | N.Rajitha Ilavalai | N.Puraveena Alaveddy | A.Julilijena Jaffna | R.Reniya Manipai





S.Sasikalaa Assuveli | P.Gowsiya Inuvil | P.Karthika Meesalai | P.Keerthiga Puttur | P.Maalini Achelu | P.Kosala Moolai | P.Nijanthiny Siththankeny | S.Sureka Aanaikkoddai



P.Sivarajani Polikandy | P.Sutharshini Chuliputam | R.Anusha Mallakam | R.Nirojini Alaveddy | R.Pamila Valvedditthurai | R.Rahinikka Karaveddy | R.Rejithivya Pointpedro | R.Renuga Ivatkatchi | R.Sukuttha Kodikamam



S.Susinthira Mullaitivu | S.Sumithira Inuvil | S.Suganya Kantharodai | S.Sivalenuga Moozhaai | S.Sinthuya Kokkuvil | S.Selvaraajini Thampaalai | S.Roshani Kalviyankadu | S.Roopana Kantharodai | S.Rishivathana Karainakar



V.Vaasana Meesalai | V.Suwathika Aanaippanthy | V.Surega Sandilipay | V.Shopana Madduvil | V.Nagasothy Sulipuram | V.Anitha Kondavil | T.Niroja Moolai | T.Thulasiga Kokkuvil | T.Sujaany Chunnakam



V.Vinothiny Thunnalai | Y.Mukunthini Navaali | Y.Narmitha Chavakatcheri | Y.Nithya [illegible] | [illegible] | [illegible]Krushanthiny Inuvil | T.Thanusnya Puttur | T.Thanuja Alvai | T.Suthuya Sulipuram

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

**2016.09.27**

**ராதனை பல்கலைக்கழக (வெளிவாரி) கலைமாணி பட்டம் பெறும்**

**ராட்டி வாழ்த்துகின்றோம்.**



mokan / am — K.Karunakaran, Sillalai — K.Kayavarathan, Poonagary — S.Pakeerathan, Puandiyankulan — S.Saparithan, Pannalai — S.Sivaganesan, Alvaai — S.Sivakumaran, Kaithadi — A.Trulckumaran, Sulipuram — T.Mayooran, Uduvil — T.Selvarupan, Thumpalai



ani / cheri — A.Vijayagowri, Karaveddy — C.Bakeerathy, Karaveddy — E.Sobetha, Vaatharawattai — G.Jenova, Achelu — G.Piruntha, Chavakatcheri — I.Pavitha, Meesalai — J.Jasho, Valvedditthurai — J.Jashotha, Thampasiddy — Y.Keerthika, Thellippalai



sa — K.Thangkaleela, Karaveddy — K.Thamiliny, Alaippiddy — K.Sathiyabbriya, Meesalai — K.Papitharaka, Kokkuvil — K.Nathiya, Kodikamam — K.Kanitha, Thampaddy — K.Kamsiya, Kaithady — K.Jasintha, Chavakatcheri — K.Janopa, Mirusuvil





Atheepa, Neliyadi — N.Rosika, Chunnakam — N.Sarmila, Vasavizhan — N.Sarmila, Oaddumadam — N.Sithrappriya, Meesalai — N.Sureka, Pandatharippu — N.Vaasuki, Ilavalai



P.Mervjenitra, Allarai — Ajanthini, Jaffna — P.Priya, Karainagar — P.Rathanika, Madduvil — P.Selvarani, Chavakatcheri — P.Sinthuya, Keyts



m — T.Rhushyanthy, Vaatharawattai — S.Arulselvy, Jaffna — S.Eakeerathy, Kalviyankadu — S.Dasotha, Sandilipay — S.Gowsalyathevi, Pointpedro — S.Jasotha, Koppay — S.Jonithira, Aarukalmadam — S.Kapilini, Manipay — S.Kopitha, Kamparmalai



ana / r — S.Rathika, Varani — S.Piraveena, Puloly — S.Pangusha, Neerveli — S.Pamini, Iyakkatchi — S.Nithya, Karaveddy — S.Nirojiny, Sempiyanpattru — S.Miraya, Kalviyankadu — S.Majuri, Pannalai — S.Majipa, Usan



n — T.Sriranchini, Polikandy — T.Ratha, Pointpedro — T.Nishanthy, Meesalai — T.Mayoory, Kondavil — T.Kajurina, Arali — K.Sooriya, Jeyapuram — S.Thuvaraka, Aavarangal — S.Theepika, Jaffna — S.Thadsha, Jaffna



T.Ravishanthi, Thirunelvely — T.Priyanthi, Polikandy — T.Nirutha, Tellippalai — T.[illegible], Puloly — T.[illegible], Iruppalai — S.Vinothini, VKokkuvil — S.Thushyanthy, Moolaai — S.Thanalaxmy, Kodikamam

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திசைகளும் தீபங்களும்



நாம் அன்றாடம் காலையும் மாலையும் பூசை அறையில் தீபம் ஏற்றி ஆண்டவனை வணங்குகிறோம். இவ்வாறு ஏற்றும் தீபங்களை எவ்வாறு ஏற்றவேண்டும் என்று ஐதீகம் உண்டு. தீபம் ஏற்றும்போது கிழக்குத் திசையில் உள்ள முகத்தை மட்டுமே ஏற்றினால் நம்மைத் தொடரும் துன்பங்கள் நீங்குவதுடன் மக்களிடையே நன்மதிப்பும் கிடைக்கும்.

மேற்குத் திசையில் உள்ள முகத்தை மட்டும் ஏற்றினால் சகோதரர்களிடையே ஒற்றுமை ஏற்படும், கடன் தொல்லைகள் விலகும்.

சர்வ மங்களமும், பெரும் செல்வமும் வேண்டுவோர் வட திசையில் உள்ள முகத்தை ஏற்ற வேண்டும்.

தென் திசையில் உள்ள முகத்தை ஒரு போதும் ஏற்றக்கூடாது. எதிர்பாராத தொல்லைகளும், கடன்களும் பாவங்களும் கூடும்.

திரிகளின் வகைகளும் அவை தரும் பயன்கள் பற்றியும் பார்க்கலாம்.

சுகங்களைக் கூட்டும் தன்மை கொண்டது தான் பஞ்சுத்திரி.

முற்பிறவியின் பாவங்களை அகற்றி-செல்வத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்றால் தாமரைத் தண்டுத் திரி போட்டு விளக்கேற்ற வேண்டும்.

மழலைப் பேறில்லையே என ஏங்குவோர் வாழைத்தண்டு திரிபோட்டு விளக்கேற்ற வேண்டும். செய்வினைகள் நீங்கவும், நீடித்த ஆயுள் பெறவும் வெள்ளெருக்குப் பட்டைத் திரியில் விளக்கேற்ற வேண்டும். முழுமுதற் கடவுளான கணேசப் பெருமானுக்கும் உகந்தது இது.

தம்பதிகள் மனமொத்து வாழவும் மகப்பேறு பெறவும் மஞ்சள் நிறங்கொண்ட புதிய திரி போட்டு விளக்கேற்ற வேண்டும்.

திரியுடன் எண்ணெயிட்டால்தானே தீபம் எரியும்?

எந்த எண்ணெயிட்டாலும் விளக்கு எரியும் தான். ஆனால் பயன்? நலம் வேண்டி நாம் விளக்கேற்றும்போது அதில் விடும் எண்ணெயினால் பயன்கள் நேரெதிராகும் வாய்ப்புக்கள் உண்டு.

ஏதோ இருக்கும் எண்ணெயை ஊற்றி விளக்கு ஏற்றுதல் என்பது மிகவும் தவறான ஒன்று.

கிரக தோசங்கள் விலகி சுகம் பெற சுத்தமான பசு நெய்யினால் தீபம் ஏற்ற வேண்டும்.

கணவன் மனைவி உறவு நலம் பெறவும், மற்றவர்களின் உதவி பெறவும் வேப்பெண்ணெய் தீபம் உகந்தது.

அவரவர்கள் தங்கள் குல தெய்வத்தின் முழு அருளையும் பெற வழி செய்வது ஆமணக்கு எண்ணெய் தீபம்.

எள் எண்ணெய் (நல்லெண்ணெய்) தீபம் என்றுமே ஆண்டவனுக்கு உகந்தது. நவக்கிரகங்களைத் திருப்தி செய்யவும் ஏற்றது.

மனதில் தெளிவும், உறுதியும் ஏற்பட வேண்டுவோர் சுத்தமான தேங்காய் எண்ணெய் கொண்டு தீபமேற்ற வேண்டும்.

செல்வங்கள் அனைத்தையும் பெற விரும்புவோர் வேப்பெண்ணெய், இலுப்பை எண்ணெய், நெய் மூன்றையும் கலந்து தீபம் ஏற்ற வேண்டும்.

மந்திர சித்தி பெற வேண்டுவோர் விளக்கெண்ணெய், இலுப்பை எண்ணெய், நெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய ஐந்து எண்ணெய்களையும் கலந்து விளக்கேற்ற வேண்டும்.

# பலவீனங்களைப் பலவீனமாக்குவோம்

சி. நற்குணலிங்கம்

எம்மை அழிவுக்கு இட்டுச் செல்லும் பலவீனங்கள் எமக்குள் காணப்படுகின்றன. திடீர் கோபம், சந்தேகப்படல்,சிறிய விடயத்துக்கும் பெரிதாகக் கவலை கொள்ளல் , பதற்றமடைதல், மறைந்திருக்க முயற்சித்தல் கவலைகளைப் போக்க புகைத்தல்,மது அருந்துதல்,விரைவில் முரண்படல் பாதகமாகத் தீர்மானம் எடுத்தல், எதற்கும் அவசரப்படல், தேவையில்லாது மற்றவர்களைக் கேலி செய்தல் இவை எம்மிடத்தில் காணப்படக்கூடியபலவீனங்களாகும். இந்தப் பலவீனங்களால் எந்தவித நன்மைகளும் எவருக்கும் கிடைக்கப் போவதில்லை. நாம் எமக்குள் காணப்படுகின்ற பலவீனங்களை இனங்கண்டு அவற்றை அகற்றிக் கொள்ள வேண்டும்.இல்லையேல் பாதகமான விளைவுகளையே எதிர்கொள்ள நேரிடும்.

பலவீனங்கள் எமது மனதிலிருந்து பிறக்கின்றன. மனதை வெறுமையாக வைத்திருக்கக் கூடாது. வெறுமையாகக்காணப்படின் தீயவைகள் மிகவிரைவாக அந்த இடத்தைநிரப்பிக்கொள்ளும். நல்ல சிந்தனைகளை மனதில் நிரப்ப வேண்டும்.விரக்தி காரணமாக அந்த இடத்தை தீயசிந்தனைகள் நிரப்பிக் கொள்ள இடமளிக்கக்கூடாது. அவை தான் பலவீனங்களாகும் .எல்லா மனிதரிடமும் பலம், பலவீனம் இரண்டுமே காணப்படும். பலத்தை முதலில் உணருவதன் மூலம் பலவீனங்களை அலட்சியப்படுத்தலாம். பலத்தைச் செயற்படுத்தும்போது பலவீனம் பலவீனமடைந்துபோய்விடும். தவறின் பலவீனங்களால் நாம் பலவீனமடைவோம்.

பலவீனங்கள் பாதகமான விளைவுகளையே தோற்றுவிக்கும். நாளுக்கு நாள் வளர்ந்து வரும் சமூகத்துக்கு நற்பண்புகளின் பங்களிப்பு மிகவும் முக்கியம். நற்பண்புகள் குறைவடைந்து செல்லும்போது சமூகச் சூழலும் சீரழிந்து போவது தவிர்க்க முடியாததாகி விடும். நற்பண்புள்ளவர்களைச் சமூகம் என்றும் ஆதரிக்கும். மாறாக பலவீனமான பண்புடையோர் சமூகத்திலிருந்து தூர விலக்கப்படுவர்

பலவீனங்கள் குடும்ப உறவை, சமூக நேசிப்பை, குடும்ப மகிழ்வை , உறவினர் உறவை, நல்ல நண்பர்களது உறவாடலை , உடல் ஆரோக்கியத்தை, உளநலத்தை; நற்பண்புகளை மிக விரைவில் பாதிப்புக்கு



உள்ளாக்கும். அத்துடன் இந்தப் பாதிப்புக்களால் தலைவலி, தலைச்சுற்று, உடல் நடுக்கம் ,போதிய உறக்கமின்மை, சோர்வு ,எதிலும் நாட்டமின்மை, வெறுப்புணர்வு, தன்னம்பிக்கை இழத்தல், முடிவெடுப்பதில் சிரமம், தேவையற்ற பயம், கவனம் செலுத்துவதில் சிரமம் என்பன ஏற்படும். இவை ஆரோக்கிய வாழ்வுக்கு உகந்தவை அல்ல.

பலவீனங்களைத் தம்வசம் வைத்திருப்போர் தமது சக்திகள் அனைத்தையும் படிப்படியாக இழந்து விடுவார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவை நம்மையும் அழித்து ... மற்றவர்களாலும் வெறுப்பில் ஒதுக்கப்பட்டு விடுவோம். அது மட்டுமன்றி நோய் எதிர்ப்பு சக்தியும் குறைவடையும். விரக்தி மேலோங்கும். பதற்றம் தோன்றும். இவை இறுதியில் மனநோய்க்கு வித்தாகி விடும். இவற்றால் சமூகச் சூழலும் சீரழிந்துபோவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

எமக்குப் பலவீனங்கள் ஏற்படும்போது நாம் மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டும், செயற்பட வேண்டும். இவற்றுக்கு எந்த நேரமும் ஆளாகக்கூடாது என்பதை மனதில் நிறுத்திக் கொள்ளவேண்டும். உணர்ச்சி வசப்படாமல் நிலமையைப் புரிந்து செயற்படும் சக்தியை வளர்த்துக் கொள்ளவேண்டும். முரண்பாடுகள் தோன்றும் வேளைகளில் அவை வாய்ச்சண்டையாக ஆரம்பித்தாலும் இறுதியில் வலுப்பெற்று உயிரிழப்புக்களையும் தோற்றுவிக்கின்றது. இந்தப் பலவீனத்திலிருந்து விடுபட விட்டுக்கொடுத்தல், பொறுமை, புரிதல், சகிப்புத்தன்மை, நலமான வார்த்தைப் பிரயோகம் போன்ற பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சிறு துக்கம், கவலைக்கும் புகைத்தல், மதுவை நாடுவதைத் தவிர்க்க வேண்டும். இந்தப் பழக்கம் சுடுகாடு வரை தொடரக் கூடியது. மனதை எப்போதும் உற்சாகத்துடனும், நட்புணர்வோடும், நேரிய சிந்தனையோடும் வைத்திருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். உற்சாகத்தை உருவாக்கிக் கொள்ள மனிதன் எப்போதும் மகிழ்ச்சியான தருணங்களையே எண்ண வேண்டும். இதன் மூலம் புகைத்தல், மது பாவனை என்பவற்றையும் கைவிடலாம்.

மக்களுடன் உறவாடும்போது அவதானத்துடன் உறவாட வேண்டும். உணர்ச்சிவசப்படாமல் பொருத்தமான கருத்துக்களை மட்டும் பரிமாறிக் கொள்ள வேண்டும், அன்பான வார்த்தைகளைப் பேச வேண்டும், குறைகளைப் பேசாதிருத்தல் வேண்டும், சரியாகச் செவிமடுத்து உரையாட வேண்டும் இவற்றின் மூலம் பலவீனம் ஏற்படுவதைத் தவிர்த்து சமூக உறவை வளர்த்துக் கொள்வதுடன் பலப்படுத்தவும் முடியும். ஓய்வு வேளைகளில் பஜனையில் ஈடுபடுதல், நல்ல அறிவுள்ள நூல்களை, கட்டுரைகளை வாசித்தல், ஆன்மிகத்தில் ஈடுபடல் கூடா நட்பைத் தவிர்த்து நல்ல நண்பர்களுடன் தொடர்புபடுதல் என்பவற்றின் மூலம் பலவீனங்கள் களையப்படும். பலம் பலவீனத்தை அறிய, ஒப்பீட்டுச் சிந்தனை ஒரு கருவி. இதை மனித குல வளர்ச்சிக்கும் பிரயோகிக்கலாம். வாழ்க்கை என்பது இன்பமும், துன்பமும் கலந்த ஒன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியைத் தீர்மானிக்கும் வீதிகள்

சேரலாதன்

மனிதர்களுக்குச் சாவை ஏற்படுத்துவதில் வீதி விபத்துக்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன. இது எமது நாட்டுக்கு மட்டுமல்ல முழு உலகத்துக்குமே பொதுவான ஒன்று. வீதிகள் நவீன முறையில் அமைக்கப்பட்டு மிகச்சிறந்த தொழில் நுட்பத்துடன்கூடிய வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளபோதிலும் விபத்துக்கள் அதிகரித்துச் செல்கின்றனவே தவிர குறைவதாகத் தெரியவில்லை. ஆறறிவு படைத்த மனிதர்கள் சிந்திக்கும் திறனை இழந்து செயற்படுவதால் அனேகமான வீதி விபத்துக்களுக்குக் காரணமாகி விட்டனர்.

பல வருடங்களுக்கு முன்னர் கால் நடையாகவும், மாட்டு வண்டிகளிலும் சென்று மனிதர்கள் தாமதமாகத் தமது இலக்கை அடைந்த போதிலும், நிம்மதியாகவே பயணங்களை மேற்கொள்ள முடிந்தது. அப்போதெல்லாம் வீதிகள் விபத்துக்களை எதிர் கொண்டதில்லை. சீரில்லாத வீதிகளில் சிரமத்துடன் பயணித்த போதிலும், அன்று வாழ்ந்த மனிதர்களிடத்தில் மகிழ்ச்சி நிறைந்திருந்தது. ஆனால் இன்றைய நிலையில் வீதிகளில் நிம்மதியாகப் பயணிக்க முடியவில்லை. எந்த வேளையிலும் ஏதாவது நடந்து விடலாம் என்ற அச்சவுணர்வுதான் மேலோங்கிக் காணப்படுகின்றது. வீதியில் இறங்கி நடந்து செல்வது கூட அச்சத்தைக் கொடுக்கின்றது.

தமிழர் பகுதிகளில் போர் இடம்பெற்ற போது பாமரர் முதல் பல்கலைக்கழக உபவேந்தர் வரை சைக்கிள்களையே பயன்படுத்தினார்கள். அப்போதெல்லாம் சைக்கிள் பயணங்கள் சலிப்பைக் கொடுக்கவில்லை. இயற்கைக்கும் மாசு ஏற்படவில்லை. ஆனால், இன்றோ சைக்கிளைத் தொடுவதே பெரிய பாவச் செயலென எம்மில் பலர் நினைக்கின்றனர். அதில் பயணிப்பது கௌரவக் குறைவான செயலெனவும் இவர்கள் எண்ணுகின்றனர். சிறியரக மோட்டார் சைக்கிள்களைக்கூட இவர்கள் ஒதுக்கி வைத்து விடுகின்றனர். பெரியரக மேட்டார் சைக்கிள்களில் பயணம் செய்வதையே இவர்கள் பெருமையாகக் கருதுகின்றனர். இந்தச் சைக்கிள்களின் செவியை முறுக்கும்போது வீதியில் மட்டுமல்ல, மேல் உலகத்துக்கும் வேகமாகச் செல்ல முடிகின்றது.

தற்போது இடம்பெறுகின்ற வீதி விபத்துக்களுக்கு வாகனச் சாரதிகளின் கவனக்குறைவே பிரதான காரணமாக அமைந்துள்ளது. மிக இளவயதினர் வாகனங்களைச் செலுத்துவதைச் சாதாரணமாகவே தற்போது பார்க்க முடிகின்றது. 'இளங்கன்று பயமறியாது' என்பதற்கிணங்க இவர்கள் வாகனங்களை அதிவேகத்தில் விரட்டிச் செல்கின்றனர். அதிலும் மோட்டார் சைக்கிள்கள் இவர்களது கைகளில் சிக்கினால் சொல்லவே தேவையில்லை. இவர்கள் வருவதைக் கண்டதும் வீதிகளில் பயணிப்பவர்கள் பயத்தால் விதிர்விதித்து நடுங்குகின்றனர். மணிக்கு நூறு கிலோ மீற்றருக்குக் குறையாத வேகத்தில் இவர்கள் செல்வதைப் பார்க்கும்போது ஏதோ நடக்கப் போகின்றதென உள்மனம் எச்சரிக்கின்றது. அவ்வாறு நடப்பதும் சர்வசாதாரணமாக மாறிவிட்டது.

அண்மைக் காலமாக வீதிகளில் அவலமாக உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துவிட்டது. அதிகரித்த வாகனப் பாவனையை இதற்குக் காரணமாகக் கூறினாலும், இதற்கு வேறு காரணங்களும் இருக்கத்தான் செய்கின்றன. முன்னர் போன்று வீதிகளைக் குறை கூறுவதற்குத் தற்போது முடியவில்லை. ஏனென்றால் நாட்டின் பிரதானமான வீதிகள் யாவும் நவீன முறையில் புனரமைக்கப்பட்டுள்ளதுடன், உலகத்தரம் வாய்ந்தனவாகவும் காணப்படுகின்றன. வெளிநாட்டிலிருந்து வருபவர்கள்கூட, இங்குள்ள வீதிகளைப் புகழ்ந்து செல்வதைக் காண முடிகின்றது. இந்த நிலையில் வேறொரு இடத்தில் தான் தவறு இருப்பதை உணர முடிகின்றது. அண்மையில் கனடாவுக்குப் பயணமாக வேண்டியவர்களும் அவர்களது உறவினர்களும் சென்ற வாகனம் யானைமீது மோதியதால் ஏற்பட்ட இடரில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. வாகனச் சாரதியின் கவனக் குறைவினால் இந்த இடர் ஏற்பட்டுள்ளதை விசாரணைகள் புலப்படுத்துகின்றன. நள்ளிரவு நேரமாகையால் வாகனச் சாரதி தூக்கக் கலக்கத்தில் இருந்திருக்கலாம், பயணத்தை ஒழுங்கு செய்தவர்கள் சரியாகத் திட்டமிடுவதற்குத் தவறியமையும் இந்தத் துயரச் சம்பவத்துக்குக் காரணமாக அமைந்து விட்டது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சகோதரியின் திருமணத்துக்கென வெளிநாடொன்றிலிருந்து வந்த இளைஞரொருவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கித் தமது இன்னுயிரை இழந்ததால் அந்தக் குடும்பமே சோகத்தில் மூழ்கி நிற்கின்றது. இவ்வாறு பல சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

வீதிகள் பயணம் செய்கின்ற அனைவருக்குமே பொதுவானவை. அவற்றைப் பயன்படுத்துகின்றவர்கள் மற்றவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவேண்டும். ஆனால், பெரும்பாலானவர்கள் இதைக் கடைப்பிடிப்பதில்லை. வீதிகளைத் தமது வீட்டு முற்றங்களாகவே இவர்கள் கருதி நடந்து கொள்கின்றனர்.

முன்பெல்லாம் பெரிய வாகனங்களை அனுபவம்மிக்க சாரதிகளே செலுத்தினர். இவர்களில் பலர் போதிய கல்வியறிவு இல்லாதபோதிலும் சாரத்தியம் செய்வதற்கான நுணுக்கங்களில் தேர்ந்தவர்களாகவே காணப்பட்டனர். வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதில் வல்லவர்களாக இருந்தமையும் சிறப்பு அம்சமாகும். இவர்கள் பழைய ரக வாகனங்களில் வட பகுதியிலிருந்து கதிர்காமத்துக்கு எந்தவிதமான பாதிப்புமின்றி பக்தர்களை அழைத்துச் சென்றனர். கொழும்பு நகரின் வீதிகள் எல்லாம் இவர்களுக்கு அத்துப்படி. இத்தனைக்கும் எழுத வாசிக்கத் தெரியாதவர்களும் இந்தச் சாரதிகளில் அடங்கியிருந்தனர். ஆனால் இன்றைய நிலையில் இளைஞர்களே பெரும்பாலான வாகனங்களைச் செலுத்துகின்றனர். இவர்கள் படித்தவர்களும் கூட, ஆனால் வீதி விபத்துக்களுக்குக் குறைவில்லை.

அரச பஸ்களும், தனியார் பஸ்களும் கருடன், பாம்பு என்ற நிலையில் காணப்படுவது வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்குப் பிரதான காரணமாகிவிட்டது. தொழிலில் போட்டி ஏற்படத்தான் செய்யும். ஆனால், உயிர்களைக் காவு கொள்கின்ற அளவுக்கு அது இருப்பதுதான் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. தேவை இருக்கின்றதோ இல்லையோ அரச பஸ்ஸைத் தனியார் பஸ் துரத்திச் செல்வதும், தனியார் பஸ்ஸை அரச பஸ் கலைத்துச் செல்வதும் தினமும் வீதிகளில் காண்கின்ற காட்சிகளாகி விட்டன. இந்த பஸ்களின் சாரதிகள் ஒன்றையொன்று கண்டவுடன் ஒவ்வாமை நோய்க்கு ஆளானவர்களைப் போன்று தம்மை மறந்து ஆக்ரோசத்துடன் செயற்பட ஆரம்பித்து விடுகின்றனர். இவர்களின் போட்டா போட்டியில் பெறுமதிமிக்க உயிர்கள் வீணாக இழக்கப்படுகின்றன.

இளைஞரொருவர் தமது மோட்டார் சைக்கிளை எப்போதுமே அதிவேகமாகச் செலுத்துகின்ற பழக்கத்தைக் கொண்டிருந்தார். இதைப் பல நாள்கள் அவதானித்த அந்த இளைஞரின் தந்தையின் நண்பரொருவர் இது தொடர்பாகத் தந்தையிடம் விசாரித்தார். அதற்குக் கிடைத்த பதில் விசாரித்தவரை அதிர வைத்தது. எனது மகன் பயன்படுத்துகின்ற மோட்டார் சைக்கிளை அதிவேகத்தில் தான் செலுத்திச் செல்ல வேண்டும். குறைந்த வேகத்தில் செலுத்துதல் இயலாத காரியமாகும். இதுதான் அந்தத் தந்தையின் பதில்.

வீதிகளுக்கு வாயிருந்தால் ஆயிரம், ஆயிரம் கதைகளை அவற்றினால் சொல்ல முடியும். ஆனால் உள்ளுக்குள் புழுங்குவதைத் தவிர அவற்றினால் வேறென்ன செய்ய முடியும்?

மனிதர்களின் விதியைத் தீர்மானிக்கின்ற ஒரு சக்தியாக வீதிகள் அமைந்துள்ளதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஏனென்றால் பலரது விதிகள் வீதிகளில்தான் தீர்மானிக்கப்படுகின்றன.

தமிழர் பகுதிகளில் போர் இடம்பெற்ற போது பாமரர் முதல் பல்கலைக்கழக உபவேந்தர் வரை சைக்கிள்களையே பயன்படுத்தினார்கள். அப்போதெல்லாம் சைக்கிள் பயணங்கள் சலிப்பைக் கொடுக்கவில்லை. இயற்கைக்கும் மாசு ஏற்படவில்லை. ஆனால், இன்றோ சைக்கிளைத் தொடுவதே பெரிய பாவச் செயலென எம்மில் பலர் நினைக்கின்றனர். அதில் பயணிப்பது கௌரவக் குறைவான செயலெனவும் இவர்கள் எண்ணுகின்றனர். சிறியரக மோட்டார் சைக்கிள்களைக்கூட இவர்கள் ஒதுக்கி வைத்து விடுகின்றனர். பெரியரக மேட்டார் சைக்கிள்களில் பயணம் செய்வதையே இவர்கள் பெருமையாகக் கருதுகின்றனர். இந்தச் சைக்கிள்களின் செவியை முறுக்கும் போது வீதியில் மட்டுமல்ல, மேல் உலகத்துக்கும் வேகமாகச் செல்ல முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1821 - மெக்சிகோ ஸ்பெயினிடமிருந்து சுதந்திரமடைந்தது.

1825 - பொதுமக்களுக்கான முதலாவது நீராவியில் இயங்கும் புகையிரத்துக்கான ஸ்டொக்டோன் மற்றும் டார்லிங்ரன் புகையிரதப் பாதை சம்பிரதாயப்படி தொடங்கி வைக்கப்பட்டது.

1854 - SSஆர்க்ரிக் நீராவிக் கப்பல் 300 பேருடன் அத்லாந்திக் சமுத்திரத்தில் மூழ்கியது. இதுவே அத்லாந்திக் சமுத்திரத்தில் இடம்பெற்ற முதல் அனர்த்தமாகப் பதிவு.

1928 - சீனக்குடியரசு அமெரிக்காவால் அங்கீகரிக்கப்பட்டது.

1937 - பாலி புலி இனம் அழிந்து போயுள்ளதாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

1940 - இரண்டாம் உலகப் போர் பேர்லினில் முக்கூட்டு ஒப்பந்தத்தில் ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியன ஒப்பமிட்டன.

1959 - சூறாவளி காரணமாக ஜப்பானின் ஹொன்சு தீவில் 5000 பேர் வரை உயிரிழப்பு.

1961 - சியராலியோன் ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்து கொண்டது.

1962 - யேமன் அரபுக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது.

1988 - ஆங் சான் சூகியால் ஜனநாயக்கத்துக்கான தேசிய லீக் உருவாக்கப்பட்டதுடன் வேறு பலரும் மியான்மர் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக உதவ முன் வந்தனர்.

2002 - புலிகள் மீதான அரசின் நம்பிக்கையை பாலாவின் பதில்கள் பலப்படுத்தியுள்ளதாக அமைச்சர் பீரிஸ் வாய் நிறையப் பாராட்டு

2006 - தமிழ் மக்கள் பட்டினியால் இறப்பதைத் தடுக்க ஏ-9 பாதையை உடன் திறக்க வேண்டுமென சபையில் மாவை எம்.பி. கோரிக்கை

- இஸ்லாமிய தீவிரவாதிகள் என முத்திரை குத்துவதற்கு ஆட்சேபம். புலிகளை இந்துத் தீவிரவாதிகளென ஏன் அழைக்கக் கூடாதென்கிறார் முஷாரப்.
- ஏ-9 வீதியைத் திறப்பது சாத்தியமில்லையாம் மாற்றுப் பாதை குறித்து அரசு பரிசீலனை இராணுவப் பேச்சாளர் தகவல்.
- கேணல் சங்கரியின் நினைவு தினம்.
- சமாதானப் பேச்சுத் தொடர்பாக புதிய நம் பிக்கை; தலைவர் பிரபாகரனிடமிருந்து சாதகமான சமிக்ஞை வந்திருப்பதாக அரசு அறிவிப்பு.

# எல்லோரையும் மதித்து நடப்போம்..!

தரையில் எறும்பு ஒன்று மெல்ல ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. அப்போது பூரான் ஒன்றும் அதன் அருகாய் வந்தது.

எறும்பின் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து விட்டு "நண்பா...! நான் வருவதைக் கூடக் கவனிக்காமல் எங்கே சென்று கொண்டிருக்கிறாய்..?" என்று கேட்டது.

எறும்போ எந்தச் சங்கடமுமின்றி "பூரான் நண்பரே..! உம்மைக் கவனித்துக் கொண்டிருந்தால் என் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாது போய்விடும்..." என்று ஊர்ந்து கொண்டே சொன்னது.

பூரானோ விடுவதாக இல்லை "அப்படியென்ன முக்கியமான கடமையைச் செய்துகொண்டிருக்கிறீர்...?" என்று வினவியபடி தன்னுள் ஏளனமாய் புன்னகைத்தது.

எறும்பு ஊர்வதை நிறுத்தாமல் "மழைக்காலத்திற்குத் தேவையான உணவை வெயில் காலத்திலேயே தேடிச் சேர்த்து வைப்பதுவே என் கடமை. உன்னிடம் பேசிக் கொண்டிருந்தால் என் கடமையைச் செய்ய முடியாது போய்விடும்" என்று கூறியபடி சென்று விட்டது.

நல்லெண்ணமற்ற பூரான், எறும்பு தன்னை ஏமாற்றி விட்டதாகக் கருதியது. எறும்பை மட்டம் தட்டியே தீர வேண்டும் என்று நினைத்துக் கொண்டது.

மறுநாள் எறும்பு வரும் வழியில் காத்திருந்து அதை வழி மறித்தது. "எறும்பாரே, கடமையை சரிவரச் செய்வதால் மட்டும் நீர் வல்லவனாக முடியாது..! உன்னால் என்னைப் போன்று வேகமாக ஊர்ந்து வர முடியுமா..? அப்படி முடிந்தால் என்னை விடவல்லவன் என்பதை ஒத்துக் கொள்கிறேன்" என்று சவால் விட்டது.

அதற்குப் பதிலுரைத்த எறும்பு "வீண் பேச்சு வேண்டாமே பூரானாரே..! என் கடமைகளைச் செய்ய விடேன்" என்று பணிவாகக் கேட்டது.

பூரானோ விடுவதாக இல்லை. எறும்பாரே "எங்கே தப்பித்து ஓடப் பார்க்கிறீர்!" என்று கேலி செய்தது.

எறும்பு மனச்சலனமடையவில்லை. நிதானத்துடனும் மிக அமைதியுடனும் "பூரானே.. உன் அளவுக்கு வேகமாக என்னால் ஊர முடியாது என்பதை ஒத்துக் கொள் கிறேன். அந்த தைரியத்தில்தானே நீ பேசு கிறாய்.புரிகிறது..! ஆனால், நான் செய்யும் சில காரியங்களை உன்னாலும் செய்ய முடியாது. அதனால் எம்முள் யார் வலியவன் என்றஎண்ணமேலீடுதேவையற்றது.அதனைப் பரிசோதிக்கப் பரீட்சையெல்லாம் வேண்டாம்" என்று திரும்பவும் கூறியது.

பூரானோ இன்னமும் விடுவதாக இல்லை. "அப்படி என்ன சாகசத்தை நீ செய்துவிடப் போகிறாய். சாதூரியமாகப் பேசக் கற்று வைத்திருக்கிறாய்" என்று ஏளனம் செய்தது.

இனியும் பேச்சின் மூலம் எதனையும் நிரூபித்துக்காட்ட முடியாது என்பதனை எறும்பு உணர்ந்து கொண்டது. பூரானுக்கு எந்தப் பதிலையும் கூறாது செயலில் இறங்கத் தீர்மானித்தது. பூரானை ஒரு தண்ணீர்த் தொட்டியின் அருகாக அழைத்துச் சென்றது. பூரானாரே...! நான் செய்வதை வேடிக்கை பாரும் என்று சொல்லி விட்டுக் கரையின் அருகில் இருந்த ஒரு துரும்பில் தொற்றிக்கொண்டு தண்ணீரில் விழுந்தது. அந்தத் துரும்பைப் பற்றிக் கொண்டு தண்ணீரில் மிதந்தது. "உன்னால் இப்படிச் செய்து காட்ட முடியுமா பூரானே..?" என்று வினவியது.

பூரான் அமைதி காத்தது.தன் இயலாமையைப் புரிந்து கொண்டது.எல்லோருக்கும் சில வல்லமைகளும் சில இயலாமைகளும் இயற்கையிலேயே உண்டு என்பதனை உள்ளார உணர்ந்து புரிந்துகொண்டது. எறும்பிடம் நடந்தவற்றுக்கு மன்னிப்புக் கேட்டது.

அன்றிலிருந்து எறும்பின் கருத்துகளைச் செவிமடுத்து அதனை மதித்து நடக்கத் தொடங்கியது. அதற்குச் சிறந்த நண்பனாகவும் திகழ்ந்து வந்தது.

ஆக, குழந்தைகளே..! இக்கதையானது நம் அனைவருக்கும் ஒரு நல்ல பாடம். அனைவரையும் மதித்து நடப்போம்.அவர்களின்



கருத்துக்களையும் இன்முகத்தோடு கேட்டிருப்போம்.இறைவன் படைப்பிலே எல்லோரிடமும் வல்லமைகளும் உண்டு, சில இயலாமைகளும் உண்டு என்பதனை புரிந்து கொள்வோம்.எல்லோரையும் அனுசரித்து நடந்து கொள்வோம்..!



# பந்து

துள்ளி ஓடும் பந்து
தூரப் போகும் பந்து
மெல்ல உருளும் பந்து
மேக வண்ணப் பந்து

உள்ளம் மகிழும் பந்து
உருண்டோடும் பந்து
வண்ண வண்ணப் பந்து
வால் இல்லாப் பந்து

காற்று நிறைந்த பந்து
கால் இல்லாப் பந்து
வேற்று நாட்டுப் பந்து
வேகமாக ஓடும் பந்து

சிறுவர் மகிழும் பந்து
சிறந்த வண்ணப் பந்து
உலகம் ரசிக்கும் பந்து
உண்மையான உதை பந்து

– நகுலா சிவநாதன்



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்த வேறுபாடுகள்?

சமீபகாலமாக அமெரிக்காவில் இனபாகுபாட்டு வன்முறைகள் அதிகரித்துள்ளன. கறுப்பினத்தவர்களுக்கு எதிராக வெள்ளையர்களின் நடவடிக்கை இடம்பெற்றதை அடுத்து நாட்டின் பல பாகங்களிலும், பல்வேறுவகையான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றவாறு உள்ளன. உலகில் அமெரிக்கர்கள், ஐரோப்பியர்கள், ஆசியர்கள், ஆஸ்திரேலியர்கள் என்ற வேறுபாடுகள் உள்ளன. அவற்றிலும் பிரதானமானது வெள்ளையர்கள், கறுப்பினத்தவர்கள் என்ற வேறுபாடு. ஆபிரிக்கர்கள் உடல் பலம் பொருந்தியவர்கள், வெள்ளையர்கள் ஆட்சி செய்யும் மனபலம் உடையவர்கள். காலாகாலமாக ஆபிரிக்கர்களின் உழைப்பைச் சுரண்டித், தம்மையும்-தமது நாட்டையும் வெள்ளையர்கள் வளப்படுத்தினர்.

இரு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட அடிமைகளுக்கு, கழுத்தில் சிறிய உலோகத்தகட்டை மாட்டி, இலக்கமிட்டு அவர்களை அடையாளப்படுத்தினர். ஆபிரிக்கர்கள் தமக்கான பெயரை வைத்துக் கொள்ளக் கூடத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டனர். அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் இந்த நிலை மிக மோசமடைந்து காணப்பட்டது. விஞ்ஞானம், பொருளாதாரம், கலாசாரம், அரசியல், ஜனநாயகம் ஆகியவற்றின் வளர்ச்சி காரணமாக பாதி ஆபிரிக்கா, அமெரிக்கர் ஒருவர் அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்க காரணமாக அமைந்தது.

ஆனாலும், இன்னமும் இனவன்முறையும், அடக்கு முறைமையும் குறைந்தபாடாக இல்லை. ஆசியர்களாகிய எமக்கும் எந்த அங்கீகாரமும் இல்லை. நாம் அவர்களுக்குக் கீழே என்பது தான் உண்மை. ஆசியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான நாடுகள் சீனாவும், ஜப்பானும் ஆகும். தற்போது இந்தியாவும் இவற்றுக்கு அருகில் தன்னை தக்க வைக்கப் போராடி வருகின்றது. வெள்ளையர்கள்- கறுப்பினத்தவர்கள் என்ற பலமான இரு தரப்புகளுக்கும் இடையில் எமக்கான தனித்துவம் என்பது இல்லை. உலக அரசியலிலும், பொருளாதாரம், உற்பத்தித் திறன் ஆகியவற்றிலும் அவர்களிடம் கையேந்தியவர்களாக நாம் உள்ளோம். ஆசியர்கள் மேலைத்தேய மக்களால் அவதானிக்கப்பட்டது திரைப்படத் துறை மூலம்தான். அதற்கான பாலம் அமைத்தவர் புரூஸ்லி.

ஹொலிவூட் என்ற உலகப் புகழ்பெற்ற சினிமாத்துறையில் முதல் முறையாக புரூஸ்லியையும் துணைநாயகனாக வைத்துப் படம் எடுத்தனர். அந்தப் படம் வரலாற்றுச் சாதனைக்குரிய வசூலைப் பெற்றது. படம் வெளியாகி, 4 வாரங்களில் புரூஸ்லி மர்மமான முறையில் கொல்லப்பட்டார். அவரது சாவு இன்றும் புரியாத புதிராக உள்ளது. அதன் பின்னர் ஆசியாவில் இருந்து ஹொலிவூட்டில் தடம் பதித்தவர் ஜாக்கிசான். 10 க்கும் மேற்பட்ட ஹொலிவூட் திரைப்படங்களில் அவர் நடித்திருந்தாலும், அவர் ஒரு தடவை கூட ஒஸ்கார் விருதுக்குப் பரிந்துரைக்கப்படவில்லை. அத்துடன், அவருக்கு வழங்கப்பட்ட கதாபாத்திரங்கள் கீழ் மட்ட வேலை செய்பவராக இவரைச் சித்திரித்தன. ஆசியர்களை முதலாளி போன்ற கதாபாத்திரங்களில் ஹொலிவூட்டில் காட்டியது இல்லை என்ற கருத்தும் நிலவுகிறது.




இதற்கிடையில், ஒபாமா ஜனாதிபதி வேட்பாளராக இருந்தபோது, ஹொலிவூட் சூப்பர் ஸ்ரார் எனப்படும் வில் ஸ்மித்தின் ஆதரவில் வெற்றி பெற்றார் என்ற கருத்துக்களும் நிலவுகின்றன. வில் ஸ்மித் ஆபிரிக்க அமெரிக்கர் ஆவார். அவருக்கும் இன்னமும் ஒஸ்கார் விருது வழங்கப்படவில்லை. கடந்த வருட ஒஸ்கார் விருதை அவர் புறக்கணித்ததுடன், ஒஸ்கார் விருதுக்கு ஆபிரிக்கர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற கருத்தை மிக வெளிப்படையாக முன்வைத்தார். இதனால் கடந்த வருட ஒஸ்கார் விருது நிகழ்ச்சியைச் சில ஆபிரிக்க நடிகர்-நடிகைகள் புறக்கணித்தனர்.

இனப்பாகுபாடு ஒரு புறம் இருந்தாலும், இரு இனத்தவர்களும் தமது இனத்தவர்களுக்காக மிகுந்த ஆதரவை வழங்கி வருகின்றனர். மேம்பட்ட மனதுடைய இளைய தலைமுறையினர் பலர் இன வெறித் தாக்குதலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் பொதுமை உணர்வுடன் கலந்து கொள்கின்றனர். ஆனால், நம்மிடம் அவ்வாறான உணர்வுகள் உள்ளனவா? ஒரு இனத்துக்குள் ஆயிரம் பிரிவுகள். சாதி பார்ப்பதில்லை. அதில் என்ன இருக்கிறது என்றெல்லாம் கருத்துச் சொல்லும் பலர், திருமணத்துக்கு மட்டும் சாதி பார்க்கின்றோம் என்கின்றனர். தேவை அற்ற ஒன்றை எதற்காக அடுத்த சந்ததிக்கு திருமணத்ினூடாகக் கொண்டு செல்ல வேண்டும். அங்கு இருப்பது இனப் பிரச்சினை என்றால் இங்கு நம்மவர்க்களிடம் நிறைந்திருப்பது சாதியம். தமது இனத்துக்காக ஆபிரிக்கர்கள் ஒன்றிணைந்து போரிடுகின்றனர். ஆனால், நாமோ சமத்துவ வேடம் போடு கிறோம் எமது வசதிக்காக.



# மனித வாழ்வைச் சீர்குலைக்கப் போகும் ரோபோ என்கின்ற இயந்திர மனிதன்

**பளையூர் பா.பாலாஜினி**

இன்றைய உலகம் வேகமாக ஓடிக் கொண்டிருக்கின்றது. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மனிதனை மிஞ்சி வளர்ந்து- வாழ்க்கையில் நர்த்தனம் புரிகின்றன. அவை அழிவையும் தருகின்றன. ஆக்கத்துக்கும் உதவுகின்றன. ஆசைகளை அடக்கி விட முடியாத மனிதன், விஞ்ஞான தொழில்நுட்பங்களை மிகைப்பட அணுகி நிற்பதால் இந்த அழிவுகள் ஆரம்பமாகின்றன. ஆனால், அழிவுக்குக் காரணம் அளவு மீறிய தொழில்நுட்பம் என்று தெரிந்த பின்னும் மனிதன் அதைக் கட்டுப்படுத்திக் கொள்கின்றானா? இல்லையே. ஒரு சில நன்மைகளை அனுபவிப்பதற்காக ஏராளமான தீயவிளைவுகளைத் தன் விவரமற்ற செயற்பாடுகளால் ஏற்படுத்திக் கொள்கின்றான். இந்த விவரமற்ற செயற்பாடுகளின் விளைவுதான் ரோபோப் புரட்சி. இது நாளை விஸ்வரூபம் எடுக்கப் போகின்றது. ஆரம்ப கட்டங்களில் 'ரோபோ' என்கின்ற இயந்திரத்தைக் கண்டுபிடித்தான். பின்னர் வேலைகளை இலகுவாக்கித்தான் கால்மேல்கால் போட்டு உல்லாசமாக இருப்பதற்காக வேலைத் தளங்களில் ரோபோ மனிதர்களை உருவாக்கும் முறையைச் செயற்படுத்தினான். அதில் வெற்றியும் பெற்றான். முழுமை வலுவுள்ள ஒரு சாதாரண மனிதன் இயற்றக்கூடிய சகல வேலைகளையும் இந்த ரோபோ மனிதர்கள் செய்து விடுவார்கள்.

### ஆரோக்கியத்துக்குக் கேடு

இந்தக் கண்டுபிடிப்பால் மனிதன் வெளிப்படையான ரீதியில் பார்வையில் நன்மை ஏற்பட்டாலும், ஆரோக்கியமான வாழ்க்கையின் அடிப்படையில் நோக்கினால் மிகவும் பாதகமான தரக் கீழான ஒரு நிலையை இன்றைய மனிதன் அடைந்துவிட்டான் எனலாம். ஏனென்றால் எம் முன்னோர்கள் உடல் உழைப்பைப் பயன்படுத்தி நோயில்லாது நீண்ட காலம் வாழ்ந்தவர்கள். அவர்களின் நீண்ட ஆயுளுக்கும் சுறுசுறுப்பான செயற்பாடுகளுக்கும் காரணம் அவர்கள் உடல் உழைப்பைப் பயன்படுத்தத் தயங்காமையே ஆகும். ஆனால் இன்றைய மனிதன் ரோபோ இயந்திரங்களையே அண்டி வாழ்வதால் வீணாக சோம்பேறித்தனத்துக்கு ஆளாகி அற்ப ஆயுளில் அழிந்து போகின்றான்.

எமது நாட்டில் இந்த நிலை காணப்படாவிட்டாலும் வெளிநாடுகளில் இது காணப்படுகின்றது. இன்னும் கொஞ்சக் காலத்தில் எம் நாட்டிலும் இந்தக் கலாசாரம் பரவத்தான் போகின்றது. அதை எவராலும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. அதற்கான அறிகுறிகள் இப்போது தென்படத் தொடங்கி விட்டன. தீர்க்க சிந்தனையுடையவர்கள் அதனை எப்போதோ கூறிச் சென்று விட்டார்கள். சுஜாதா மிகப்பிரபல்யமான அறிவியல் எழுத்தாளர். அவரால் எழுதப்பட்ட நாவல்கள் அத்தனையுமே ஏதோ ஒரு வகையில் எதிர் கால உலகின் அறிவியல் தொழில் நுட்ப விளைவுகளைக் கூறி நிற்கின்றன. அத்தகைய சிறப்புமிக்க எழுத்தாளரால் எழுதப்பட்டது தான் 'என்இனிய இயந்திரா' என்கின்ற அறிவியல் நாவல்.

இன்று உலகில் ரோபோக்களால் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற, ஏற்படப் போகின்ற விளைவுகளை அந்த நாவல் மிகத் தத்ரூபமாக எடுத்துச் சொல்லி உள்ளது. இதற்கு அடுத்தபடியாக இந்தியத் திரைப்பட இயக்குநர் சங்கரால் உருவாக்கப்பட்ட எந்திரன் திரைப்படமும் ரோபோக்களின் விளைவை, மனித உணர்வுகளோடு அவை போட்டியிடப் போகின்ற அந்த முன்னறிவிப்பை முதலே தந்துவிட்டது. இந்த ரோபோப் புரட்சியால் முதலில் மாற்றத்தை சந்திக்கப்போவது வேலை உலகுதான். மனிதர்களை நசுக்கி தூக்கி எறிந்துவிட்டு, வேலை உலகை ஆளப்போகின்றன. கணினிகளிலும் கைத்தொழில் ஆலைகளிலும் ரோபோக்களின் கை ஓங்கிட மனிதனின் கை பல மிழந்து பயனற்றுப் போகப் போகின்றது.

ஆதாம் ஏவாளால் ஆரம்பிக்கப்பட்ட உலகம் நாளை ரோபோக்களின் கிளர்ச்சியால் நிலையிழக்கப் போகிறது. மனித உணர்வுகளை மிதித்து கபளீகரம் செய்யப் போகின்றது.

### மனிதனின் வெறித்தனம்

இவை எல்லாவற்றையும் விட, மிக அண்மைக் காலத்தில் மனிதன் ரோபோ மீது வெறித்தனமாக மேற்கொண்டு வரும்போக்கு குடும்ப வாழ்க்கையையே சீர்குலைத்து குடும்ப மட்டங்களை அழிக்கப் போகின்றது. பாலியல் நடவடிக்கைகளுக்காக ரோபோ மனிதர்கள் பயன்படுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள திட்டம் தான் அது. இந்தப் பாலியல் ரோபோக்கள் ஓர் ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ அவர்களது வாழ்க்கைத் துணை வழங்க வேண்டிய பாலியல் தொடர்பான அனைத்துத் தேவைகளையும் முழுமை செய்யுமாம். அதனால் பாலியல் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்படும் என்று நம்பப்படுகின்றது. குறிப்பாக எயிட்ஸ் நோய் பரவும் அபாயத்தைக் கணிசமான அளவு குறைக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

ஆனால், இவ்வாறான நன்மைகளை இந்தத் திட்டம் ஏற்படுத்தித் தந்தாலும் இவ்வளவு காலமாக இருந்து வந்த கணவன் மனைவி உறவில் இந்த ரோபோக்கள் தாக்கத்தை உருவாக்கப் போகின்றன. அதுதான் மறுக்க முடியாத உண்மை. புனிதமாகப் பேணப்பட்டு வந்த இந்த உறவில் விரிசல் ஏற்படப் போகின்றது. கணவன் இல்லாவிட்டால் எனக்கென்ன என்ற மனைவியும், மனைவி இல்லாவிட்டால் எனக்கென்ன என்று கணவனும், உறவுகளைத் தூக்கி வீசப்போகின்றார்கள். ரோபோவுக்கு அடிமையாகி அமிழப் போகிறார்கள். இதையே சாட்டாக வைத்து ரோபோக்கள் உலகத்தை ஆளப் போகின்றன.

### ரோபோக்களின் புரட்சி

கொஞ்சமாவது சிந்தித்துப் பாருங்கள். ரோபோப் புரட்சி ஏற்பட்டு, இந்த உலகமே ரோபோக்களின் கைக்கு மாறினால், எப்படி இருக்கும்? மரம் செடிகள் எல்லாம் இயந்திரப் பூக்கள் பூக்கத் தொடங்கி விடும். இயந்திரச் சிரிப்புகள் பூமியை இம்சைப்படுத்தத் தொடங்கி விடும். எத்தனையோ வரலாறுகளும் காவியங்களும் கண்டு உச்சமாய் வளர்ந்த எம் வரலாற்றைப் புரட்டிப் போட்டு அழித்துவிடும். இந்தளவு தீயவிளைவுகள் வேண்டுமா எமக்கு? இயந்திரங்களுக்கு அடிமைப்பட்டு வாழ்வது நாம் இற்றைவரை கண்டு வந்த புகழுக்கும், பெருமைக்கும் சரியான தொன்றாக அமையுமா? சிந்தியுங்கள். உங்களின் இன்றைய சிந்தனைகள்தான் நாளைய ரோபோப் புரட்சிக்கு ஒரு தீர்வை வரையப் போகின்றன. விளைவுகள் நல்லவைதான் எமை விழுங்காமல் இருக்கும் வரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தன்னம்பிக்கையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், வருமானம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**இடபம்:** சமயோசிதமாக செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் பண வரவு திருப்தியளிக்கும். உறவினர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும்.

**மிதுனம்:** கடந்த கால உழைப்புக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிட்டாலும், வருமானத்துக்கு குறைவிருக்காது. பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கடகம்:** பெற்றோர் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சிறு அளவில் போட்டி இருக்கும். லாபம் சுமாராக இருக்கும். வெளியூர் பயணத் திட்டத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**சிங்கம்:** அடுத்தவர் விடயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். குடும்பத்தேவை ஓரளவு முழுமையாகும். தொழிலில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். நண்பரின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும்.

**கன்னி:** குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற வளர்ச்சி நிலையைக் கண்டு பிறர் வியப்படைவர். தாராள பணவரவு கிடைக்கும். இயன்ற அளவில் தான தர்மம் செய்வீர்கள்.

**துலாம்:** திட்டமிட்ட செயல்கள் விரைவில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதில் நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**விருச்சிகம்:** உறவினர்கள் உதவி கேட்டு தொல்லைப்படுத்துவர். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு முழுமையாகும். வருமானம் சீராக இருக்கும். வாகனப் போக்குவரத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**தனுசு:** மதிநுட்பத்துடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரம் செழித்து, சமூகத்தில் புதிய அந்தஸ்து கிடைக்கும். சேமிக்கும் விதத்தில் லாபம் வரும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** செய்த நற்செயலுக்கான நன்மை தேடி வரும். தொழில், வியாபாரம் செழிக்க அதிகம் பணிபுரிவீர்கள். பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். அக்கம் பக்கத்தினருடன் இருந்த கருத்துவேறுபாடு மறையும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு முழுமையாகும். உபரி வருமானம் கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். ஆரோக்கியம் பலம் பெறும்.

**மீனம்:** எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி தர வேண்டாம். செயல்களில் நிதானத்தை பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | | 8 | 6 | | | 5 | |
| | 8 | | | | | 7 | | |
| | | | | 1 | 5 | 9 | | |
| | 9 | | 6 | | | | | |
| 2 | | | | | | | | 8 |
| | | | | | 1 | | 6 | |
| | | 6 | 3 | 9 | | | | |
| | | 8 | | | | | 3 | |
| | 3 | | | 4 | 8 | | 2 | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 2 | 9 | 7 | 6 | 3 | 5 | 4 |
| 5 | 6 | 9 | 1 | 4 | 3 | 8 | 2 | 7 |
| 3 | 7 | 4 | 5 | 8 | 2 | 6 | 1 | 9 |
| 7 | 9 | 5 | 6 | 2 | 4 | 1 | 8 | 3 |
| 1 | 4 | 3 | 7 | 5 | 8 | 2 | 9 | 6 |
| 6 | 2 | 8 | 3 | 1 | 9 | 7 | 4 | 5 |
| 4 | 3 | 1 | 8 | 6 | 5 | 9 | 7 | 2 |
| 9 | 5 | 7 | 2 | 3 | 1 | 4 | 6 | 8 |
| 2 | 8 | 6 | 4 | 9 | 7 | 5 | 3 | 1 |




கல்யாணம் கட்டியவனை நம்பி வீடு தரமாட்டீங்க... பெண்ண மட்டும் ஏன் கல்யாணம் கட்டாதவைக்கு கொடுக்கிறீங்க



அதையும்..., குடும்பகாரருக்கே கொடுக்க வேண்டியதுதானே...!

காதலி: எப்பவுமே உன்னோட நினைப்பாகவே இருக்கு டார்லிங்
காதலன்: இப்போதானே நாம பேசி முடிச்சோம்?



காதலி: அச்சச்சோ! மறுபடியும் உனக்கே போன் செய்துட்டேனா? மன்னிச்சுக் கொள்.

அரைத்த சட்டினியை அப்படியே.. ஜாருடன் வைக்கும் போதே ஆரம்பமாகிறது...



பெண்களின் சோம்பேறித்தனம்...

காணிக்கை என்பது மனிதனுக்கு முடியாகவும்! ஆடுகளுக்கு தலையாகவும் உள்ளது.



WhatsApp

"டெலிபோனை எடுத்து என்ன வென்று கேளு. போ..."
"டெலிபோன் அடிக்கலையே. அத்தை"
"ஆமா... அது அடிக்கிற வரைக்கும் காத்திருக்கனுமா? நீயே போய் எடுத்தா குறைஞ்சு போயிடுவியாக்கும்?"

♥பொதிகை♥தமிழச்சி♥

நீ ஆணாய் இருப்பதால் ஒரு பெண்ணிடம் எந்தக் கேள்வியெனிலும் கேட்டு விடலாம் என எண்ணம் கொள்ளாதே. உன் தாயும் பெண்தான் என்பதை மறவாதே.

சிவகார்த்திகேயனின் ரெமோ படத்தின் முன்னோட்டம் யூடியூபில் 12 மணி நேரத்தில் பத்து லட்சம் பார்வைகளைத் தாண்டியுள்ளது.
பொதுவாக அஜித், விஜய் படங்களின் முன்னோட்டம்தான் இப்படிச் சாதனை படைக்கும். ரஜினி படம் என்றால் சொல்ல வேண்டியதில்லை. பார்வைகளைவிட அதிக விருப்புகள் கிடைக்கும்.
தனுஷ், சிம்பு, விக்ரம், சூர்யா படங்களின் முன்னோட்டங்களுக்குக் கூட இப்படியொரு வரவேற்பு இருப்பதில்லை. அந்தளவு ரெமோ முன்னோட்டம் ரசிகர்கள் ஆர்வத்துடன் பார்க்கிறார்கள். அடுத்த மாத தொடக்கத்தில் படம் திரைக்கு வருகிறது என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 800 | 1000 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 700 | 800 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | 400 | 440 |
| சுறா | 500 | 650 | 500 | 800 | 800 | 700 | 600 |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 500 | 400 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 450 | 500 | 500 |
| முரல் | 300 | 500 | 300 | 500 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | 300 | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 500 | 400 | – |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 300 | 200 | 350 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 400 | 300 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 120 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | – | 150 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 400 | 300 | 300 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 80 | 200 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 500 | 300 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 400 | 200 | – |



# உருளைக்கிழங்கு குலாப் ஜாம்

**தேவையான பொருள்கள்:**
உருளைக்கிழங்கு – 1 கப் (வேக வைத்து மசித்தது)
மைதா – 3 மேசைக்கரண்டி
பேக்கிங் சோடா – 1 சிட்டிகை
எண்ணெய்/நெய் – பொரிக்க

**கலவைக்கு:**
சர்க்கரை – 2 கப்
நீர் – 1 கப்
பன்னீர் – சில துளிகள்
குங்குமப் பூ
– 1 சிட்டிகை (தேவைப்பட்டால்)



**செய்முறை :**
உருளைக் கிழங்கை வேக வைத்து தோல் உரித்து துருவிக் கொள்ளவும்.
ஒரு பாத்திரத்தில் துருவிய உருளைக்கிழங்கு, மைதா மாவு, பேக்கிங் சோடா சேர்த்து நன்கு பிசைந்து கொள்ளவும் பின்பு அதனை சிறு சிறு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும்
அடி கனமாக ஒரு பாத்திரத்தில் அடுப்பில் வைத்து சர்க்கரையை போட்டு நீர் சேர்த்து 5 நிமிடம் கொதிக்க வைக்கவும். பின்பு அதனுடன் சில துளிகள் பன்னீர், குங்குமப்பூ சேர்த்து அதனை தனியே வைக்கவும்.
சட்டியை அடுப்பில் வைத்து நெய் அல்லது எண்ணெய் ஊற்றி சூடானதும் மிதமான தீயில் வைத்து உருட்டி வைத்துள்ள உருண்டைகளை போட்டு பொன்னிறமாக பொரித்தெடுக்கவும்.
பொரித்த உருண்டைகளை சூடான கலவையில் போட்டு சில மணிநேரங்கள் ஊற வைத்த பின் பரிமாறவும்.
சூப்பரான உருளைக்கிழங்கு குலாப் ஜாம் ரெடி.

## நாளை

புரட்டாதி-12
புதன்கிழமை
-28.09.2016
திதி:திரயோதசி
பி.இ.03.43
நட்சத்திரம்:
மகம் மு.இ.07.38
ராகுகாலம்:
12.02-01.32 வரை
சுபநேரம்:
04.32-06.02 வரை
பிரதோஷ விரதம்






புதுவிதமான மேசை அலங்காரப் பொருள்கள் அறிமுகமாகியுள்ளன. மாபிள்கள், கண்ணாடிகளில் உற்பத்தி செய்யப்பட்ட இவை மேசைப் பூஞ்சாடி ஆகவும், காகித அழுத்தியாகவும் பயன் படும். இவை 350 ரூபா வில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 40 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 60 | 80 | 80 | 40 | 40 | 90 | 35 |
| கரட் | 80 | 90 | 160 | 120 | 100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 70 | 80 | 80 | 60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 50 | 80 | 120 | 120 | 50 | 40 | 100 | 60 |
| பாகல் | 100 | 80 | 200 | 120 | 220 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 120 | 120 | 100 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 110 | 100 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 100 | 90 | 120 | 90 | 70 |
| பூசணி | 40 | 30 | 50 | 50 | 40 | 60 | 70 | 30 |
| தக்காளி | 50 | 60 | 100 | 80 | 60 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 60 | 100 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 20 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 70 | 80 | 100 | 80 | 100 | 200 | 70 |
| புடோல் | 50 | 40 | 50 | 60 | 50 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 100 | 80 | 90 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 60 | 120 | 80 | 50 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 180 | 200 | 160 | 160 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 120 | 100 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 140 | 120 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 180 | 300 | 350 | 250 | 360 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 90 | 120 | 120 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 160 | 110 | 160 | 60 | 160 | 200 | 80 | 100 |



## உங்களுக்குத் தெரியுமா

- பழம், ஃப்ரூட் சாலட், ஜூஸ் ஆகியவற்றின் சுவையை அதிகரிக்க சிறிதளவு தேன் சேர்க்கலாம்.
- தேங்காயை சரிபாதியாக உடைக்க தண்ணிரில் நனைத்து பின்னர் உடைக்க வேண்டும்.
- இனிப்புகள் தயாரிக்கும்போது சீனிக்குப் பதில் வெல்லம் அல்லது தேன் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தினால் சுவை கூடுதலாக இருக்கும்.
- வெங்காயம் வதக்கும்போது சிறிதளவு சீனி சேர்த்தால் எளிதில் வதங்கி விடும்.
- ஊறுகாய் தயாரிக்கும்போது கைகளைப் பயன்படுத்தக் கூடாது மரத்தினால் ஆன கரண்டிகளையே பயன்படுத்துங்கள்.
- வெங்காயத்தைத் தோலோடு குளிர்ந்த நீரில் போட்டு பின்னர் நறுக்கினால் கண்களில் கண்ணீர் வராது.
- பச்சை மிளகாய் ஒரு மாத காலத்திற்கு மேலாக கெடாமல் இருக்க ஒரு காகிதக் கவரில் சிறிய துளையிட்டு கவரில் பச்சை மிளகாய்களை அதில் போட்டு ஃப்ரிட்ஜில் வைக்கவும்.
- ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக்கொண்டு அதில் ஒரு தேக்கரண்டி உப்பை கலக்கவும் பிறகு இதில் முட்டையைப் போடவும். முட்டை மூழ்கினால் அது புதிய முட்டை. மிதந்தால் பழைய முட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதொரு வளாகத்தில் டிமோ பயிற்சிக் கல்லூரி

டிமோ தனது விசேட பயிற்சி மையமான டிமோ மோட்டார் வாகன பயிற் சிக் கல்லூரியை வெலிவேரிய, கிரிந்திவெல வீதியில் அமைந் துள்ள புதிய வளாகத்திற்கு இடம் மாற்றியுள்ளது.

இந்த மையம் இடம்மாற்றப்பட்டு, அதன் திறப்பு விழா இடம் பெற்ற சமயத்தில், அதனுடன் இணைந்ததாக யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த 10 மாணவர்களை உள்ளடக்கிய பட்ட தாரிகளுக்கான பட்டமளிப்பு வைப வமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொழிற்பயிற்சிக் கல்வி மீது டிமோ கொண்டுள்ள அர்ப் பணிப்புடனான ஈடுபாட்டின் பயனாக 2010 ஆம் ஆண்டில் மற்றுமொரு பயிற்சிக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் ஆரம் பித்து வைக்கப்பட்டிருந்தது.

அனைத்து மாணவர்களும் சௌகரியமாகவும், போதிய இட வசதி கொண்ட சூழலிலும் கற்றலை முன்னெடுப்பதற்கான நவீன வசதிகள் அனைத்தையும் இது கொண்டுள்ளது. பூரண உபகரண வசதிகளைக் கொண்ட 3 விரிவுரை அறைகள், நவீன இலத்திரனியல் ஆய்வுகூடம், வாகன திருத்த வேலை களுக்கான விசாலமான வேலைத்தலம், அடிப்படை உலோக வேலைப் பயிற்சிக் கான விசாலமான வேலைத்தலம், மேசிடஸ் பென்ஸ் மோட்டார் கார்களின் திருத்த வேலைகளுக்கான விசேட உபக்ரணங்கள், உயர் தரம் கொண்ட அடிப்படை கை உபகரணத்தொகுதிகள், மேசிடஸ் வகுப்பு வாகனங்களுக்கான விசேட இலத்திரனியல் முறைமை, பழுது கண்டறியும் உப கரணம் மற்றும் டாட்டா போன்ற ஏனைய வர்த்தக நாமங் களுக்கான பொதுவான இலத் திரனியல் முறைமை பழுது கண்டறியும் உபகரணம் ஆகிய வசதிகள் இங்கு கிடைக்கப் பெறுகின்றன.

மோட்டார் வாகன எந்திரவியல் மீது கவனம் செலுத்தி யுள்ள தொழிற் பயிற்சிக் கல்வி மற்றும் நவீன தொழில்நுட்ப பயிற்சி தொடர்பான பல்வேறுபட்ட பாட நெறிகளை வழங்கு கின்ற நவீன தொழில்நுட்பப் பயிற்சி ஆகியன தற்போது வழங்கிவருகின்ற பாடநெறிகளுள் உள்ளடங்கி யுள்ளன.

மோட்டார் வாகன எந்திரவியல் பாட நெறியைப் பூர்த்தி செய்த பின்னர், கார் ஒன்றின் பாகங்களை அகற்றுதல் மற்றும் பொருத் துதல், இயந்திரவியல், மின்னியல் மற்றும் இலத் திரனியல் அளவுருக்களை அளவீடு செய்தல், கார் ஒன்றின் விற் பனைக்கு முன்னரான சோதனை மற்றும் பராமரிப்பு சேவை களை முன்னெடுத்தல், கார் ஒன்றின் வயர் வேலைப்பாட்டு வரைபடத்தை வாசித்து அது தொடர்பாக புரிந்து கொள்ளல், கார் ஒன்றின் எந்த வகையான பழுதுபார்ப்புக்களையும் நவீன உபகரணங்களின் உதவியுடன் இனங்கண்டு, திருத்த வேலைகளை மேற்கொள்ளல் போன்ற பல்வேறுபட்ட பணி களைப் பட்டதாரிகள் முன்னெடுக்க முடியும் எனத் தெரிவிக் கப்பட்டது. (கு)

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானேஸ்வரி (குஞ்சு) சண்முகநாதன் (தவலிங்கம்)



மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் சரவணை மேற்கை வதிவிடமாகவும் தற்போது தோணிக்கல் வவுனியாவை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி சண்முகநாதன் 24.09.2016 இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்ற மூளாய் C.T.B சாரதி(சொக்கர்) வேலுப்பிள்ளையின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான நடராசா - ஆசைமணி தம்பதியரின் அன்பு மகளும் கதிரவேலு - இளைய பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் சண்முகநாதனின்(தவலிங்கம்) அன்பு மனைவியும் நந்தகுமார், சுதன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவதர்சினியின்(லண்டன்) பாசமிகு மாமியாரும் சயிந்தவி, வைஸ்ணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நவநீதன், தவயோக நாதன்(லண்டன்), ரதி(நெதர்லாந்) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற மகேஸ்வரி, கந்தசாமி, இராசம்மா, கண்ணம்மா(கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2016) புதன்கிழமை மு.ப 09 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல தோணிக் கல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**138/2, தோணிக்கல், வவுனியா.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## ஹட்ச் அறிமுகப்படுத்தும் டயல் ரியூன்ஸ்

ஹட்ச் டயல் ரியூன்ஸ் என்ற மற்றுமொரு சேவையை சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது. டயல் ரியூன்ஸ் மூலமாக ஹட்ச் வாடிக்கை யாளர்கள், அழைப்பொன்றை மேற்கொள்ளும் வேளையில் அந்த அழைப்புக்குப் பதில் கிடைக்கும் வரை காத்திருக்கும்போது வழமையான அழைப்புத் தொனியைச் செவிமடுப்பதற்குப் பதி லாக, தமக்கு பிடித்தமான பாடல்களைக் கேட்கும் வசதியைச் செயற்படுத்திக் கொள்ள முடியும். இந்த விசேட சேவையை இலங்கையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தியுள்ள நிறுவனமாக ஹட்ச் திகழ் கின்றது.

369 ஐ.வி.ஆர் மற்றும் யு.எஸ்.எஸ்.டி போன்ற பல்வேறு வழிமுறைகளினூடாக டயல் ரியூன்ஸ் சேவைகளை மிகவும் சௌகரியமாகப் பெற்றுக் கொள்ளமுடியும். இச் சேவைக்கான கட்டணம் நாள் ஒன்றுக்கு ரூ.3 மற்றும் உரிய வரி அறிவீடு மட்டுமே மேற்கொள்ளப்படும் எனக் கூறப் பட்டுள்ளது.

வணிகம்

ஹட்ச் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதி காரி திருக்குமார் நடராசா இது தொடர்பில் கூறு கையில்,

"மொபைல் புரோட்பான்ட் சேவைகளை வழங்கு வதில் முன்னிலை வகிக் கும் ஒரு சேவை வழங்குநராக நாம் வளர்ச்சிகண்டு வருகின்ற நிலையில், மேம்பாடடைந்து வருகின்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தொடர்ச் சியாக புத்தாக்கங்களை அறிமுகப்படுத்தி வரு கின்ற ஹட்ச் நிறுவனம், நவீன சேவைகளை தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வரு கின்றது.

அலைபேசி தொழில்நுட்பத்தைப் பொறுத்த வரையில் கடந்த 100 ஆண்டுகளாக அழைப்புக் காத்திருப்புத் தொனி என்ற அம்சத்தில் மேம் பாடுகள் எதுவும் நிகழாத நிலையில், இதற்கு முன்னோடியாகத் திகழ்வதையிட்டு ஹட்ச் மிகவும் பூரிப்படைந்துள்ளது"-என்றார். (கு)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கரத்தினம் வேலாயுதம்



பட்டினசபை வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்க ரத்தினம் வேலாயுதம் 23.09.2016 இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சிதம்பரம் தம்பதிகளின் மகளும், காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பத்தினி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதத் தின் அன்பு மனைவியும், சண்முகவேல்,நாகரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரியும், விசாலாட்சி, காலஞ்சென்றவர்களான கந்தையா, குமார், சோமு, நல்லையா ஆகியோரின் மைத்துனி யும், ஜெயவதனி (லண்டன்), காலஞ்சென்ற ஜெயகிரிதரன் மற்றும் ஜெய்நிஷாந்தி (லண்டன்), ஜெய பாஸ்கரன் (பிரான்ஸ்), ஜெயரஜிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், உதயகுமார் (லண்டன்), விஜயகுலசிங்கம் (லண்டன்), சுயேந்தினி . பத்மரூபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தினுஷா, திவ்வியா, திஷானி, நிர்ஷன், திவேனி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2016) புதன்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரைச்சி இந்து மயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பட்டினசபை வீதி, சங்கானை.

(J/4909) (11,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பராணி (பேபி) இராசதுரை



மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி இராசதுரை கடந்த (22.09.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராசம்மா தம்பதியரின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியன் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் இராசதுரை (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்) யின் அன்பு மனைவியும் மனோகரன்(U.S.A), சந்திரசேகரன்(கனடா), மனோகரி(பாகிஸ்தான்), சுதாகரி(U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr.உமா(U.S.A), நிரஞ்சனா(கனடா), அசோகன் (பாகிஸ்தான்), றமணன்(U.K ) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற கனகராச சிங்கத்தின் அருமைச்சகோதரியும் காலஞ்சென்ற டெய்சி மற்றும் றீற்றா ஜேரெத்தினம் காலஞ்சென்ற சைமன் மற்றும் குயின்(கனடா), வில்லியம் சற்குணராசா(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் சைலயன், சாருயன், நிருயன், பியோஜினி, பெலிஷியன், சாருஷன், தாருஷன், மயூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (28.09.2016) புதன்கிழமை பி.ப 3.30 மணிக்கு சண்டிலிப்பாய் புனித திரேசம்மா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் விளான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**83, கீரிமலை றோட், சண்டிலிப்பாய்.**

(J/4914), (14,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**076 615 7835, 077 998 0631**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரி...

கடத்தப்பட்டதாக உறவினர்களால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இவ்வாறு கடத்தப்பட்ட இளைஞர்கள் இருவரும் சிறுப்பிட்டி இராணுவ முகாமில் வைத்துக் கொலை செய்யப்பட்டு, அவர்களுடைய உடல் இராணுவத்தால் தீயிட்டு கொளுத்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறுப்பிட்டி இராணுவ முகாமில் அந்தக் காலப்பகுதியில் பொறுப்பதிகாரியாக இருந்த லெப்ரினன் ஒருவர் உட்பட 16 இராணுவத்தினர் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். பின்னர் நீதிமன்றப் பிணையில் விடப்பட்டனர்.

இந்த வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக வழக்கு பிரித்தெடுப்புகள் அனுப்பி வைக்கப்பட்டன. அண்மையில் சட்டமா அதிபரின் ஆலோசனை யாழ்ப்பாண நீதிவான் மன்றுக்கு வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் 10 இராணுவத்தினருக்கெதிராக கொலைக்குற்றம் சாட்டப்பட்டது. இந்த நிலையில் 5 இராணுவத்தினர் நேற்று யாழ்.நீதிவான் மன்றில் சட்டத்தரணி மு. றெமிடியஸ் மற்றும் இலங்கை இராணுவத்தின் சட்ட அலுவலர் சம்பத் ஆகியோர் ஊடாக முற்பட்டனர். ஆள் கொலையுடன் தொடர்புடைய வழக்கு என்பதால், அவர்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

ஏனைய 5 இராணுவத்தினரையும் கைது செய்து முற்படுத்துமாறு அச்சுவேலிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார் நீதிவான்.

லெப்டினன் கேணல் வீரசிங்க, இராணுவச் சிப்பாய்களான மஞ்சுள சரத் புஸ்பகுமார, ரம் பண்டாகே தொன் சுனில், ஆராச்சிலாகே பிரேமதிலக்க, வித்தானராச்சிலாகே பிரபாத் ஆகிய ஐந்து இராணுவத்தினருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

(வ-4,103,106)

## விக்கியை...

விக்னேஸ்வரனையும் நிதி மோசடி விசாரணைப் பிரிவு பிடித்துச் சென்று விசாரிக்க வேண்டும். அரச சொத்து மோசடிக்கு பிணையும் கிடைக்காது. அப்படியாயின் அவருக்கு விளக்கமறியல்தான் கிடைக்கும். இதையும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்

இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நேற்றுத் தெரிவித்தார்.

கோட்டையில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரன் தலைமையில் ஊர்வலம் நடத்தப்பட்டது. இதில், சிங்களவர்கள் வடக்கிலிருந்து வெளியேற வேண்டும். புத்தர் சிலைகள் வைக்கக் கூடாது, வடக்கில் சிங்களவர்கள் குடியேற்றப்படக் கூடாது என்று பல கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

வடக்கு மற்றும் கிழக்கு என்பன பௌத்த நாகரிகத்தின் பிரதான இடங்களாகவே ஆரம்பத்தில் இருந்தன. இலங்கையில் ஏற்பட்ட போரைத் தொடர்ந்தே அங்குள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த விகாரைகள் தமிழ் பிரிவினைவாதிகளால் தகர்க்கப்பட்டன.

போர் தற்போது தோற்கடிக்கப்பட்டுள்ளதால், அவ்வாறான பழமையான பௌத்த விகாரைகளை கண்டுபிடிப்பது தவறா? அல்லது அங்கு வாழும் இராணுவத்திலுள்ளவர்களின் வழிபாட்டுக்காக புத்தர் சிலைகளை வைப்பதுதான் தவறா?

1981ஆம் ஆண்டு கொழும்பு குடித்தொகையில் 51 வீதத்தில் சிங்களவர்களே இருந்தனர். ஆனால் 2012 ஆம் ஆண்டு அது 28 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. வடக்கு - கிழக்கில் போர் காரணமாக தமிழ், முஸ்லிம் மக்கள் கொழும்பில் வந்து குடியேறியமையே இந்த வீழ்ச்சிக்குக் காரணமாகும். இவ்வாறு இருக்கும்போது, கொழும்பில் அல்லது மேல் மாகாணத்தில் வாழும் தமிழர்கள் வெளியேற வேண்டும் என்று எப்போதாவது போராட்டம் நடைபெற்றுள்ளதா? இல்லை. இவ்வாறு இலங்கையின் ஏனைய மாகாணங்களில் வாழ்வதற்கு தமிழர்களுக்கு இருக்கும் உரிமை, வடக்கில் சிங்கள மக்களுக்கும் உள்ளது.

1981ஆம் ஆண்டு குடித்தொகை கணிப்பீட்டின்படி 8 சதவீத சிங்கள மக்கள் வடக்கில் வாழ்ந்துள்ளார்கள். போரினால் வெளியேறிய தமிழ், முஸ்லிம் மக்கள் வடக்கில் மீண்டும்வந்து மீள்குடியேற உரிமை உள்ளதாயின், அந்த உரிமை சிங்கள மக்களுக்கும் உள்ளது.

அத்தோடு, எமது அரசமைப்பில் இலங்கையில் எந்தப் பகுதியிலும் வாழ எல்லா குடிமகனுக்கும் உரிமை உள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளதை, நாம் உயர் நீதிமன்றில் வழக்காடிய போது, மூலாசனத்தில் அமர்ந்திருந்த விக்னேஸ்வரனுக்கு, தற்போது அது மறந்துள்ளமை மிகவும் கவலையளிக்கிறது.

இப்படியான வடக்கு முதலமைச்சர்தான் ஊர்வலத்துக்கு அழைப்பு விடுத்தார். அவரின் உத்தியோக பூர்வ முத்திரையுடனேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

இதற்கு மாகாண சபையின் அதிகாரிகள், அரச வாகனங்கள் என்று அரச வளங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அப்படியானால், அரச வளங்கள் பயன்பாடு தொடர்பில் நல்ல வழக்கொன்று அரசுக்குக் கிடைத்துள்ளது என்றே கூறவேண்டும்.

விக்னேஸ்வரனையும் நிதி மோசடிப் பிரிவு பிடித்துச் சென்று விசாரிக்க வேண்டும். அரச சொத்து மோசடிக்கு பிணையும் கிடைக்காது. அப்படியாயின் அவருக்கு விளக்கமறியல்தான் கிடைக்கும். இதையும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். சிங்கள மக்கள் வேண்டாம். புத்தர் சிலைகள் வேண்டாம் என்று நேரடியாக இனவாதத்தைத் தூண்டும் விக்னேஸ்வரனுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அதைவிடுத்து இப்போதும் சட்டத்தை நடைமுறைப் படுத்தாது அரசு தொடர்ச்சியாக வேடிக்கை மட்டுமே பார்க்குமானால், தமிழ் ஈழம் உருவாவதை எவராலும் தடுக்க முடியாது - என்றார்.

(வ-5-38)

## வடக்கு...

கூறுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முள்ளியவளை குமாரபுரம் ஐக்கிய வாலிபர் சங்கத்தினரால் ஹிஜ்ராபுரம் விளையாட்டு மைதானத்தில் நேற்று நடத்தப்பட்ட விளையாட்டுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகளின் தலைவர் செய்ததை விட, இன்று சில இனவாதிகளும் மதவாதிகளும் தங்களது சுய நலத்துக்காக, தங்களது அரசியல் இருப்பிற்காக, தமது வியாபாரத்திற்காக, சில வெளிநாட்டு சக்திகளின் சதிக்காக செய்கின்ற துரோகத்தனத்தினால் மீண்டும் நான் அச்சப்படுகின்றேன். இன்று வடக்கையும் கிழக்கையும் சேர்க்கவேண்டும் - இணைக்கவேண்டும் அல்லது அதற்கு மேல் வேண்டுமென சொல்கின்ற கட்சி தமிழரசுக் கட்சியும், அதனுடன் சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தான் என்பது உங்களுக்குத்தெரியும். இன்று கிழக்கிலே 40 வீதம் முஸ்லிம்கள் இருக்கின்ற நிலையிலேயே, ஐக்கிய தேசியக் கட்சியுடன், சுதந்திரக் கட்சியுடன், ஏனைய கட்சிகளுடன் இணைந்து மாகாணத்தில் முதலமைச்சர், அமைச்சர் மற்றும் முக்கிய பதவிகளை எடுத்துக்கொண்டு எம்மால் முஸ்லிம் மக்களுக்கு சேவை செய்யக்கூடியதாக உள்ளது. வடக்கையும் கிழக்கையும் இணைத்தால் ஒரு சாதாரண உறுப்பினர் பதவியையோ அல்லது எதிர்க்கட்சித் தலைவர் பதவியையோ மட்டுமே எம்மால் வகிக்க முடியும். எனவே கிழக்கிலிருக்கின்ற எந்தவொரு முஸ்லிமும் வடக்கு கிழக்கு இணைப்புக்கு ஆதரவை வழங்க மாட்டான் என்பதனை இந்த முல்லைத்தீவு மண்ணிலே நின்று கொண்டு உறுதிபடத் தெரிவிக்கின்றேன்.

கடந்த அரசில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 500 தமிழ் இளைஞர்களுக்கு மேல் எனது கையால் வேலை வாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டன. இதில் 100 முஸ்லிம் இளைஞர்களுக்கு கூட நான் வேலை வாய்ப்பை வழங்கவில்லை. அத்துடன் மீள் குடியேற்ற அமைச்சராக இருந்து பல வேலைத்திட்டங்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் செய்துள்ளேன். செட்டிகுளத்திலே 3 இலட்சம் வன்னி மக்களுக்காக ஒரு வாரத்தில் காடுகளை தள்ளி முகாம் அமைத்து மக்களை குடியமர்த்திய எனக்கு முல்லைத்தீவு மாவட்டத்திலே 2 ஆயிரம் முஸ்லிம்களை குடியமர்த்துவதற்கு ஆயிரம் ஏக்கர் காட்டை தள்ளுவது பெரிய வேலையாக இருக்கவில்லை. ஆனாலும் முறைப்படி நிர்வாக நடைமுறைக்கு அமைவாக முஸ்லிம் மக்களை மீள் குடியமர்த்த வேண்டும் என்ற கரிசனையில் நான் இருந்தமையால் அவ்வாறு செய்யவில்லை .

முன்பு தமிழ் ஊடகங்கள் மட்டுமே எனக்கு எதிராக அவதூறான பிரசாரங்களை மேற்கொண்டு வந்தன. இன்று சிங்கள ஊடகங்கள் தொடர்ச்சியாக என்னை ஒரு இனவாதி, மதவாதி என சித்திரித்து செய்திகளை வெளியிடுகின்றன. இது எனக்கு கவலை அளிக்கின்றது.

இத்தோடு நின்று விடாது இணையத்தளங்களிலும் முகநூலிலும் என்னைப்பற்றி உண்மைக்கு புறம்பான செய்திகளை பதிவேற்றம் செய்து வருகின்றனர் - என்றார்.

(வ-21,102)

## இனவாதம்...

இனவாதமே ஆகும். இவ்வாறு ஊடகத்துறை பிரதி அமைச்சர் கருணாரட்ண பரணவிதாரன தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட ஊர்வலம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் பிரதி அமைச்சர் கருணாரட்ண பரணவிதாரன தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஊர்வலம் தொடர்பில் நாம் கவலை அடைகின்றோம். ஊர்வலத்துக்கு அடிப்படைக் காரணமாகக் கூறப்படுபவை மிகவும் போலியானவை. வடக்கில் எந்தவித சட்ட விரோத குடியேற்றங்களையும் அரசு செய்யவில்லை. மாறாக வடக்கு மக்களுக்கு உரிமையான காணிகளை மீளக் கையளிக்கும் பணிகளே இடம்பெற்று வருகின்றன.

தமிழ் மக்களை சிறைக் கைதிகளாக கைதுசெய்து வைத்திருக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்தவர்களே கைது செய்யப்பட்டதோடு, இவர்களில் அதிகமானவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டது. சிலருக்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இன்னும் சிலர் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் எதிர்வரும் காலங்களில் நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

அதேபோல வடக்கில் பௌத்த விகாரைகள் அமைப்பதாகக் கூறுகின்றார்கள். எனினும் அப்படி ஒன்றும் அங்கு இடம்பெறவில்லை. அங்கு ஏற்கனவே இருந்தவைதான் தற்போதும் இருக்கின்றன. தெற்கிலும் இந்து கோவில்கள் இருக்கின்றன. வடக்கில் புதிதாக விகாரைகள் அமைக்கப்பட வில்லை என்பது போல அங்கு புதிய சிங்களக் குடியேற்றங்களோ, சிங்களக் கிராமங்களோ அமைக்கப்படவும் இல்லை.

நாட்டில் அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற நல்லிணக்க முயற்சிகளுக்கு தடை ஏற்படுத்தவே இவ்வாறான ஊர்வலங்கள் நடத்தப்படுகின்றன. அவற்றை வடக்கில் செய்தாலும், தெற்கில் செய்தாலும் இனவாதம் இனவாதமே ஆகும். அதற்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கின்றோம். இந்த இனவாதத்திற்குள் சிக்கி நல்லிணக்க முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட வேண்டாம் என்பதை நாட்டு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார்.

(வ-5)

## தெற்கிலுள்ள...

பிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் அண்மையில் மேற்கொண்ட செயலை ஏற்றுக்கொள்ள வில்லை. வடக்கில் புத்தர் சிலைகள் வைக்கப்படுவதை விக்னேஸ்வரன் எதிர்ப்பாரேயானால், தெற்கில் கோவில்கள் நிர்மாணிக்கப்படுவதற்கு அவர் என்ன சொல்லப் போகிறார்.

தவறு செய்யவில்லை என்றால், விசாரணைகள் குறித்து படையினர் அச்சப்பட வேண்டியதில்லை. இராணுவத்தினரை மாத்திரமல்ல கொலையாளிகளையும் அடையாளம் காண வேண்டும் என்றார் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க.

(வ-5)

## விக்கியின்....

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊர்வலம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் உள்ள மக்களிடையே பிரிவினைவாதத்தை ஏற்படுத்துவதற்கு இவர்கள் முயற்சிக்கின்றனர். இது தவறான விடயம். எனவே ஒற்றையாட்சி மூலம் மாத்திரமே அதிகாரப் பரவலாக்கம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(வ-5)

## 3 வெவ்வேறு...

தனியார் பேருந்து ஒன்று பம்பைமடுப் பகுதியில் சென்று கொண்டிருந்த அரச பேருந்தை முந்திச்செல்ல முற்பட்ட வேளையில், எதிரே மோட்டார் சைக்கிளில் பயணித்த பெரிய தம்பனை பகுதியைச் சேர்ந்த அம்பலவாணர் ராமச் சந்திரன் (வயது - 63) என்ற முதியவரை மோதித் தள்ளியது. விபத்தின் போது படுகாயமடைந்த குறித்த முதியவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. அந்த முதியவர், சந்தையில் கொடுப்பதற்கு மோட்டார் சைக் கிளில் வாழைக்குலை கட்டி வந்த போதே விபத்து இடம்பெற்றது என்று தெரிவித்த வவுனியா பொலிஸார், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தனர்.

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூண்டுலோயா நகரிலிருந்து நுவரெலியா நோக்கி செல்வதற்காக பாதையை கடந்த பெண் ஒருவர் மீது முச்சக்கர வண்டி மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்து சம்பவத்தில், அம்பகஹாவத்த கெதர உதயணி (வயது- 47) என்ற பெண்ணே உயிரிழந்தார். சடலம் பூண்டுலோயா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை பொத்துவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஊறணி பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றுமொருவர் படுகாயங்களுடன் பொத்துவில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்த சம்பவத்தில் பாணமை பிரதேசத்தை சேர்ந்த 21 வயதுடைய இளைஞனே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய நபர் படுகாயமடைந்தார். இருவரும் பாணமை பிரதேசத்தில் நடைபெற்ற பிறந்த நாள் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர், திருக்கோவிலை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் போது வீதியில் நின்ற எருமை மாட்டுடன் மோதி தூக்கி வீசப்பட்டுள்ளனர். உயிரிழந்தவரின் சடலம் பொத்துவில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் என பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-21)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் உள்ள 'சினேறு என்ரபிறைஸ்' நிறுவனத்திற்கு பணவசூலிப்பாளர் தேவை. அனுபவம் உள்ளவராகவும் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவராகவும் கிராம சேவையாளர் கடிதம், ஏதாவது நிறுவனத்தில் பணிபுரிந்தவராயின் அதற்கான சான்றிதழ் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

**பணிபுரியும் இடங்கள்:- கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருகோணமலை.**

**தொடர்புகளுக்கு: 077 7218055**
**075 366 6230, 075 3666111**


# 2017 இல் 5 தேர்தல்களை நடத்தத் தயாராகிறது அரசு

2017ஆம் ஆண்டு பொது வாக்கெடுப்புடன் மொத்தமாக 5 தேர்தல்களை நடத்த அரசு தயாராகி வருகின்றது, என்று அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

புதிய அரசமைப்புத் தொடர்பான விடயங்கள் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் முடிவடையும் நிலை காணப்படுவதால், அடுத்த வருட ஆரம்பத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த முன்னர், புதிய அரசமைப்புக்கு அங்கீகாரம் பெறுவதற்கு பொது வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது என்று அரசு அறிவித்தது.

அரசமைப்பு குறித்த பொது வாக்கெடுப்பு, உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆகியவற்றுடன் வடமத்திய, சப்ரகமுவ, கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் நடைபெறவுள்ளன. குறித்த மூன்று மாகாண சபைகளுக்கான கால எல்லை 2017ஆம் ஆண்டு மே மாதத்துடன் நிறைவடையவுள்ளதால் அவற்றுக்கான தேர்தலையும் நடத்த அரசு தயாராகி வருகின்றது. (வ-21)

## ரூ. 1 கோடியே...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யங்கள், விளம்பர பதாகைகள், சித்தமருத்துவ மருந்து விற்பனை, சஞ்சிகை விற்பனை, கழிவகற்றல் வருமானம் மற்றும் நன்கொடை மூலம் மாநகர சபைக்குக் கிடைக்கப் பெற்ற மொத்த வருமானம் வரிகள் உட்பட ஒரு கோடியே 92 லட்சத்து 70 ஆயிரத்து 675 ரூபா 53 சதமாகும்.

உற்சவத்தின் போது வழங்கு பொருள்கள், பயன்பாட்டுச் சேவைகளுக்கான கொடுப்பனவு, மேலதிக வேலைக்கான கொடுப்பனவு மற்றும் விளம்பரச் செலவுகள் உட்பட மொத்தமாக ரூபா 75 லட்சத்து 57 ஆயிரத்து 358 ரூபா 75 சதம் செலவு செய்யப்பட்டது. செலவிலும் கூடிய வருமானமாக ஒரு கோடியே 17 லட்சத்து 13 ஆயிரத்து 358 ரூபா 75 சதம் கிடைத்துள்ளது.

சென்ற வருடத்துடன் ஒப்பிடும்போது, வருமானமானது 29.45 வீதத்தால் அதிகரித்திருப்பதோடு, செலவினமும் 28.19 வீதத்தால் அதிகரித்துள்ளது. பெருந்திருவிழாக்காலத்தில் நல்லூர் வெளிவீதி கண்காணிப்புக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட கண்காணிப்புக் கமரா மற்றும் பணியாளர்களின் மேலதிக வேலைக் கொடுப்பனவுகள் செலவின அதிகரிப்பின் பெரும் பிரதான காரணிகளாகின. எனினும் தேறிய வருமான அதிகரிப்பு சென்ற வருடத்துடன் ஒப்பிடும்போது, 30.28 வீதத்தால் அதிகரித்துள்ளது. இந்த வருமானமிகை மக்கள் நலத்திட்டங்களுக்காகச் செலவிடப்படும்.

மொத்த வருமானத்தில் செலவினமானது சென்ற வருடம் 40 வீதமாகக் காணப்படும். அதேவேளை இந்த வருடம் 39 வீதமாகக் காணப்படுகின்றது. வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விவரமான அறிக்கையைப் பார்வையிட விரும்புவோர் மாநகர சபையின் மக்கள் தொடர்பு அலுவலகத்தில் பார்வையிடலாம் என்று யாழ். மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (வ)

## 6ஆவது நாள்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 21 அரசியல் கைதிகள் கடந்த 21 ஆம் திகதி உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். தமது வழக்குகளைத் துரிதப்படுத்துமாறும், அநுராதபுரம் சிறப்பு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ள வழக்குகளை யாழ்ப்பாணம் அல்லது வவுனியா நீதிமன்றத்துக்கு மாற்றம் செய்யுமாறும் கோரியே போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இவர்களில் மூவர் வழக்கு நடவடிக்கைகளுக்காக வேறு சிறைச்சாலைகளுக்கு கடந்த சனிக் கிழமைக்கு மாற்றப்பட்டனர். எஞ்சிய 18 பேரும் உணவு ஒறுப்புப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். நேற்று ஆறாவது நாளாகவும் மிகவும் சோர்வடைந்த நிலையிலும் போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் செயலர் நேற்று நேரில் சென்று சந்தித்தார். முதலமைச்சர் இந்தப் போராட்டத்தை கைவிடுமாறு கோரியதாகவும், இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும், உணவு ஒறுப்புப் போராட்டத்தால், தான் கவலையடைந்துள்ளதைத் தெரிவிக்குமாறும் குறிப்பிட்டதாக, முதலமைச்சரின் செயலர் கைதிகளிடம் தெரிவித்தார். இதன் போது அரசியல் கைதிகள், உணவு ஒறுப்புப் போராட்டத்தை கைவிட முடியாது என்று குறிப்பிட்டனர் என்று தெரிவிக்கப் பட்டது. தமது வழக்குகளை வவுனியா அல்லது யாழ்ப்பாணத்துக்கு மாற்ற முடியா விட்டால், வழக்கை விரைவிலாவது முடிக்குமாறும், அதற்குரிய நடவடிக்கைகளை முதலமைச்சரை மேற்கொள்ளுமாறும் அரசியல் கைதிகள் முதலமைச்சரின் செயலரிடம் கேட்டுக் கொண்டனர். (வ-5)


### யா/ யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை
## அறிவித்தல்

எமது பாடசாலை 15.10.2016 அன்று இருநூறாவது ஆண்டை பூர்த்தி செய்வதனால் இவ் விழாவை வெகுவிமரிசையாகக் கொண்டாடவுள்ளோம். எனவே இதற்காக சிறப்புமலர் ஒன்றையும் வெளியிட தீர்மானித்துள்ளோம். ஆதலால் இப் பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களின் சேவை விவரங்களை 30.09.2016 ஆம் திகதிக்கு முன்பாக நேரடியாகவோ அல்லது unioncollegete@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ தந்துதவுமாறு வேண்டுகின்றோம். ஆசிரியரின் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், யூனியன் கல்லூரியில் கற்பித்த காலம், கற்பித்த பாடம், வகுப்புகள், தங்களின் மாணவர்களின் கல்விச்சாதனைகள், வகித்த பதவிகள், பதவிக்குரிய சேவைக்காலம் என்பவற்றைக் குறிப்பிடவும்.

**மேலதிக தொடர்புகளுக்கு:**
**021 321 6491, 077 617 1397**
unioncollegete@gmail.com

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கற்பிக்கும் திருமதி **ஜெயசிறி உதயகுமார்** அவர்களின் மாமனார்

**செல்லத்துரை நாகராசா**

அவர்கள் 25.09.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிகழகம்,
கிளி/திருவையாறு மகாவித்தியாலயம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**செல்வத்துரை பற்குணம்**

திதி: அபரபக்க ஏகாதசி (27.09.2016)

தோற்றம் 13.11.1945
மறைவு 28.08.2016

மாப்பாணவூரி உவந்தளித்த உத்தமனார்
நற்குணங்கள் நல்கினை பற்குணமாய் நாமம் கொண்டு
[illegible] தாயையும் [illegible] சிதம்பரத்தையும் தாழ்பணிந்து
பார் போற்றும் பண்பாளனாய் வாழ்வுவந்த நம்தந்தை
தில்லைக் கூத்தனின் திருவடியில் கலந்திட
உங்கள் திருவருளை [illegible] பணிந்திடுவோம்.

[illegible] (27.09.2016) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
[illegible]

குடும்பத்தினர்.

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
**பத்மாசனி சுந்தரலிங்கம்**

மலர்வு 02.02.1940
உதிர்வு 28.08.2016

கடந்த 28.08.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த அமரர் திருமதி பத்மாசனி சுந்தரலிங்கம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து பல்வேறு வழிகளிலும் உதவிகள் செய்தோர், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோர், தொலைபேசி, தந்திகள் மூலம் ஆறுதல் தெரிவித்தோர் அனைவருக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 29.09.2016 வியாழக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் கோயிலடி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

குடும்பத்தினர்.

## 43 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 05 . 03 . 1936
மறைவு 17 . 08 . 2016

அமரர்
**கந்தையா வேலாயுதபிள்ளை**
[நீர்வேலி வடக்கு, நீர்வேலி]

கடந்த 17.08.2016 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியம் நாளை (28.09.2016) புதன்கிழமை நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு அழைக்கின்றோம்.

பலவழிகளில் உதவிபுரிந்து ஆறுதல், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கு இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
077 6178474, 077 3151645

வே.தனிஸ்வரன்
வே. விக்கினேஸ்வரன்
வே. கமலேஸ்வரன்

### வேலையாள்கள் தேவை

திருநெல்வேலியிலுள்ள விற்பனை முகவர் நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை
**077 668 1670**

### வேலைக்கு ஆள் தேவை

புடவை கடையொன்றுக்குப் பெண் பிள்ளைகள் தேவை. சேட், டிரவுசர், தைக்கத் தெரிந்த அனுபவம் வாய்ந்த ஆண்கள் உடனடியாகத் தேவை.
**075 067 4075**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுவை முறை மீன்பிடிக்கு அனுமதி வழங்க வேண்டும்

## கிளி. மாவட்ட மீனவர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, செப். 27

கிளிநொச்சி மாவட்ட கடல் எல்லையிலும் இழுவை முறை மீன்பிடிக்க கிளிநொச்சி மாவட்ட மீனவர்களுக்கும் அனுமதி தர வேண்டும்.

இவ்வாறு ஒருங்கிணைப்புக் குழுவிடம் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

உள்ளூர் இழுவை முறை மீன்பிடி காரணமாக இந்தப் பகுதி மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். பாதிக்கப்படும் மீனவர்களுக்கும் அவ்வாறான மீன்பிடி முறைக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் அல்லது முழுமையாக தடுக்கப்பட வேண்டும் என்று மாகாண சபை உறுப்பினர் தவநாதன் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்றில் பேச்சு இடம் பெறுகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார். எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் இதுகுறித்துத் தீர்வு காணப்பட வேண்டும். தீர்வு எட்டப்படாதவிடத்து எமக்கும் இழுவை முறை மீன்பிடிக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

குறித்த மீன்பிடி முறையானது தடைசெய்யப்பட்ட முறை. நாம் அனுமதி வழங்கினாலும் அந்த முறை தடைசெய்யப்படும் என்று முதலமைச்சர் தெளிவுபடுத்தினார். நாடாளுமன்றில் பேசி தீர்வு எட்டும் வரை தமக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என மீனவர்கள் கோரினர். இந்திய மீனவர்களின் அத்து மீறலை தடுப்பதற்காகவே குறித்த முறைக்கு உள்ளூரில் அனுமதி வழங்கப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

குறித்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு எட்டப்படும் எனவும் அதுவரை காத்திருக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் கூறினார். உள்ளூர் இழுவை மீன்பிடியைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அதன் பிறகு இந்திய மீனவர்களின் அத்து மீறல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் எனவும் மீனவர்கள் தெரிவித்தனர். (ற-4,ரி3)

### குவைத்தில் கசிப்புக் காய்சியவர் கைதானார்

குவைத்தில் தனது தங்குமிடத்தில் கள்ளச்சாரயம் (கசிப்பு) காய்ச்சினார் என்ற குற்றச்சாட்டில் இலங்கைத் தொழிலாளி ஒருவரை அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கையைச் சேர்ந்த தொழிலாளி சல்மியா என்ற பிரதேசத்தில் உள்ள தொடர்மாடி வீடமைப்பு தொகுதியில் நேற்று கைது செய்யப்பட்டார்.

இவர் வசித்து வந்த தொடர்மாடி குடியிருப்பில் உள்ள வசிப்பிடத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சும் போது திடீரெனத் தீப் பிடித்துள்ளது. இந்த தீ தொடர்மாடியில் பரவியதை அடுத்து, அவர்கள்ளச்சாராயம் காய்ச்சியது தெரிய வந்துள்ளது. (வ-21)

## பிரபாகரன் சொன்னது உண்மையா- பந்துல

சிங்கள மக்களுக்கு எந்தவொன்றும் நீண்ட நாட்களுக்கு நினைவில் நிற்பதில்லையென விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறியிருந்தார். அந்தக் கருத்து சமகாலத்துடன் ஒப்பிடும் போது உண்மையானதாக தென்படுகின்றது என்று மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

எமது நாட்டில் கடந்த 30 வருடங்களாக என்ன நடந்தது என்பதை மக்கள் மறந்துள்ளனர். என்றும் அவர் தெரிவித்தார். (வி)

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் இராமச்சந்திரன்

(செட்டியார் ) ( ப.நோ.கூ.ச.கிளை முகாமையாளர் செட்டிகுளம்)

செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், பெரிய தம்பனையை வசிப்பிடமாகவும் பண்டாரிக்குளம் வவுனியாவைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்ட அம்பலவாணர் இராமச்சந்திரன் நேற்று (26.09.2016)திங்கட்கிழமை வவுனியாவில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - இராசமணி தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்றவர்களான தில்லையம்பலம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கமலேஸ்வரி ( இளைப்பாறிய உபதபால் அதிபர் குஞ்சுப்பரந்தன்)யின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கமலாசனதேவி (தேவி அக்கா) மற்றும் செல்வநாயகி (யோகம் - கனடா), வசந்தகுமாரி (பிள்ளை ) ,சாந்தகுமாரன் காலஞ்சென்ற நவநீதகிருஸ்ணன் மற்றும் குருபாததாசர் (குஞ்சுத்தம்பி), ஜெகதீஸ்வரி, இரங்கநாதன் (அதிபர் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் சரஸ்வதி (வெள்ளாம் போக்கட்டி, மீசாலை) அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2016) புதன்கிழமை செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செட்டிகுறிச்சி,**
**பண்டத்தரிப்பு.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**021 2251776**

## மரண அறிவித்தல்

### வைரமுத்து குலசேகரம்பிள்ளை

(மாயவர்)

தோற்றம்
06 . 01 . 1937



மறைவு
25 . 09 . 2016

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து குலசேகரம்பிள்ளை ஆஸ்திரேலியாவில் 25.09.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - தங்கம் தம்பதிகளின் மகனும், காலஞ் சென்றவர்களான செல்லையா (விசகடி வைத்தியர்) - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவயோகத்தின் (Aus) அன்புக் கணவரும், ஸ்ரீநிவாசன் (Aus), கிருஷ்ணவேணி (Aus), சத்தியவேணி (Aus) , சௌமியா (Aus), ஸ்ரீதரன் (Aus) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்றவர்களான கதிரேசம்பிள்ளை ( Singapore), ரோகிணிஅம்மா மற்றும் நடராஜா (Singapore), காலஞ்சென்றவர்களான தியாகராசா ( Singapore ), தங்கச்சி அம்மா, உருத்திரன் (ஓய்வுபெற்ற இசை ஆசிரியர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், விஜயலட்சுமி (Singapore ), சிவகுருநாதன் (நாராயணதாசன்), சின்னம்மா ( Singapore), தி.பரமேஸ்வரி ( Ind), சிவஞானசுந்தரம் (ஓய்வூதியர்), உ.பரமேஸ்வரி, காலஞ்சென்ற தங்கரத்தினம் ( Singapore) மற்றும் தவச்செல்வம் ( Aus), செல்வராசா (Aus), செல்வராணி ( Aus), தேவராணி ( Aus) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2016) புதன்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.162, பலாலிவீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 221 9006

தகவல்:
**சிவகுருநாதன்**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி கனகரத்தினம்



யாழ். கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி கனகரத்தினம் 25.09.2016 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் (செட்டியார்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகேஸ்வரன் (கண்ணன்) மற்றும் கனகேஸ்வரி (காவேரி - ஜேர்மனி), கனகவல்லி (யமுனா - ஜேர்மனி), கனகதாஸ் (ராஜா), கனகராஜா (ஈசன் - ஜேர்மனி), கனகேந்திரன் (விசாகன் - ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், மங்கையற்கரசி (மங்கை - இந்தியா), ராஜேந்திரன் (ஜேர்மனி), சண்முகேஸ்வரன் (ஜேர்மனி), ரதிதேவி, கலாரஞ்சினி (லண்டன்), அருளினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், உதயராஜ், நிசாந்தினி, பிரதீப், அருண், சுவேனி, சத்திகா, சங்கீதா, சந்திகா, திவாகர், நவாகினி, பிரணவன், நிரேஸ், நிரூபா, நிலானி, அயித், வினோத் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான அரியநாயகம் (Rtd - AO) நடராஜா,நகுலேஸ்வரி மற்றும் பாக்கியலட்சுமி, பாலசுப்பிரமணியம் (பாலா - ஜெயக்கிருஸ்ணா ஜுவலறி),தியாகராஜா (ராசன், தியாகு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2016) செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**401/1, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

### க.சி.சிதம்பரநாதன்

(ஓய்வு நிலை அதிபர்
கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி)

அத்துளு அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் பள்ளம் தோட்டம் துன்னாலை மேற்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிதம்பரநாதன் 25.09.2016 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-செல்லமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற முருகேசு-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் திலகராணியின் அன்புக் கணவரும் கலைமகள் (லண்டன்), ஐங்கரன் (லண்டன்), திருமகள் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவநாதன்(லண்டன்), பார்த்தீபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற கண்ணகை மற்றும் சிவ பாக்கியம் காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் சின்னம்மா, சிற்றம்பலம் (ஓய்வு நிலை அதிபர் நெல்லியடி ம.ம.வி), கந்தப்பு (லண்டன்), தாமோதரம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வம்சி கிருஷ்ணா, ஆர்த்திகா, மிதுஷா, லக்ஸ்மன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2016) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பள்ளம் தோட்டம்,**
**துன்னாலை மேற்கு,**
**கரவெட்டி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெய்செஸ்டர் சிற்றியை பந்தாடியது யுனைற்ரெட்

இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்ட மொன்றில் மன்செஸ்டர் யுனைற்ரெட் அணி அபார வெற்றிபெற்றது.

லெய்செஸ்டர் சிற்றிக்கு எதிராக மன்செஸ்டர் யுனைற்ரெட் மோதியது. இரண்டுமே பலம் வாய்ந்த அணிகள். எனவே, ஆட்டத்தில் ஏக ஆதிக்கத்தன்மை இருக்காது என்று கணிப்பட்ட போதிலும், ஆரம்பம் முதல் மன்செஸ்டர் யுனைற்ரெட் பெரும் ஆதிக்கம் செலுத்தியது. கிறிஸ் ஸ்மோலிங் நான்காவது நிமிடத்திலும், ஜுவான் மாத்தா 32ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய, முதல் பாதியின், முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது மன் செஸ்டர். இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் லெய்செஸ்டர் சிற்றி கோலொன்றைப் பதிவு செய்த போதிலும், மார்க்கஸ் ரஷ்போர்ட், போல் பொக்பா ஆகியோர் முறையே 60 ஆவது, 76 ஆவது நிமிடங்களில் கோல்களை அடுக்க முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் மன்செஸ் டர் யுனைற்ரெட் வெற்றிபெற்றது. (ம)





# 500 ஆவது டெஸ்ட் ஆட்டம்; முத்திரை பதித்தது இந்தியா

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி 197 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இந்த ஆட்டம் இந்தியாவின் 500 ஆவது டெஸ்ட் ஆட்டமாகும். எனவே தனது 500 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் அபார வெற்றிபெற்றும் அந்த அணி வரலாறு படைத்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 318 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக முரளி விஜய் 65 ஓட்டங்களையும், புஜாரா 62 ஓட்டங் களையும், ஜடேஜா ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நியூசிலாந்தின் சார்பில் போல்ட், சான்நெர் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், வாக்நெர் இரு இலக்குகளையும், கிறைக், சொட்கி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து 262 ஓட்டங்களில் மடிந்தது. அதிகபட்ச மாக வில்லியம்சன் 75 ஓட்டங்களையும், லாதம் 58 ஓட்டங்களையும், ரோஞ்சி 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜடேஜா ஐந்து இலக்குகளையும், அஸ்வின் நான்கு இலக்குகளையும், யாதேவ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

56 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண் டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இந்திய அணி, 5 இலக்குகளை இழந்து 377 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித் தது.

அதிகபட்சமாக புஜாரா 78 ஓட்டங் களையும், முரளி விஜய் 76 ஓட்டங்களை யும், ரோகித் சர்மா ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களையும் பெற்றனர்.

434 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி, 236 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்ததையடுத்து 197 ஓட்டங்களால் வெற்றிபெற்று, மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரில் 1:0 என்று முன்னிலையில் உள்ளது இந்திய அணி.

ஆட்டநாயகனாக ஜடேஜா தெரிவானார். அவர் 92 ஓட்டங்களைக் குவித்ததுடன் 6 இலக்குகளையும் வீழ்த்தினார். (ம)

## கலைமதி – வளர்மதி இறுதியில் பலப்பரீட்சை

கரணவாய், செப். 27

கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக இரு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

அண்ணா வி.கழக மைதானத் தில் இரவு 8 மணிக்கு இடம் பெறும் 'பி' பிரிவு அணிகளுக் கான இறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழ கம் மோதவுள்ளது. தொடர்ந்து நடைபெறும் 'ஏ' பிரிவு அணி களுக்கான இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மோத வுள்ளது. (ம-108)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம் செப்27

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத் தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத் தின்மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில், இரணை மாதாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி பாரதி விளை யாட்டுக் கழக அணி மோத வுள்ளது. இரவு 9மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில், ரெட் ரேஞ்சஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அந்தோனி யார்புரம் சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

## ஆஸி. – அயர்லாந்து ஒருநாள் ஆட்டம் இன்று

ஆஸ்திரேலியா-அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவதும், கடைசியானது மான ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு இந்த ஆட்டம் நடை பெறவுள்ளது. (ம)

## மஞ்ரேக்கரின் கனவு அணி; தலைவராக டோனி தெரிவு

இந்திய அணியின் முன்னாள் வீரரான சஞ் சேய் மஞ்ரேக்கர், இதுவரை இந்திய அணி கண்டவீரர்களைவைத்து, தனதுகனவுஅணியை அறிவித்துள்ளார். அந்த அணிக்கு தலைவராக டோனியைக் குறிப்பிட்டார்.

மஞ்ரேக்கரின் அணியில் ஆரம்ப வீரர்களாக கவாஸ்கர் மற்றும் சேவாக் ஆகியோர் உள்ள னர். கங்குலி, லக்ஸ்மன், கும்ளே, கோஹ்லி ஆகி யோருக்கு மஞ்ரேக்கர் இடம்கொடுக்கவில்லை.

மஞ்ரேக்கரின் கனவு அணி – சுனில் கவாஸ்கர், விரேந்தர் சேவாக், ராகுல் ராவிட், சச்சின் ரென் டுல்கர், விஸ்வநாத், டோனி, கபில்தேவ், சகீர்கான், பின் சிங் பெடி, பிரசன்னா, சந்திரசேகர். (ம)



# யங்ஹென்றிஸ் அணி இறுதிக்கு முன்னேற்றம்

கரணவாய், செப். 27

பொலிகை பாரதியின் கால்பந்தாட்டத் தொடரில் இளவாலையங்ஹென்றிஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

பாரதியின் மைதானத்தில் நேற்று முன்தினம் இந்த அரையிறுதி ஆட்டம் நடைபெற்றது. இளவாலை யங் ஹென்றிஸ் அணியை எதிர்த்து இள வாலை யங் கம்பன்ஸ் அணி மோதி யது. ஆட்டம் ஆரம்பித்த 6 ஆவது மற்றும் 12 ஆவது நிமிடங்களில் யங்கம்பன்ஸ் அணியின் குகரதன் அடுத்தடுத்துக் கோல்களைப் பதிவு செய்தார். வேறெந்த மாற்றமும் இல் லாமல் முடிந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் யங்ஹென்றிஸ் அணியின் முன்கள வீரர் மதுசன் தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். அதற்கும் பதிலடி கொடுத்தார் யங்கம்பன்ஸின் பிரகாஸ். தற்போது 3:1 என்ற நிலை. யங்ஹென்றிஸ் அணியின் மகிபன் 35 ஆவது, 45 ஆவது நிமிடங்களில் கோல்களைப் பதிவு செய்ய 3:3 என்ற சமநிலையானது. வேறெந்த கோல்களும் பதி வாகாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலைமை. முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-108-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென். மேரிஸ், நவஜீவன்ஸ் முன்னேற்றம்

கரணவாய், செப். 27
குப்பிளான் குறிஞ்சிக் குமரனின் கால்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் நாவாந் துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று சுப்பர் 12 சுற்றுக்கு முன் னேறின.
குறிஞ்சிக்குமரனின் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. பலத்த போராட்டத்தின் பின்னர் 3:2 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது சென். மேரிஸ். (ம-108)



## கொத்மலை சொக்ஸ் கிண்ணத் தொடர் சென். பற்றிக்ஸ் அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், செப். 27
ஹமிட் அல் உசைன் கல்லூரி அணியை வீழ்த்தி கொத்மலை சொக்ஸ் கிண்ணத் தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி.
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசிய மட்டத்தில் முன்னெடுக்கும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டமொன்று கொழும்பு சிற்றி லீக் விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது. சென். பற் றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து ஹமிட் அல் உசைன் கல்லூரி அணி மோதியது. ஆட் டத்தின் 6 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தது ஹமிட் அல் உசைன் கல்லூரி அணி. முதல் பாதி நிறைவடைய 10 செக்கன் கள் மீதமிருந்தபோது முதல் பதிலடி கொடுத் தது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி.
இரண்டாம் பாதியில் கோல் கணக்கில் மாற்றங்கள் ஏற்படவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக சென். பற்றிக்ஸின் கோல் காப்பாளர் ஏ.பிரிந்தாபன் தெரிவானார். (ம-23)

## வடதாரகையிடம் வீழ்ந்தது கே.ஸி.ஸி.ஸி. வி.கழகம்

யாழ்ப்பாணம், செப். 27
இலங்கை கிரிக்கெட் சபையினால் நடத்தப்பட்டு வரும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் கே.ஸி.ஸி.ஸி. அணியை வீழ்த்தியது வவுனியா வடதாரகை அணி.
கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா வடதாரகை அணி 41.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக இளங்குமரன் 74 ஓட்டங்களையும், சுகந்தன் 45 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கே.ஸி.ஸி.ஸி. அணியின் சார்பில் ராகுலன் 3 இலக்குகளையும், சாம்பவன், சிலோஜன், ஜெயரூபன் மூவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி அணி 35.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 195 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதையடுத்து 30 ஓட்டங்களால் வெற்றிபெற்றது வவுனியா வடதாரகை அணி. பந்துவீச்சில் வடதாரகை அணியின் சார்பில் ஜசீதரன் 5 இலக்குகளையும், அகிலன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம-422-23)



## கரவெட்டி ஞானம்ஸ் சம்பியன்

கரணவாய், செப். 27
புத்தூர் எவரெஸ்ட் வி.கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.
எவரெஸ்ட் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் வதிரி சிறிமுருகன் விளையாட்டுக்கழகமும் பலப்பரீட்சை நடத்தின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரகாஸ் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் உமைசுதன் ஒரு இலக்கைக் கைப் பற்றினார்.
62 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய சிறிமுருகன் அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றதையடுத்து 13 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஞானம்ஸ் அணி. அதிகபட்சமாக டெஸ்மன் 25 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சேந்திரன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஞானம்ஸ் அணியின் பிரகாஸ் ஆட்டநாயகனாகவும், சிறிமுருகன் அணியின் டெஸ்மன் தொடராட்ட நாயகனாகவும் தெரிவாகினர். (ம-108-422)



## காயம் காரணமாக விலகினார் கிரைக்

இந்தியாவுக்கு எதிரான ஏனைய இரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலிருந்தும் நியூசிலாந்து அணியின் சுழல் பந்துவீச்சாளரான கிறைக் விலகினார்.
இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களில் நேற்று நிறைவடைந்த முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது. இதனால் அடுத்த இரு ஆட்டங்களில் வெற்றிபெற்றால் மட்டுமே நியூசிலாந்து அணியால் கிண்ணத்தைக் கைப்பற்ற முடியும். இந்த நிலையில் காயம் காரணமாக கிரைக் விலகியமை அந்த அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது. (ம)

## எவரெஸ்ட்டின் கால்பந்தாட்டத்தில் ஞானமுருகன் இறுதிக்குத் தகுதி

கரணவாய், செப். 27
புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம்.
எவரெஸ்ட்டின் மைதானத்தில் நேற்றுமுன் தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. கோல்கள் பதிவாகாமல் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் உருத்திரபுரம் அணி சந்தப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி கோலொன்றைப் பதிவுசெய்தது. அடுத்த சில நிமிடங்களிலேயே ஞானமுருகன் பதிலடி கொடுத்தது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணியினரும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குள் நுழைந்தது மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம். (ம-108)

## தேசியத்தில் கடைசி இடத்தை தவிர்ப்பதற்கு தடகளத்தில் ஐந்து தங்கப்பதக்கங்கள் தேவை

### ரவீந்திரன் தெரிவித்தார்

யாழ்ப்பாணம், செப். 27
தேசிய மட்டத்தில் வடக்கு ஒன்பதாம் நிலையிலிருந்து ஒருபடி முன்னேற்றம் காணவேண்டுமாயின் தடகளத்தில் குறைந்தது ஐந்து தங்கப் பதக் கங்கள் தேவை இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண விளையாட்டு அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன்.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற தடகளத் தொடரின் நிறைவு நாளில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். கடந்தாண்டு வடமாகாணம் பெரு விளையாட்டில் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் இரண்டு வெண்கலப் பதக்கத்தையும் தடகளப் போட்டியில் ஒரு தங்கப் பதக்கத்தையும் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றி ஐந்து பதக்கங்களுடன் 9ஆவது இடத்தில் இருந்தது. நடப்பு வருடத்தில் இதுவரை நடைபெற்றுமுடிந்த விளையாட்டுக்களின் அடிப்படையில் ஓர் தங்கப்பதக்கம், மூன்று வெள்ளிப்பதக்கம், மூன்று வெண்கலப் பதக்கம் என ஏழு பதக்கம் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கூடுதலான பதக்கங்கள் கிடைத்த போதிலும் வடக்கு மாகாணம் ஒன்பதாவது இடத்திலேயே உள்ளது. எட்டாம் இடத்துக்கு முன்னேற இன்னும் அதிக புள்ளிகள் தேவை. தடகளத்தில் குறைந்தது ஐந்து தங்கப் பதக்கங்களை வென்றால் மட்டுமே இது சாத்தியமாகு வாய்ப்பு உண்டு. எனவே. யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் 29ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 2ஆம் திகதி வரை நடைபெறவுள்ள தடகளப் போட்டிகளில் வடக்கு மாகாண வீரர்கள் தமது அதீத திறமையை வெளிக்காட்டினாலே முன்னேற்றம் காணமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் தாக்குதல் மிகவும் வலித்தது

## கோக்லி தெரிவித்தார்

காஷ்மீர் எல்லையில் உள்ள ஊரி இராணுவ முகாம் மீதான தாக்குதல் மிகவும் வலிதந்ததாக விராட் கோக்லி தெரிவித்தார். சில தினங்களுக்கு முன்னர் ஊரி இராணுவ முகாம் மீது ஆயுதக்குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 21 சிப்பாய்கள் சாவடைந்தனர். இந்தச் சம்பவத்துக்காக உலகெங்கிலும் இருந்து கண்டனங்கள் குவிந்தன. இந்த நிலையிலேயே குறித்த சம்பவம் தனக்கு வலிகளைத் தந்ததாக கோக்லி தெரிவித்தார்.

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றி பெற்றதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். ஒரு இந்தியனான என்னை ஊரி தாக்குதல் சம்பவம் மிகவும் காயப்படுத்தியது. இந்தத் தாக்குதல் என்னை மிகவும் நிலைகுலையசெய்தது. சிப்பாய்களின் குடும்பத்தினர் மனதில் என்ன தோன்றும் என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறேன் என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

**விற்பனைக்கு**

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஹயஸ் (டொல்பின்)
3L, 5L Toyota இஞ்சின்கள் விற்பனைக் குண்டு.
தொடர்பு - 077 8199479

அழகியல் டிப்ளோமா
BCBL @KU
பிரிட்டிஷ் கொலேஜிடமிருந்து
அழையுங்கள் : 021-3208342
**Diploma in Beauty Culture**
மணப்பெண் அலங்காரம், பல்வகையான விசேட முக அலங்காரம், சாறி அலங்காரம், நகம் மற்றும் தோல் பராமரிப்பு, சுகந்தி, விசேட சிகை அலங்கார முறைகள் என சுமார் 25 கையுள்ள அலங்காரங்களையும் அவற்றில் பல பிரிவுகளையும் உள்ளடக்கிய டிப்ளோமா பயிற்சி நெறி
**British College of Business and Languages**
No 788/4, செம்மணி வீதி, நல்லூர் (கிட்டுப்பூங்கா எதிரில்)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
**பிரெஞ்சு மொழி**
பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்...
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்:
யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.
இலவசம்: PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து...
செல்வோர் : யாழ், வன்னி, பிற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல படிக்கிறார்கள்.
ஆரம்பம்: 16.10.2016 உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் —> புகையிரதகடவை —> AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

**ஆசிரியர் வே.அன்பழகன் அவர்களின்**
**தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2017**
**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**
● யாழ்ப்பாணத்தில்
**அன்பொளி கல்வியகம்**
யாழ்.இந்துக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
● சாவகச்சேரியில்
**அன்பொளி கல்வி நிலையம்**
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
அனுமதிகளை **26.09.2016** திங்கட்கிழமையிலிருந்து **01.10.2016** சனிக்கிழமை வரை பிற்பகல் 3 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
குறிப்பு:- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.
சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்
- இயக்குநர்கள் -
(28422)
(11.18)

# மே.தீவுகள் – பாக். இறுதி ரி–20 இன்று



மேற்கிந்தியத் தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான ரி-20 ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முடிவடைந்த முதலிரு ஆட்டங்களில் பாகிஸ்தான் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்துள்ளது. இதனால் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் அது பாகிஸ்தானுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆனால் ரி-20 ஆட்டங்களில் உலகச் சம்பியனாக வலம் வரும் மேற்கிந்தியத் தீவுகள் வெள்ளையடிப்பைத் தவிர்க்க வேண்டுமாயின் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கௌரவச் சிக்கல் அந்த அணிக்கு ஏற்பட்டுள்ளது. (ம)

# பான் பசிபிக் கிண்ணத்தை வென்றார் வோஸ்னியாக்கி



ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற பன்னாட்டு அந்தஸ்துப் பெற்ற தொடரான பான் பசிபிக் கிண்ணத்தை கைப்பற்றினார் வோஸ்னியாக்கி.

பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. டென்மார்க் வீராங்கனை வோஸ்னியாக்கியை எதிர்த்து ஜப்பானின் நவோமி மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய வோஸ்னியாக்கி, தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் நிலைப்படுத்தி இரண்டாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். இதனால் மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வோஸ்னியாக்கி வெற்றி பெற்று சம்பியனானார். இந்த வெற்றியின் மூலம் அடுத்ததாக வெளியாகவுள்ள பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் அவர் கணிசமாக முன்னேற்றம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேலைவாய்ப்பு**

கிளிநொச்சியில் இயங்கும்
பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு
கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

**முகாமையாளர்**
* அரச அல்லது தனியார் நிறுவனத்தில் ஓய்வு பெற்றவர்கள் விரும்பத்தக்கது.

**சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்**
* சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் அவசியம்.
* மோட்டார் சைக்கிள் இருத்தல் வேண்டும்.

**பணம் வசூலிப்பவர்**
* முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களுக்கு சென்று வரக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
* சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் அவசியம்.
* மோட்டார் சைக்கிள் இருத்தல் வேண்டும்.

இன்று 27.09.2016 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 – 03.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.

உதயன் பணிமனை
காமப்போக்கு சந்தி, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.